ாவேரி

புரட்டாசி . Septem - 1954.

RAR OF BOOKS
18 OCT 1954

ஆம், இதுதான் என் திட்டம்!

ஆயிரக் கணக்கான கிராமங்களில் விளக்குகள் எரியும். தறி முதலிய இயந்திரங்கள் சுற்றிச் சுழல, மக்களெல்லாம் வளரும் கிராமக் கைத்தொழிலில் ஈடுபடுவார்கள். அனைவருக்கும் வேலை கிடைக்கும். அதிகப்படியான மின்சார சக்தி உற்பத்திக்காக நம் ஐந்து வருடத் திட்டத்தில் 127 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு ஹைட்ரோ-எலக்ட்ரிக் திட்டங்கள் நம் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சார சக்தியை மலிவாக அளிக்கும். உலகத்தில் தலை சிறந்த நாடுகளுள் நமது நாடும் ஒன்றாக விளங்க உறுதி கொண்டிருப்பதற்கு இவைகளே தக்க சான்றாகும்,

இவ்வைந்து வருடத் திட்டத்தின் பல்வேறு சாதனங்களில் லக்ஷக்கணக்கான டன் எஃகு உபயோகிக்கப்படும். ஆதலால் நம் நாட்டு மக்களின் வருங்கால வாழ்க்கையை செழிப்புறச் செய்வதில் எஃகானது எண்ணற்ற விதங்களில் ஈடுபடும்.

தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்

TN 3933

PHONE: 54 TELEGRAM 'DIAMOND'

பாக்டரி போன் No. 24
2002/A துக்காம்பாளையத்தெரு
கும்பகோணம்.

Prop. A. R. விசுவநாத செட்டியார்
ஷோரூம்: 38. – பெரிய தெரு
கும்பகோணம்.

பாரத நாட்டிலும், ஸிலோன் மலாய் நாட்டின் முக்கிய பாகங்களிலும் எங்கள் "மிதிலா" எவர்ஸில்வர் பாத்திரங்கள் ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டு உபயோகப்படுகின்றன.

218552

காவேரி

ஜய-ஹூ
மலர் 14

"சென்றிடுவீ ரெட்டுத் திக்கும் — கலைச்
செல்வங்கள் யாவும்கொணர்ந்திக்கு சேர்ப்பீர்" – பாரதியார்

புரட்டாசி
இதழ் 2

வாழ்க திருக்கொடி வாழ்கவே

புரொபஸர் **சுந்தரேசன்**

உயர்ந்து மிகும் கொடியே, — நாட்டின்
உயிரன்றோ நீயே, பணிந்தோம் முடியே.

★ ★ ★

மஞ்சளே, பச்சையே, தூவெண்மை, — கூடி
மலர்ந்தனே; என்னே நினது பேரொண்மை!
நஞ்சரை வாட்டும் திகில் நீ! — எமது
நாட்டன்னை மார்க்கப்பட்டுத் துகில் நீ. (பணிந்தோம்)

★

வீற்றசைந்தாடும் துவசமே, — நீ எம்
மெல்லியல் தாயின் இதயக் கவசமே
காற்றல்ல நின்மேல் அடிப்பது; — அன்னை
கடிநாடி யன்றோ துணிமேல் துடிப்பது? (பணிந்தோம்)

★

உயர ஓங்கிப் பறக்காய்; — மண்ணில்
உதித்தனை... மஞ்சுபோல் விண்ணில் சிறக்காய்
பயமின்றித் தெய்வம்போல் ஏறுக நீ; — ஊர்ந்து
பார்மேல் இடிகுரல் ஆங்காங்குச் சீறுக நீ (பணிந்தோம்)

யாரவன் நின்னை இழித்தோன்? — பேதை
 யாவன்அவன் நின்மாண் எழிலைப் பழித்தோன்?
மாரிக்காற்று அணையும் திசையிலே, — முகம்
 வைத்துறங்கும் நீயும்ஓர் கோபுர மயிலே. (பணிந்தோம்)

★

பொருதுன்னைச் சூறை சுழிக்குமோ? — வளி
 புயல்தான் அடித்துன்னைக் கீறிக் கிழிக்குமோ?
உருவைஅஃதோ மேலே பொறித்தோம்; — முகிலையும்
 உடன்நூற்றுச் சீர்த்தும் சிலந்தித் திறத்தோம். (பணிந்தோம்)

★

புள்ளூர்வோன் புட்கொடி ஓக்கினன்; — மற்றும்
 புனித விடையான் தூக்கினன்!
துன்னிவந்தோம் ஊழிகளாய் எந்த நெறி — அந்தத்
 தூய அசோகர் திகிரியே எம் குறி! (பணிந்தோம்)

★

அயர்விலோம் நின்தொண்டே செய்வோம்; — என்றும்
 ஆற்றும் சுறு சுறுப்பால் தென்றல்உன்மேல் பெய்வோம்
பெயர்க்கரும் எம் மான ஆடை நீ! — யாண்டும்
 பேரணியாய்த் துன்னிஎம்மை, போதராய் கூட நீ! (பணிந்தோம்)

சுகம் எங்கேயில் சாவித்திரி காதலனை எதிர் பார்த்து சோலையிலிருக்கிறாள்

இன்றைய சினிமா

எஸ், கண்ணன்

சுகம் எங்கே

ஒவ்வொரு கதாநாயகன், கதாநாயகி இவர்களின் நடிப்பை அறவே மங்கும்படி செய்து சில்லறை நடிகர்களுள் ஒருவர் பிரமாதமாக நடித்துவிடுகிறார். "மாடர்ன் தியேட்டர்ஸாரின்" "சுகம் எங்கே" என்ற படத்தில் இவ்வாறு K. R. ராமசாமி, K. சாவித்திரி இவர்களின் சாதாரண நடிப்பானது சாவித்ரியின் தகப்பனாராக வரும் K. A. தங்கவேலுவின் மிக விறுவிறுப்பானதும், கச்சிதமானதுமான நடிப்புக்கு முன்பு மங்கிவிடுகிறது.

கதாநாயகனாக நடிப்பதற்கு K. R. ராமசாமியின் தகுதிபற்றி அபிப்பிராய பேதங்கள் இருந்துவருகின்றன. பலவிதங்களில் நல்ல படமாகக் கருதப்படும் "காஞ்சனா"வில் அவரை கதாநாயகனாகத் தேர்ந்தெடுத்திருப்பதற்கு குறைகள் கூறப்பட்டன. ஜமீன்தார் பாகத்திற்கு இருக்கவேண்டிய அந்தஸ்தும், முகவெட்டும் அவரிடம் இல்லை எனப் பலர் அபிப்பிராயப்பட்டார்கள். இப்பொழுது இப்படத்தில் சுயகௌரவமும், தன் நம்பிக்கையையும் கொண்ட ஒரு ஏழைக் குடியான வாலிபனாக வருகிறார். இப்பாகத்திலும் அவர் நடிப்பு சுமார்தான்—ஒருவர் நடிப்புத் திறமையைக் கூடியவரை நன்கு சோபிக்கவைக்கும் ராம்நாத்தின் டைரக்ஷன் இப்படத்திற்கு இருந்தும்கூட,

K. சாவித்திரி சமீபத்தில் வெளிவந்துள்ள சில படங்களில் கதாநாயகியாகத் தோன்றி நல்லபெயர் எடுத்திருக்கிறார். இப்படத்தில் கூடியவரை நன்றாகவே நடித்திருக்கிறார்.

K. A. தங்கவேலுவிற்குச் சாவித்திரியின் தகப்பனாராக உள்ள பாகம் முதலிலிருந்து கடைசிவரை கதையை ஊடுவி வருகிறது. இதில் அவர் மிக அழகாக வெடுக்கெனப்பேசி கச்சிதமாக நடித்துச் சபையோரின் மகிழ்ச்சி ஆரவாரத்தைப் பெறுகிறார். இவருக்கு இருக்கும் இயற்கையான நடிப்புத் திறமையைக் கவனித்தால் ஏன் படமுதலாளிகள்

இவரை இதுவரை நன்கு பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று தோன்றுகிறது.

கதையின் அமைப்பில் சில அசம்பாவிதங்கள் தென்படுகின்றன. படத்தில் காண்பிக்கும் விதம் கடுமையான நிபந்தனைகளுடன் தோட்டவேலைக்கு ஆள் சேர்த்து, கூலிகளைக் கசையடி அடிக்கும் முதலாளிகள் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அதிலும் கதாநாயகன் வேலை செய்யும் தோட்டம் இந்தியாவிலேயே இருப்பதாக ஊகிக்கவேண்டியிருக்கிறது. படத்தில் மறைமுகமாக இருக்கும் இருக்கும் இந்த அதிசயத் தோட்டதில் வேலனைத் தவிர வேறு வேலையாட்கள் இருப்பதாகவும் தெரியவில்லை.

சாவித்திரிக்குக் கல்யாணமான பிறகும் அவள் தகப்பனுர் வீண் வம்பிற்கு அவளைக் கொடுமைப்படுத்துவது நம்பத்தகுந்ததாக இல்லை.

படத்தில் சில ரசமான பாடல்கள் இருக்கின்றன. முக்கியமாகத் தமிழ் தினசரிகளில் சாதாரணமாக யாவருக்கும் பொருத்தக்கூடிய ராசிபலன்கள் வருவதையும், ஒரேயடியாக மனதைக் குழப்பி "ஒண்ணு ரெண்டா" கேள்வி கேட்கும் குறுக்கெழுத்துப் போட்டிகள் மலிந்துவிட்டதையும் ஏளனம் செய்து இரண்டு பாட்டுக்கள் அழகாகத் தொகுக்கப்பட்டு இருக்கின்றன.

"சுகம் எங்கே"யில் சாவித்திரி

தூக்குத் தூக்கி

'தூக்குத் தூக்கி" என்றுகேட்ட உடன் பலருக்கு ஒரு தூக்கு தூக்கிப் போடலாம். இது தமிழ்நாட்டு நாடகமேடையில் ஆடப்பட்டு வந்த ஒரு நாடகம். மிகவும் பண்டைகாலத்திய சமாசாரம். ஆதலால் பலருக்கு இதன் கதை தெரியாதென்றே நினைக்கிறேன். நாடகத்தின் தலைப்பு தூக்குத் தண்டனையையும் அதை நிறைவேற்றும் பயங்கர தூதர்களையும் தான் நினைப்பூட்டும். ஆனல் உண்மையில் கேவலம் ஒரு புத்தகப் பை தூக்கும் ஆசாமியாகக் கதாநாயகன் வருவதுதான் இந்தத் தலைப்பிற்குக் காரணம் என்று தெரிந்த உடன் பலருக்குக் கொஞ்சம் 'சப்' என்று போய்விடும்.

"தூக்குத் தூக்கி' கதை ஒரு 'அத்தை பாட்டி' கதை. ராஜாகளும்: ராணிகளும் ராஜகுமாரர்களும், ராஜகுமாரிகளும், மந்திரி குமாரர்களும், மந்திரி குமாரிகளும் இம்மாதிரி

பல பேர்கள் இக்கதை யில் வந்து பார்ப் போர் மனதில் தங்களால் ஆனகுழப்பத்தை விளைவித்துப் போகிறுர்கள். மங்கள புரி அரசன், சுவர்ணபுரி அரசன், சந்திரபுரி அரசன் இம்மாதிரி பல 'புரி' அரசர்கள் அவர்கள் புடைசூழ வந்து ரசிகர்களைத் திணற அடிக்கிறுர்கள். இக்கதையில் நபர் கள் அதிகமே ஒழிய, கற்பனை மிகுந்த சம்ப வங்களோ, நாடகத்திற்கு உகந்த "ப்ளாட் டோ" கிடையாது.

இப்படிப்பட்ட தூக்குத் தூக்கிக் கதையை முதலில் "ராஜாம்பாளையும்" பிறகு "குமாஸ் தா"வையும் அளித்த அருணு பிலிம்ஸார் தமது மூன்ருவது படமாக எடுக்கிறுர்கள் என்று தெரிந்தபோது எனக்குச் சற்று அச்ச மாகவே இருந்தது. ஆனல் லலிதா, பத்மினி, ராகினி, சிவாஜி கணேசன், பாலையா ஆகிய முன்னணி நடிகர்களைக்கொண்டு படம் தயா ரிக்கப் பட்டதால் படம் நன்ருகவே அமையக் கூடும் என்று நினைக்க ஏது இருந்தது. ஆனல் நடிகர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் புக ழைத் தேடித் தராத வண்ணமாகவே படம் உருவாகி இருக்கிறது.

கதையின் முக்கிய அம்சம் ஒரு முது மொழியை நிரூபிப்பது ஆகும். 'கொண்டு வந்தால் தந்தை; கொண்டு வந்தாலும் வரா விட்டாலும் தாய்; சீர்கொண்டு வந்தால் சகோதரி; கொலையும் செய்வாள் பத்தினி; உயிர் காப்பான் தோழன்'—என்பதுதான் முதுமொழி. இதைக் கேட்ட சுந்தராங்கதன் என்னும் ஓர் ராஜகுமாரன் (சிவாஜி கணே சன்) அதன் உண்மையை முதலில் சந்தே கித்து அதைப் பரீட்சித்துப் பார்க்கும் நிமித் தம் பல சங்கடங்களுக்கு ஆளான பிறகு பழ மொழி முற்றிலும் உண்மையே என்பதைத் தெரிந்துகொள்கிறுன்.

லலிதா "கொலையும் செய்வாள் பத்தினி" என்பதை நிரூபிக்கும் சுந்தராங்கதனின் மனைவி பிரேமாவாக வருகிருள். குணத்தி லும், அழகிலும் சுந்தரனுன தன் புருஷனை வெறுத்து ஏன் இவள் ஒரு இரட்டை நாடி வயோதிக ஸேட்டைக் காதலிக்கிருள் என்பது தெரியவில்லை. ஆனல் கதையில் புருஷனை வெறுப்பதாக இருக்கின்றதே ஒழிய, லலிதா படத்தில் புருஷனுடன் பேசிப் பழகுவதில் உண்மையான வாஞ்சையே பிரதிபலிக்கிறது. ஸேட்டுடன் காதல்புரிவது ஏதோ பிறர் கட்டாயத்திற்கு நடந்து கொள்வதைப்போல் இருக்கின்றது. நல்ல குணச் சித்ர நடிகை என்று கருதப்படும் லலிதா ஏனே கதையின் கருத்திற் கேற்ப நடிக்கவில்லை,

"நமக்ராம் ஸேட்டா"க வரும் பாலையா "சகிக்கிருன் இல்லே." முதலாவதாக இந்தப் பழைய காலத்து ராஜா ராணி இளவரசன் இளவரசி கதையில் ஒரு ஸேட் மாட்டிக் கொண்டு விழிப்பது வேடிக்கையாக இருக் கிறது. இத்துடன் "வில்லன்" பாகங்களில் கைதேர்ந்த நடிப்பிற்குப் பெயர் பெற்றிருக் கும் பாலையாவின் இப்படத்தில் ஸேட்டு நடிப்பு சப்பென்றிருக்கிறது.

சிவாஜி கணேசனின் வழக்கமான எதுகை மோனை ததும்பும் குட்டிப் பிரசங்கங் களுக்குப் பதிலாக, இப்படத்தில் அவரு டைய உடை கவனத்தைக் கவரும்படி யாகச் செய்து இருக்கிறுர்கள். சிவாஜி கணேசன் மாறு வேடத்தில் அன்னிய நாட்டில் சஞ்சாரம் செய்யும்போது ஒரு (அமெரிக்காவிற்குச் சொந்தமான) சிவப்பு இந்தியன் உடையிலும், பிறகு (அரபு நாடு களுக்குச் சொந்தமான) அரேபியன் உடை யிலும் காட்சி அளிக்கிறுர். இந்தப் பழைய காலத்துத் தமிழ் நாட்டுக் கதைக்குப் பொருத்தமில்லாத இந்த உடைகளை ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்று தெரியவில்லை. சிகப்பு இந்திய உடையில் ஆடும் நடனம் நல்ல வேளையாகச் சிகப்பு இந்தியர் ஆடும் நடனம் போல் இல்லாமல் தமிழ் நாட்டுப் பாணியில் இருக்கிறது.

பத்மினி, ராகினி இவர்கள் கதையின் பின் பாகத்தில்தான் தோன்றுகிறுர்கள். இவர்களுக்குச் சில பாட்டுக்கள் பாடுவதும், சில நடனங்கள் ஆடுவதும் தவிர, கணிச மான பாகம் ஒன்றும் இல்லாததால் நடிப் பைப் பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

சுந்தராங்கதனின் அண்ணன்மார்களாக வரும் சித்ரன், விசித்ரன், (சிவதாணு, சிவசூரியன்) இவர்களின் கரடி பிடிப்பது முதலிய கோமாளிக்கூத்துக்களைத் தவிர்த்து இருந்தால் நன்ருக இருந்திருக்கும்.

ஆனல் ஒன்று, இப்படத்தில் வரும் கரடி துணிக்கரடி மாதிரி இல்லாமல் நல்ல நிஜக் கரடி மாதிரியே இருக்கிறது.

M. L. வசந்தகுமாரி, A. P. கோமளா இவர்கள் பாடி இருக்கும் சில பின்னணிப் பாடல்கள் நன்ருக அமைந்திருக்கின்றன.

சமீபத்தில் லலிதா, பத்மினி, ராகினி யார் சினிமாத் தொழிலிலிருந்து தற்காலிக மாக விலகிக்கொள்ளப் போவதாகத் தெரி வித்திருக்கிறுர்கள். ஆகவே அவர்களுடைய நேயர்கள் பலருக்கு அவர்களின் கடைசிப் படங்களில் ஒன்ருகிய "தூக்குத்தூக்கி"யைப் பார்க்க ஆவல் இருக்கலாம். M. ராதாகிருஷ் ணன் தயாரித்திருக்கும் இப்படத்தை R. M. கிருஷ்ணஸ்வாமி டைரெக்ட் செய்திருக்கிறுர்.

சினிமாக் குறிப்புகள்

ஜெமினியார் தயாரித்து இருக்கும் "பஹூத்-தின்-ஹூவே" (வெகு நாளைக்கு முன்னால்) என்ற ஒரு ஹிந்திப் படத்தை வட இந்தியாவில் வெளியிட்டு இருக்கிறார்கள். மதுபாலா, ரத்தன் குமார் முதலிய பிரபல வடநாட்டு நடிகர்கள் இப்படத்தில் அழகாக நடித்து இருக்கிறார்களாம். இதன் கதை ஜெமினியின் பழைய தெலுங்குப் படமாகிய "பாலநாகம்மா"வை ஒட்டி எழுதப்பட்டதென்று தெரிகிறது.

செப்டம்பர் மாதம் 3-ஆம் தேதி புது டில்லியில் இப்படம் வெளியிடப்பட்ட போது உதவி ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் அந்த வைபவத்திற்குத் தலைமை தாங்கிப் படத்தை மெச்சிப் பேசினார். படத் தொழிலுக்கு ஸ்ரீ வாஸன் புரிந்திருக்கும் சேவையைப் பாராட்டியதுடன் ஹிந்திப் படங்களைப் பார்ப்பதால் தமிழர்கள் சுலபத்தில் ஹிந்தி கற்க உதவியாக இருக்கும் என்று சொன்னார்.

படத்திற்கான அன்றைய தின வசூலை ஸ்ரீ வாஸன் வெள்ள நிவாரண நிதிக்காக அளித்தார்.

ஜெமினி ஸ்டுடியோஸார் இப்பொழுது 'நீலவேணி" என்னும் படத்தைக் குறுகிய காலத்தில் தயாரிக்கப் போகிறார்கள் என்று தெரிகிறது. இதன் கதை கொத்தமங்கலம் சுப்புவால் எழுதப்பட்டு சமீப காலத்தில் ரேடியோவில் நாடகமாக நடிக்கப்பட்டது.

வடுவூர் துரைசாமி அய்யங்காரின் பிரபல நாவலாகிய "மேனகா"வை, "தூக்குத் தூக்கி"யை வெளியிட்டிருக்கும் அருணா பிலிம்சார் தமது அடுத்த படமாகத் தயாரிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. இதில் சிவாஜி கணேசன், T. K. ராமச்சந்திரன் முதலியோர் நடிக்கலாம்.

டெக்னிஷியன்களின் படம்

தென்னிந்திய சினிமா டெக்னிஷியன்களால் ஒரு புதுப் பிலிம் கம்பெனி நிறுவப்பட்டிருக்கிறது. அவர்களுடைய முதல் படத்திற்கு மாதுரியும், மனோஹரும் ஏற்பாடு செய்யப்படலாம் என்று தெரிகிறது. சங்கத்திற்கு முன்பு தலைமை தாங்கிய K. ராம்நாத் படத்தை டைரக்ட் செய்யலாம்.

முற்றிலும் பெண்கள் படம்

பிரபல ஹிந்தி நடிகரும் R. K. பிலிம்ஸ் சொந்தக்காரருமாகிய ராஜ்கபூர் ஆண்களே இல்லாத ஒரு படத்தைத் தயாரிக்கப் போகிறாராம். இப்படத்தில் முடிசூடா ராணியாகிய நர்கிஸூம், "பூட் பாலிஷில்" மனதை உருக்கும்படி நடித்த பேபி நாஸூம் நடிப்பார்கள்.

கணவனே கண்கண்ட தெய்வம்

நாராயணன் கம்பெனியார் இப்பொழுது "கணவனே கண்கண்ட தெய்வம்" என்னும் சமூகப் படத்தை வாஹினி ஸ்டுடியோவில் தயாரித்து வருகிறார்கள். இதில் ஜெமினி கணேசன், அஞ்சலிதேவி, நாகையா, M. N. நம்பியார், பிரண்டு ராமசாமி இவர்கள் நடிக்கிறார்கள். படம் அடுத்த ஏப்ரல் மாதம் வெளிவரும் என்று தெரிகிறது.



காதலித் தங்கை!

இதயன்

இந்த உலகத்துக் கண்ணிலே "எக்ஸ்ரேயும்" வாயிலே ஒலிபரப்பியும் கிடக்கிறபோது, எங்களுடைய 'சிஸ்டர்-பிரதர்' ரகசியம் அம்பலமாகாமல் தப்புமா?

ஒரு பெண்ணைப் பார்த்து மூச்சுக்கு மூணு 'சிஸ்டர்' போடலாம். 3000 போட்டால்...? விபரீதந்தான்! 'சிஸ்டர்' அமோகமாகப் புழங்கப்படும் ஆஸ்பத்திரியிலேயே எங்களுடைய 'சிஸ்டர்–பிரதர்' முகமூடி, உலகத்துக்கு இடப்பட்ட திரைகிழிந்து போனது. வெளியிலே சொல்ல வேண்டியதில்லை.

உலகத்துக்கு உடன் பிறப்பையும் தெரியும்; கணவன் மனைவியையும் தெரியும்; கள்ளக்காதலர்களையும் தெரியும், தனக்குத் தானே தட்டாமாலை சுற்றினாலும் அதுக்கு மயக்கமில்லை, காதல் கிறுக்கத்தில், மனிதர்களுக்குத்தான், அது மயங்கிக் கிடக்கிறதாகப் பிரமை.

உலகத்துப் பழிக்கு நாங்கள் ஆளானோம்.

அவரோ வாலாயம்போல வந்து கொண்டிருந்தார், போய்க் கொண்டிருந்தார். ஒரு குழந்தை மாதிரி, தாயின் மடி தவழ அது அலையாய் ஓடி வருவதுபோல, அன்புக்காக, என் மடி தவழ வருகிறவரை நான் மறிப்பேனா? அது கிடக்கட்டும் உலகம்; நான் தடுப்பது எப்படி?

வருவதென்றால் நிர்மலன் காற்று மழை பிரளயத்தைக்கூடப் பார்க்கமாட்டார்.

ஆசைக்கும் மோகத்துக்கும் வயசைக் கொடுத்தவர்கள் 60 நாள் 30 நாள் என்று கணித்து விட்டார்கள், அது 60 யுகம் 30 யுகம் என்று கிடக்க வேண்டும் என்பது என் ஆசை, என் ஆசை படுகொலைதான் ஆனது. ஆனால் அது ஆசை குறைந்ததால் அல்ல, அன்பு குறைந்ததால் அல்ல.

ஆண்–பெண் 'சோஷியலாக' பழகுவது நாகரிகஅடிப்படை விதியாக, வேண்டுமானால் இருக்கலாம்' அதாவது சோதரி சோதர பாவத்தில் பழகுவது. ஆனால் அந்தச் சினேகம் அப்படியே 'அடித்துப் போட்டமாதிரி' கிடப்பதில்லை. பள்ளிப் பிள்ளைகளுக்குப் பாடபோதனையாக உள்ள இது, ஒருநாள் இறுகி உடல் தேவையில் வந்து முடிகிறது. உலகம் சாடை பேசுகிறதற்கு உற்சாகமான விஷயம்.

'சோஷியல்' மோஸ்தரில்தான் எங்கள் சினேகமும் ஊற்றெடுத்தது. அது சுரந்து வெள்ளக்காடான தறுவாயில் எங்கோ போய் முடிந்து கிடந்தது......

என்றும்போல ஒருநாள் நான் பஸ்ஸில் ஏறுகிறேன், அவர் எழுந்து நின்று இடம்

விடுகிறார். "வந்தனம்" என்கின்றன என் விழிகள்.

வீடு மீளப் பஸ்ஸுக்கு நிற்கிறேன். அங்கும் அவர்! "சிஸ்டர், உங்கள் கை குட்டை" என்கிறார். குனிந்து எடுத்துக்கொள்ளுகிறேன். சோர்வு அவ்வளவு. அது கை சோர்ந்ததே தெரியவில்லை.

பஸ்ஸில், நான் நீட்டின 8 அணு செல்லவில்லை. அப்படியாகவேண்டுமென்று சாபமிட்டவர்போல வும், அதற்கு விமோசனம் அவரே தருகிறவர் போலவும், எனக்கும் சேர்த்து டிக்கட் வாங்கி விடுகிறார்.

என்ன கண்ணியம், மதிப்பு, மரியாதை பெண் களிடம்! என் பூரிப்பில் ஒரு அவஸ்தை.

மறுதினம் சில்லறையைக் கொடுத்து விடுகி றேன். "வந்தனம் சிஸ்டர்" என்கிறார் அவர்.

இன்னொரு நாள் ஆஸ்பத்திரிக்கே வந்துவிடு கிறார். "சிஸ்டர் S வார்ட் எது?" என்று கேட் கிறார்.

'அது V D வார்ட் ஆச்சே' என்று நின்று நான் யோசிக்கிறேன்.

"சிஸ்டர், என் அத்தை இருக்கிறுங்கள்" என்ற படியே அவர், என்னோடு இணையாக நடந்து வரு கிறார். வராந்தா, தெற்கு வடலாக நீண்டு வந்தது. வளைந்து திரும்பிச் செல்லுகிற மூலையில், மாடிப்படியில் ஏற, காலை வைக்கிறேன். அவர் ஒரு பெரிய தச்சப்பட்டரையில் 'போர்மேன்'. ஆகவே சொல்லி வைத்தால் மலிவான விலையில் கட்டில் கிடைக்குமே. "ஒரு விஷயம் பேசணும்" வர்றேன் இருங்க," என்றேன்.

"'எஸ் சிஸ்டர்,' அந்த வார்ட் R" கவனம் வந்து விட்டது போலும் அவருக்கு.

இந்த இடத்தில் எனக்கு அவர் மீது ஒரு கண்ணியம் பிறக்கிறது. உண்மையில் தன் அத்தையைப் பார்க்க வந்திருக்கிறார் அல்லவா?

குறும்புக்காரி வில்லி குறுக்கிடுகிறாள். "தெரி யும்-டி" என்கிறாள்.

"ஓ! 'பிரதர்-டி'" என்கிறேன்.

கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக்கொண்டு திரிகிறார்கள்—பாழாய்ப் போனவர்கள்!

அந்த அத்தை சுகமடைந்து சென்றுகிவிட்டது. கட்டிலையும் நான் வாங்கிவிட்டேன். அதை, 'பழ சாகவும்' அடித்துவிட்டேன். காலம் பறப்பதின் அறிகுறி இது.

ஒரு நாள் இரவு 7 மணி வரை பஸ்ஸைக் காணோம். இன்னும் ஓர் அரைமணி நேரம் காக்கி றோம்—ஏமாற, தவம் செய்கிறோம். மந்திரம்—பஸ் காரனைச் சபிப்பது. எல்லாரும் ஓர் அபேதமாக, அபேதவாத நாட்டில் நடக்கும் முறையில் சர்க் காரே பஸ்களை ஏற்று நடத்த வேண்டுமென்று அடித்துப் பிய்த்து ஏகமனதாகத் தீர்மானிக் கிறோம். ஆவிதான் மிஞ்சுகிறது. பஸ்ஸைக் காணோம்.

"'நடராஜா சர்வீஸ்தான்' இனிமே" என்று நிர்மலன் என்னைப் பார்க்கிறார்.

எனக்கு அவர் கேட்கவேண்டு மென்றுதான். உடனே கிளம்பி விடுகிறேன்.

நான் ஒரு நர்ஸ். அந்தச் சேவையை, என்னை அவர் மெச்சிப் புகழ்ந்ததிலேயே வழி மாறுகிறது.

வ. உ. சி. சதுக்கம் வந்ததுகூடத் தெரிய வில்லை. புகழ் என்றால் யாருக்கும் தலை கனக்குந்தான்; எனக்கும் பரவசந்தான். ஆனால் நிர்மலன் நிறை யக் கொட்டி விட்ட 'சிஸ்டர்' எனக்கு என்னவோ போலப் பட்டது. 'உங்களுக்குக் கோடி புண்ணி யம்' உங்க சிஸ்டருக்குத்தான்,, என்கிறேன்.

"இந்த உலகத்துக்குத்தான் அது" என்கிறார் அவர்.

அ-ம்-மா...! அவர் என் மனசைப் புரிந்து கொண்டார். போதும் அது!

வானம் முழங்கி இடி இடித்தது. அதன் ஆர்ப் பாட்டத்தை ஆரம்பத்திலிருந்தே கண்டு, நடை யை முடுக்கி யிராவிட்டால், வீட்டு நிலையை மிதிப் பதற்குமுன்பே நாங்கள் தெப்பமாகிஇருப்போம்.

"நீங்க இங்கேயே தங்கிவிடுங்க" காற்று சாரலை எனக்காக வாரிவிட்டது—சற்று ஒதுங்கியவளை அவர்மீது உராய வைத்து விடுகிறது. மேனி சிலிர்க்கிறது. "வாங்க, குளுருது" என்றபடியே சற்றுச் சிவந்து, வாசற்கதவை, அதைத் திறக்க வேண்டிய சூத்திரத்தைப் பிரயோகித்துத் திறக்கி றேன். அதாவது அதுஒரு 'டெக்னிக்' என்கிறேன்.

சின்ன வீடு என் வீடு. ஒரு பாட்டி அதன் சொந்தக்காரர். எனக்கு அவர், நான் அவருக்குத் துணை.

"யாருடாப்பா குழந்தை?" என்று குசலம் விசாரிக்க வந்து விடுகிறாள்—படுத்துக் கிடந்த பாட்டி.

"ராணிக்கு அண்ணன் ஆயா. அது எனக்குத் தொத்தா மக" திறமையாகப் பதில் அளிக்கிறார் நிர்மலன்.

"பேரு என்ன குழந்தை? என்னவேலை பண்றே. குழந்தை குட்டி எத்தினி தம்பி? பல கேள்விகள் பாட்டியிடமிருந்து கிளம்புகின்றன.

"பேரு நிர்மலன். கலியாணமாகலை. தங்கச்சி மாருக்கெல்லாம் நடந்துடட்டும்" பாட்டியின் கேள்விக்குப் பதில் எப்படி?

"சொன்னுப்பலே. அதாண்டா ராசா முக்கியம். சமைஞ்ச பொங்க ஜாடியிலே இருக்க, ஊறுகாய் ரொம்ப காலம் கிடந்தா பூஞ்சான் பூத்துப் போகும்." பாட்டிக்கு ஏக கவலே!

அரை மணிக்கெல்லாம் ஒரு சாதம் வடித்து ஒரு சாறை வைத்து, அப்பளம் பொறித்து விடுகிறேன். மத்தியானம் மிகுந்த காய்கறி கொஞ்சம் இருந்தது. 'நிர்மலன் எழுந்திருங்க சாப்பிட.'

ஒரு பிசகு இங்கே பண்ணிவிடுகிறது என் மறதி. பாட்டி, 'என்ன பொண்ணு இது?— பெரியவன் சின்னவ'னு காணலியே?' என்று கேட்டுவிடுவது, என் பாட்டைத் தாளித்து விடுகிறது. சாப்பாடு நடக்கிறது.

ஒரு வாய் போட்டபடியே, 'நீ நடமாடும் கண்காட்சி, ராணி! ஆயா தப்பாக சொன்னது' என்கிருர் நிர்மலன்.

நான் கனிந்து விடுகிறேன்!

அடம் சாதித்து அழும் பிள்ளை மாதிரி, மழை ஓயாது சோனுமாரியாகப் பெய்கிறது.

நிசி!

தூரத்துத் தவளை இரைச்சலும், அருகில் சுவர் பூச்சியின் இடைவிடாத ரீங்காரமும் என் தூக்கத்தைப் பாழடிக்கவில்லை. அதனுல் தான் இவைகளை உணர முடிகிறது. புரண்டு புரண்டு படுக்கை அலங்கோலமான நிலையில்! உடல் வியர்க்கிறது. மனசு கிடந்து தவிக்கிறது சின்ன சிம்னி விளக்கைப் பார்வை ஏறப் பார்க்கிறது. அசையாது அலங்காது, அது சிறுக எரிகிறது. நிட்டையில் லயித்து, சின்முத்திரை தரித்து, மனசை ஒரு வழி நிறுத்தும் யோகியாய் அது காணுகிறது. இந்த 'ஜடம்' கிடந்து உழலுவது கண்டு அது மோன நகைப்பைச் சிந்துகிறது.

விளக்கை அணைத்துவிட்டால்...? எழுந்து அணைத்து விடுகிறேன். அ-ப்-பா...! கும்மிருளில் சரீரம் தெரியாது கிடப்பதே ஓர் இன்ப சுகம்.

"ராணி, கொஞ்சம் தண்ணி."

ஐயோ எத்தனை தாகமோ? விளக்கை ஏற்றுகிறேன். டம்ளரை அவரிடம் நீட்டுகிறேன் கதவைத் திறந்து. நடுங்குகிறது என் கரங்கள். அதிருகிறது உள்ளம். 'நிர்மலன்! நீங்க 'பிரதர்'; நான் 'சிஸ்டர்'" என்று உளறிக் கொட்டிக் கதவை சாத்திக்கொள்ளுகிறேன். ஏன் அந்தப் பயம்?

ஒரு நெடிய பெருமூச்சுக் கேட்கிறது.

அவர் கண்களில் நெருப்பு சிவந்ததே!

படுக்கையில் வந்து விழுகிறேன். ஓர் ஏமாற்றம்! எனக்கேன் கோழை மனசு...? எனக்கேன் கோழை மனசு...? நான் ஏன் பெண்ணுகப் பிறந்தேன்...? என் தவிப்பை நொறுக்க, இறுக்கிக் கொண்டும், இதயதாபம் ஒடுங்கவில்லை. குமுறிக் குமைந்து அழுதுவிடுகிறேன்.

தாலுக்கா கச்சேரி மணியோசை கேட்கிறது. ஒன்று...ரெண்டு...

அதற்குமேல் அது அடிக்கவில்லை.

அது, ரெண்டு ...மூணு... நாலு... ஐந்து... என்று ஒலித்திருந்தால் என் விடிவுபோல் பொழுதும் விடிந்து விட்டிருக்குமே!

"ராணி......"

கூப்பிடுவது அவரா...? என் மனக் கற்பனையா...?

எழுந்து போய் கதவைத் திறந்து பார்க்கிறேன். ஒன்றும் தெரியவில்லை. பயங்கர மோனம். என் மனசைப்போல இருள். மழை ஓய்ந்து கிடக்கிறது.

ஒரு மின்னல்!

ஆ... என் ஓரத்தில், பக்கத்தில் நிர்மலன்!

"நிர்மலன்...!"

"ராணி...!"

என்னை அவர் ஒரே அணைப்பால் விழுங்கிக் கொள்ளுகிருர். இருள் எங்களை விழுங்கிக் கொள்ளுகிறது.

அதரங்கள் கலந்து முத்த ஒலி எழுகிறது.

"'பிரதர்–சிஸ்டர்' கொலையான பாதகத்தைக்கண்டு கெக்கலிப்பது போல இருந்தது அது!"

* * * *

"என்ன குழந்தை? அவன் நிசமா உன் அண்ணு?"

ஊர் பழிப்பைப் பாட்டி வெளியிடுகிருள். 'ஊர் 900 சொல்லும்" என்று எரிந்து பொரிந்தபடி ஆஸ்பத்திரிக்குக் கிளம்புகிறேன்.

"எனக்கு இது ஒன்றும் புடிக்கலே குழந்தை" என்கிருள் பாட்டி.

அன்று என் பெயருக்கு ஒரு கடிதம் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தது. பக்கத்தில் கிடந்த தங்கம், "யாருடி அது 'மை டியர் சிஸ்டர்' என்று எழுதியிருக்கான்?" என்கிருள், கடிதத்தில் நோட்டம் பாய்ச்சியபடி.

சே.........ஏன் இப்படி இவர்கள் தனிப்பட்டவர்கள் விவகாரத்திலே வந்து மோதுகிருர்கள்?

எதையும் சட்டை பண்ணவில்லே, நிர்மலன்! அவர் வந்துகொண்டே இருந்தார், போய்க் கொண்டே இருந்தார்! முழுக்க ஒரு வருஷம் ஓடியிருக்கிறது-ஓடிவிட்டது.

17—5—37ல், கடைசி தடவையாக அவர் வந்தபோது, கைத்தறிச் சேலே, கெட்டிகரை சரிகை போட்டது, வாங்கி வந்தார்-என் மேனிக்கு எடுப்பான நிறத்தில்.

* * * *

16 வருஷங்கள் முழுசாக 2½ மாதங்கள்தான் மிச்சம்.

8 குழந்தைகளுக்குத் தாயாக ஓர் இந்தியத்தாய் எடுத்துக்கொள்ளுகிற சராசரி அவகாசந்தான் எனக்கும் ஆகியிருக்கிறது. சாபமிட்டமாதிரி எல்லாம் ஆண்கள்! என் நர்ஸ் படிப்பு, பயிற்சி, அனுபவம் எல்லாம், குடும்பத்துக்கே சரி கட்டி வராத நிலேயில் நான் எங்கே தொழில் பண்ணுவது?

என் கணவர் தங்கம் என்ருல் தங்கம், அன்புக் களஞ்சியம். ஒரு திறமையான பந்தாட்டக்காரர். 'நைன்சுக்கு' (பந்தாட்டத்துக்கு 9 பேர் அமைந்த குழு) இன்னும் ஒன்று ஆணைப்பெத்து விடவேணுமாம் அவருக்கு! ஏழு ஆனபோதே, 'Enough for Sevens! Congradulation! Stop! (எழுவர் குழுவுக்குப் போதும். மகிழ்ச்சி! நிறுத்துக பிள்ளேகளே!) என்று தந்தி தந்தவர்கள், அவருடைய அருமையான தோழர்கள்!

எனக்குப் பெண்ணில்லாத குறை!

குறையைக் கொஞ்சம் ஒதுக்கி வைத்துவிட்டு, வடையைத் தட்டி வாணலியிலிட்டேன். குஞ்சு வந்து வாசற்படியண்டை நின்ருன், வடையின் மோப்பம் பிடித்து வந்தவன், அதற்கல்ல என் பதுபோல மழலேயாடிஞன். 'மாமா... ஆ... ஊ...' என்று உளறிஞன்.

"எங்கேடா படவா?"

வாசற்புறமாக ஓடுகிறேன். காலில் வயசுக்கு மீறிய ஒரு துள்ளல்—மனசை இன்னும் வயசு பீடிக்காததால்!

ஆ... வெளியே நிர்மலன்...!

"நிர்மலன்...!"

"ராணி"

15½ வருஷங்களுக்கப்பால்... என் வீட்டு வாசலில் நிர்மலன்! ஆம், நிர்மலன்தான்!!

அதே சந்திரகாந்த வதனம். கட்டான நெற்றி. தெறிக்கும் பார்வையை எந்நேரமும் அள்ளி வீசும் லாகிரி ஊட்டும் கண்கள். இப்போது அதிலே சொட்டுகிறது கனிவு? பெண்ணின் கீற்றுப்போல, ஆனுல் கருமையும் முரடுமேற்ற மயிர் செறிவான புருவம். சற்று-சற்றேதான் ஒட்டிய கன்னங்கள், உறுதியானது. பாண்டியன் பட்டத்து வாளேப்போல ஒதுக்கிவிட்ட மீசை. தலே, வழக்கப்படியே கலேந்த தலே. அதே ஆண் சிங்க எடுப்பு, நிமிர்வு!—எனினும் மென்மை தண்மை நிறைந்தது நடையுடை பாவனே. முன்பு விட நிர்மலன் பொலிவு அனுபவத்தால் பூத்திருக்கிறது.

மல் வேஷ்டி. பட்டு உருமால். முக்கால் கைவரை மடித்துக் கிடக்கப்படும் முழுக்கைப் பட்டு ஷர்ட். ரிஸ்ட்வாச்...

நிர்மலன் ஒவ்வொரு அம்சமாகக் கண்ணில் பட்டு என் முன் காட்சியாய் விரிந்தார்.

அவர் சுட்டு விரலேப்பற்றிக்கொண்டு ஒரு பாப்பா-அவள் அம்மா கவனத்தோடு செய்து விட்ட எளிய அலங்காரத்தோடு. குழந்தையின் போஷாக்கு ஒளி விட்டது.

அலேயாகப் பாய்ந்துபோய்க் குழந்தையை அள்ளி வாரி மார்போடு இறுகி, இறுகி அணேத்து முத்தமிடுகிறேன். மூச்சுத் திணறியது குழந்தை. கண்களில் ஆனந்த வெள்ளத்துக்கு மதகு திறக்கப்பட்டு விடுகிறது. அவர் மட்டும் அந்தக் குஞ்சுவைக் கூட்டி வந்திரா விட்டால், என் உணர்ச்சியைக் கொட்டப் பாத்திரம் கிடைக்காது பெரும் பித்தியாகி விட்டிருப்பேன்!

உணர்ச்சியின் குவியலாய் நிர்மலன் நிற்கிருர். நிற்பதிலேயே ஒரு 'பிகு' தோற்றுகிறது.

'சௌக்கியந்தானு?'

புலன்களே அது நினேவுக்கு இழுத்து வந்து கட்டுகிறது அந்தக் குசலம்.

கண்ணீர் ஊற்றை ஒற்றிக்கொண்டே 'சௌக்கியந்தான்' என்கிறேன் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டு.

"உன்னேப் பார்க்கவேண்டுமென்று துடித்தது."

பெருமூச்சு ஒன்றுதான் எனது பதில்.

"அம்மா வடை தீய்ஞ்சு போச்சி" என்று ஒரு குமாரன் ஓடி வருகிருன். வடை மீது அவன் கவனம்!

நான் அதை இறக்கிப் போட்டுவிட்டு வருகிறேன். 'அண்ணி' சௌக்கியந்தானே?

"சௌக்கியமாக இருக்கிறது...'மைத்துனர்'—உன் புருஷர்?"

"சௌக்கியமாக இருக்கிருர்."

இரண்டு பேரும், மவுனத்தில் ஆழ்ந்து விடுகிறோம். கண்கள்தான் துடித்துப் பேசுகின்றன.

வாய் திறந்து, 'எழுந்திருங்கள் சாப்பிடலாம்" என்கிறேன்.

"என் வயிறு, மனசு, ஆத்மா எல்லாம் குளிர்ந்து போச்சு ராணி!"

"அது உங்களுக்கு மட்டுந்தானு?" என்று என் மனசு கேட்டுக் கொள்ளுகிறது.

தண்ணீர் தருகிறேன் கை கால் அலம்ப. 'தண்ணீர் தாகம்' என்று அன்றிரவு நடந்தது... மனசு பிறழ்ந்தாலும் தர்மத்துக்குக் கட்டுப்பட்டுச் செய்கை நிகழ்கிறது—ஒவ்வொன்ருக, அதாவது செம்பைத் திருப்பித் தருகிருர்; வாங்கி வைக்கிறேன். இந்த ஓரங்க மவுன நாடகத்தில், விரலின் நுனிகள்கூட உராய வில்லை. பாவம்! இத்தனைக்கும் இடையில் அந்தப் பாப்பா ஒன்றுதான் என் உணர்ச்சிகளுக்குத் 'தணிவாகி' விடுகிருள். அதனுல்தான் என் மனசு ஒரு சாந்தி பெறுகிறது.

அவருக்கு வட்டிக்கிறேன். மனசு அக்குத் தொக்கு இல்லாமல் அலை பாய்கிறது, பாப்பாவை மடிமேலிட்டுக்கொண்டு ஒரு வாய் ஊட்டுகிறேன். அடங்குகிறது மனசு.

"இவ பெயர் ராணி!" என்கிருர் நிர்மலன் தம் மகளின் முதுகைத் தட்டிவிட்டு.

என் ஞாபகார்த்தமாக அந்தப் பெயர். மனம் பேதலிக்கிறது எனக்கு. சமாளித்தபடியே, 'அவ அம்மாவுக்குப் பெயர் பிடிச்சு இருந்ததா?" என்கிறேன்.

"ராணியை உனக்கு நிறையப் பிடிச்சுவிட்டது."

அவர் எந்தக் கருத்தில் சொல்லுகிருரோ? என் மனத்துடிப்பை அறிந்துதான் பேசுகிருரோ, குழந்தையை அணைத்துக் கொஞ்சுவதை நிறுத்துகிறேன். ஒருவேளை, அப்படிக் கொஞ்சுவது அவருக்குச் சகிக்கவில்லையோ? எனக்குப் பெண்ணே இல்லை" என்று மீண்டும் சமாளித்துக்கொள்ளுகிறேன்.

"எத்தனை குழந்தைங்க?... எனக்கு ரெண்டு பெண்ணு, ஒன்னு ஆண்! உன் 'அண்ணி' மகா சிக்கனக்காரி. 16 வருஷத்திற்கு $\frac{1}{4}$ டசன்தான்!" என்று நிர்மலன் விகடமாக அடிக்கிருர்.

"இங்கே நேர் விரோதம், அஷ்ட புத்திரர்கள்!" என்று வார்த்தைக்கு ஒலியைச் சற்று அமுக்கிவிடுகிறேன்.

ஏக மவுனம். அவர் பொருமைப்பட்டிருக்கிருர். இந்தப் பாக்கியம் தனக்குக் கிட்டி இருக்கவேண்டிய ஒன்னு என்னும் நினைப்பா?

மெல்ல, "ம்...'மைத்துனர்' எப்படி?" என்கிருர்.

"எல்லாம் நீங்கள்தான்!" வெடுக்கென்று என் பதில் ஓடுகிறது. ஒரு, ஓர் ஆண்டு சாவகாசத்தில் அறிந்து வைத்திருந்த நிர்மலனை மறந்துவிட முடியுமா, என்ன? 'ஒரே ரகம்தான்!' என்று தலையை வளைக்கிறேன்.

"எதிலே"

"எங்க உயிரை வாங்கறதிலே!"

"உயிரை எடுக்கிருேமா?"

"பின்னே? 8 குழந்தைங்க ஆனு, எங்க தேகம் எதுவுக்கு ஆவறது?"

"கொடுத்து வைச்சவர்—பாக்கியசாலி!" என்று ஒரு பெருமூச்சுக் கிளம்புகிறது. நிர்மலன் நன்ருகப் பொருமைக்களமாகி விட்டார்! என்னைப் பற்றிப் பேசி அவர் மனசை உளைக்கக்கூடாது என்ற என் தீர்மானம் பேச்சைத் திசை மாற்றிற்று. "'அண்ணியை' பத்தி சொல்லுங்க," என்கிறேன்.

"அடக்கமான பசு!"

"அழகா...?"

"நல்ல அழகி!"

"சிகப்பா...?"

"சிகப்புத்தான்!"

"என் சிகப்பு?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது." அவர் இலையைவிட்டு எழுந்து விடுகிருர்.

போதும், அவர் சொல்ல வேண்டியதில்லை அவள் என்னைவிடச் சிகப்புதான். என் மனசு பற்றி எரிகிறது.

கை கழுவப் போனவர் சற்று நின்று, 'ஆஹ, உன்னண்டை காணுகிற 'இழுத் தடிப்பு' பாரதி கிட்டே இல்லே'' என்கிறார். 'அதை எல்லாமா கவனத்திலே வைத்துக் கொண்டிருப்பார்கள்?' என்றபடியே நான் 'பாரதி! நல்ல படிந்த பெண்தான்!!' என்று உள்ளுக்குள் வெம்புகிறேன்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு என் மனக் கனம் குறைகிறது. அறிவு நிலைமையை உணர்த் தினது. எந்தக் காலத்தில், யார் மீது-யாரோ அந்தப் பாக்கியவதி 'பாரதி' மீது-யார் போய் பொறாமைப் படுகிறது? **பெண் உள்ளமே பெண் உள்ளம்!**

என் 'அதிதி உபசரணையில்' அபசாரம்! இந்தப் பாழும் மனசாலே ஏற்பட்டுவிடுகிறது. உடனே அதை உணர்ந்து, நிர்மலனுக்கு வெற்றிலை கொண்டு போய் வைக்கிறேன். சாப்பிட்டதும் போடும் பழக்கம் உடையவர் அவர். நல்ல காலம்—ஞாபகம் என் மன அவசரத்திலும் இடித்தது!

"மைத்துனர் பெயரைச் சொல்லலையே—கேக்க மறந்து போச்சு?'' என்று வெற்றிலையைத் துடையில் தீட்டிக்கொள்ளுகிறார் நிர்மலன்.

"சந்திரநாதன்! ரயில்வேயில் வேலை'' என் கிறேன்.

"சந்திரநாதன் சாப்பாட்டுக்கு வரலையே."

"அவருக்கு போய்விடுகிறது."

"இத்தோடு ராத்தரிக்கு தான்..."

"ஆமாம்...இந்தாங்க..." ஒன்றுமில்லை அது—பல் குத்த குச்சி. சாப்பிட்டதும் பல்லை கிண்டு வது அவர்பழக்கம்.

வாங்கிக் கொள்ளுகிறார் அதை. உள்ளப் பர வசத்தால் அந்தச் சந்திரகாந்த வதனம் பரிமளிக் கிறது.

பாக்கை மெல்லுகிறது, நரம்பு கீறுகிறது, சுண்ணும்பு தடவுகிறது, மடிக்கிறது, வெற்றி லையை வாயில் திணிக்கிறது, அதை ஒதுக்கிக் கொள்ளுகிறது......எல்லாம் பழைய நிர்மல னையே என் முன் கொலு வைத்திருக்கிறது.

பள்ளி போன பாலர்கள் வந்தாகி விட்டது. திருக்குமாரர்கள்! அறையில் ஒரு புதியவரைக் கண்டதில், ஒரே விசாரிப்பு.

"அவர் ஒரு மாமாடா" என்கிறேன்.

"நீ கதை சொல்லுவியே, ஓடிப்போன ஒரு மாமாவைப் பத்தி, அந்த மாமாவா?'' என்று கேட்கின்றனர்.

என் மக்களுக்கு அதை ஒரு கதையாகச் சொல்லி ஒரு மன ஆறுதலைப் பெற்று வந்தவள் நான். 'ஆமாண்டா...அந்த மாமா காதிலே விழுந்தூடப் போவுது' என்கிறேன்.

ஒருவனை நிர்மலன் முன்னுடி விட்டு, 'உங்க பெயரை வச்சிருக்கேன்—மச்சானுக்கு!' என்கி றேன்.

"மகராணிக்கு ஜோடிதான்!'' என்ற நிர்மலன்; குழந்தைகளைக் கொஞ்சும் வழக்கமில்லாதவர், விதிக்கு விலக்காக, அவனை அணைத்து மாறி மாறி நாலைந்து முத்தம் பொழிந்து விடுகிறார். அணைத்து ஆனந்த பரவசமாகி விடுகிறார். என் நிலைமை ஓர் அவஸ்தைக்கு உள்ளாகி விடுகிறது. அப்போது தான் ஒன்றை உணர முடிந்தது—குழந்தை ராணியை நான் ஆர அணைத்து மகிழ்ந் தது, அவருக்கு எத்தனை துடிப்பைத் தந்திருக் கும்? என் குலாவல் அவருக்குச் சகிக்கவில்லை போலும் என்று, நான் கொண்டது மாறினது.

சாப்பாட்டுக் கடை முடிந்தது. பள்ளிக்கு அனைவரும் சென்றனர். மற்றவைகளையும் தூங்கப் பண்ணினேன். ராணியும் உறங்கினாள். மழை விட்டது போல் கிடந்தது.

மணி ஒன்று, பத்து.

ஒரு பாயை விரித்து நிர்மலன் முன் வந்து உட்கார்ந்தேன். அவர் ஈசி சேரில் சாய்ந்து கிடக்கிறார்.

"நான் சாயங்காலம் கிளம்புகிறேன். வண்டி 4-10-க்கு."

"கிளம்புவீர்கள்? 'அவரை'கூட பார்க்க வில்லை."

"ராத்திரி தங்கறது உசிதமில்லை."

"பாரதி ஒன்னும் கோவிச்சிக்காது!"

"பாரதி இங்கே ஏது? பம்பாயில்!"

"பம்பாய்க்காரி தானு?"

"சொந்தந்தான்! கடந்த 10, 15 வருஷமா என் நிலைப்பு அங்கேயே ஆகிப்போச்சு. அங்கே தமிழ்ப் படிப்புக்கு வகை இல்லே. அதுக்கோசரம் குழந்தைகளை இங்கே, தாத்தாவிடம் இட்டு வந்தேன்."

"பாரதியை பாக்கறது அவ்வளவுதான்" என்று மனசில் நிலைமையை நான் சலித்துக் கொள்ளுகிறேன்.

" உன் புருஷனிடம் என்னை என்ன சொல்லப் போறே?"

"அண்ணன்'னு சொல்லப் போறேன்!"

"கழுத்தைப் பிடிச்சு அவர் தள்ளப் போருர்!"

"அவரைக் கலப்பு மணம் பண்ணிக்கொண்டேன்."

"அதனுலே உன் உறவு உற்றம் அவருக்கு ஒன்னும் தெரியாது என்கிருய்."

"எல்லாத்துக்கும் நாஞச்சி என்கிறேன்."

கொஞ்ச நேரம் மவுனம் சாதிக்கிருேம். அவர் பல்லைக் குடைந்துகொண்டிருக்கிருர். "இன்னும் ஒரு தடவை அதற்கு 'சிமெண்டு' அடைத்துக் கொள்றதுதானே?" என்கிறேன்.

"நீ ஆஸ்பத்திரியில் இருந்தபோது, உன் தொல்லைக்காக அப்போது அடைச்சிக்கொண்டதுதான்."

இந்தச் சேலையைப் பாத்தீர்களே. ஒன்னும் கவனம் வரலே?" அவர் தந்துவிட்டுப்போன ஒரு கைத்தறிச் சேலைதான் அது.

"இதுவா அது?" அவர் விலுக்கென்று நிமிர்ந்து உற்றுக் கவனிக்கிருர்.

"16 வருஷமாகிறது;" என் கண்கள் கலங்கிக் குளமாகின. "சொல்லாமல் கொள்ளாமல் ஒரே அடியாக, நான் பரதவிக்க அப்படி நீங்க நின்னது நியாயந்தானு? அப்படி என்ன உங்க ராணி துரோகம்பண்ணிட்டா?"

"ராணி!......... குழந்தையைப் பக்கத்திலே கொண்டுவந்து கிடத்திக்கோ!"

"ஏன்?"

"நான் அவ எதிரிலே இல்லேனு கத்துவாள்!"

அவர், பயம் எனக்குத் தெரிகிறது. என் உணர்ச்சி கட்டு மீருது என்பதுதான் என்ன நிச்சயம்? இப்போதே அது கடந்த அன்பை நினைத்து நெகிழ்கிறதே!

"உன் துரோகமல்ல அது. ராணி—உன் முடிவு! ஒரே வெறுப்பு வேதனை! ஒரு தினம் போய் விட்டேன்—உன்னைவிட்டே!"

"உங்க ஆசைபாசம், அன்பு நேசம் நெடுங் காலத்துக்கு ஓடணும் என்றுதான், நமக்குள் கலியாணம் வேண்டாம் என்று அந்தச் சுமையை நான் ஒதுக்கினது!"

பேசாமல், கண்ணை அரை வட்டம் போட்டுக் கொண்டு, தாடையைத் தடவிக்கொண்டு கிடந் தார் நிர்மலன்.

"நீங்க கூட சொல்லலையா? 'கலியாணம் மூலம் வாழ்வு ஒரே சடபடா பட்டாசு; கலியாண மில்லா வாழ்வு பூ மத்தாப்பு' என்று."

"லோகப் பழியை அறியாமல், உன் மோகம் என்னை அப்படி ஒரு தாளம் போட வச்சுது. என்னைக்குமே நான், உன் முடிவுக்கு ஒத்துக் கொண்டவனல்ல. காதலர்களுக்கு, அதுவும் உடல் ஒன்றுபட்டுவிட்டவர்களுக்கு, கௌரவம் தருவது, மானுவமானத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவது—கலியாணந்தான்!"

"எனக்கு கலியாணம் பிடிக்கவில்லை என்றில்லை. அதன் மூலம் வாழ்க்கை எனக்குப் பிடிக்க வில்லை. அன்னைக்குச் சொன்னது—இன்னைக்கும் சொல்லுகிறேன்."

"சொன்ன புண்யவதிதான் இன்னைக்கு 8-க்குத் தாயாக, மாங்கல்யம் ஜொலிக்க—"

அவர் பேசட்டும். பொருமையால் ஒருவர் தீய்ந்தால்தான் இப்படி வதை செய்ய முடியும்! இப்படி ஒரு பாணம் விடணும் என்றே நிர்மலன் வந்தாரா?

"உங்களுக்குத்தான் அன்னைக்குச் சொன்னது. சந்திரநாதனுக்காக அல்ல!" என்கிறேன் நானும் தீவிரத்தின் ஆற்றுமையால். அவர் அன்பை ஆசையை என்றென்றும் சாசுவதமாகப் பெறத் தான். அவர் இச்சித்தும் நான் கலியாணத்தை மறுத்தேன். கலியாண வாழ்விலே கடமையும், பொறுப்பும்—இவை இரண்டுக்கும் அடிமை யாகிவிடுகிற வாழ்வுதான் மிச்சம். மகிழ்ச்சி இல்லை. இன்னைக்குக் கூட எனக்கு 'வாழ்வே' இப்படித்தான். உதாரண மாக, நான் வேண்டாம் வேண்டாம் என்றிருந் தும் 8 குழந்தைகளுக்குத் தாயானதுதான்! அப் போதும் நிர்மலன் என்னை புரிந்துகொள்ளவில்லை. இப்போதும் 8 குழந்தைக்குத் தாயானதைச் சுட்டி இடிக்கிறார்—புரிந்துகொள்ளவில்லைதான்! அன்னைக்கு, 'படிச்ச சில பெண்கள், தொழில் பாத்து தானே தன் காலில் நிக்கும் பெண்கள்—இந்தமாதிரி பெண்கள், கலியாணம் வேண்டாம் காதல்தான் வேணும் என்று, கள்ளக்காதல் வேட்டையில் காலத்தைத் தள்ளி, கன்னியாக இல்லாமலும் கணவனோடு இல்லாமலுமான ஒரு திரிசங்கு நிலையில், இருந்துவிட இச்சைப் படுகின் றனர். வாழ்க்கைத் துணைவன் வேம்பு; கருத் தடை மருந்து கரும்பு அவர்களுக்கு!' என்று லெக்சர் அடித்தவர்தான் நிர்மலன்.

நர்சுகளில் நான், விதி விலக்காகக் கூட இல்லை யாம். நெட்டுப் பிடித்த பெண்ணும்...எங்களுள் எத்தனையோ வாதப் பிரதி வாதங்கள். இன்று அதை எல்லாம் நோக்கி என் நினைவு பாய்ந்து ஓடுகிறதை, மடக்கிப் போடுகிறேன். "ஆமாம்! இப்போது கல்யாணம் பண்ணிக்கொண்டேன் என்கிறீர்கள். யாருக்கும் வாழத்தான் ஆசை. அது சித்திக்கலை என்றால்—? நேர் விரோதமான ஒன்னைத்தேடிக்கிறது மனிதசுபாவந்தானே? ஏன் அவங்க தற்கொலை செய்துகொள்ளுகிறது? அதன் மேலே ஆசையா, பாசமா, காதலா? வெறுப்பு விரக்திதானே? நான் தற்கொலை செய்து கொள்ளவில்லை — கலியாணம் செய்து கொண்டேன். என்னை மணந்தவர் உத்தமர் தான்; உள்ளன்பு கொண்டவர்தான்; மாசில்லா மாணிக்கந்தான்; என்னைக் காதலால் அபிஷேகிக் கிறவர்தான். ஆனாலும் உங்களோடு வாழ்ந்த தாகுமா?"

"என்ன, என்னோடுவாழ்ந்ததாகுமா?" நிர்மலன் விழிக்கிறார்.

"இருங்க வந்தேன்." என் அறைக்கு ஓடிச் செல்லுகிறேன்; மீளுகிறேன். 'இதோ கடிதம் பாருங்க." அது ஒரு விவாக அனுமதி!

* * * *

என்றும் போல வந்தவர்தான் நிர்மலன் அன்றும். சாப்பிட்டார். ஒரு உறக்கம் போட்டு எழுந்தார். பகல் மணி $2\frac{1}{2}$. பக்கத்தில் நான் இருந்தேன்.

"கலியாணம் வேண்டாம் என்கிறயே—குழந் தைகள் பிறந்தால்?"

"பிறந்தாலும், அவைகள் நமக்குப் பிறந்தவை கள்தான்" என்று எரிச்சலாய் நான் மொழிந் தேன்.

"அர்த்தத்தை அனர்த்தம் செய்து கொள்! உலக நடப்புக்கு, குழந்தைகளுக்காக நாம் கலியாணம் செய்து கொள்ளணும்."

"அப்படி குழந்தைகள் ஆகிறபோது பார்க்க லாம்!"

"என்ன நீ பேசுகிறாய்?"

"சந்தேகம் வேண்டாம்—ஒரு மருந்தும் நான் சாப்பிடவில்லை. பேசாமெ தூங்குங்கள்!"

"கலியாணம்?"

"தூங்குங்கள் செய்து கொள்ளுகிறேன்."

என் அசட்டையை அவர் புரிந்து கொண்டார். "நான் உனக்குக் கிடைச்சது பிசகு. உன்னைப்போல ஆளுக்கு, காரியம் முடிஞ்சதும் கைவிட்டுட்டுப் போற கைக்காரன்தான் சரி!"

"நீங்கதான் அப்படிப்பட்ட நயவஞ்சகன் இல்லையே—தூங்குங்க."

"எம் மனசுதான் இதனலே, நோகுது ராணி."

அவர் தந்த சேலையை அன்று நான் உடுத்தியிருந்தேன். அந்த அழகை அள்ளி வாரி ரசித்தார். முத்தமாரி சொரிந்தார். என்றுமில்லாதபடி கண்ணீர் வடித்தார்.

நான் திகைத்தேன். அப்போது கூட அவர் தம் மனப்பாரத்தை 'நான் உன்னைக் கைவிட்டு விட்டுப் போகிறேன்" என்று காட்டியவர் அல்ல. 'ஆனந்தக் கண்ணீர், உன் அழகுக்காக' என்றுதான் சொன்னார்.

மாலை நாலு மணியானதும் தேனீர் பருகிவிட்டு அவர் 'போய் வருகிறேன்' என்று கிளம்பிவிட்டார். வழக்கம்போலப் போகிறார் என்றுதான் நான் இருந்தேன்.

மறுநாள் என் மனசு தவித்தது. காரணம் தெரியாத ஒரு பயம். அவர் ஆசையை, திருமண விருப்பத்தைத்தான்—கெடுப்பானேன்? திருமணத்தால் அடிமை வாழ்வு, கடமை வாழ்வுதான் என்றாலும் அன்புகொண்டவரிடந்தானே அது. ஊர் வாயாவது ஓயும். அணைக்கிற கை அடித்தால் என்ன? அவர் சொல்லுகிறமாதிரி குழந்தை குட்டிகளாகிவிட்டால்—? எனது கோழை, தாழ்வு மனப்பான்மையை நானே நொந்து கொண்டேன்.

இந்த மனசு அற்புதமானது. வேண்டாம் என்பதற்கும் ஆயிரம் காரணங்களைக் கொடுத்தது; தேவைதான் என்பதற்கு இப்போது பத்தாயிரம் கொடுக்கிறது. நான் கலியாணத்துக்கு மனுச் செய்துகொண்டேன்—என் முடிவை மாற்றிக்கொண்டவளாய். இதைச் சொல்லி, நிர்மலனை மகிழவைக்க அவரை எதிர்பார்த்தேன். அவர் வரவில்லை!

என் மனுவுக்கு 'சர்ஜனிடமிருந்து' வந்தது அனுமதி! பொங்கிப் பூரித்தேன். நிர்மலனைத்தான் காணோம்.

நிர்மலன் எங்கோ...?

* * * *

"கலியாணம் அவ்வளவுதான் என்று நீங்க அடைஞ்ச வெறுப்பு உங்களைத் தமிழ்த் தேசத்தை விட்டே ஓடப்பண்ணினது. நான் பிரிவால் பெற்ற துன்பம் என்னை எங்கோ ஓட்டிச் சென்று விவாக பந்தத்திலே சிக்க வைத்து விட்டது. இன்னைய வரையில் வேடிக்கை பண்ணி பார்த்து வருகிறது. வாழுகிறேன் என்றால் அது ஒரு பழக்கந்தான்; அது ஒரு கடமை தான். 16 வருஷ காலப் பழக்கம்! கடமை! இன்னும் குழந்தை குட்டிகளின் பிடிப்பு, பிணைப்பு. இன்னைக்கு என்னண்டை எஞ்சி நின்னது இது தான். காதல், லட்சியம் எல்லாம் என்றோ, நான் மனசு வைத்திருந்த ஒரு பற்றுக் கோடோடு, அது ஓட, கூடவே ஓடிவிட்டது!" வார்த்தை ஓடவில்லை. என் கண்களில் கடல் பொங்கி விடுகிறது.

"ராணி...ராணி, நீ அழவேண்டியதில்லை. நான் தான் அழவேண்டியவன்... நான்தான் அழவேண்டியவன்..." ஒரு விநாடி தாளவில்லை நிர்மலன். 'நான் விவாகம் பண்ணிக்கொண்டது துரோகம் அல்ல' என்ற மாசற்ற எண்ணத்தில், அதன் பரவச வேக உந்தலோடு, நானே கல்லாக இறுகிவிடும்படி, ஈசி சேரை விட்டு எழுந்தோடி வந்து என் தாள்களில் தலையை முட்டி அழுது விடுகிறார்.

என் மனசு நெகிழ்ந்தது. பாகாகி விடுகிறது. நான் இன்னொருவனின் மனைவி; 8 குழந்தைகளின் தாய்; அவர் ஒரு பர புருஷன்...எல்லாம் மறந்து போகிறது! என்னையே நான் இழந்து விடுகிறேன்! நிர்மலனை வாரி அணைத்து மார்பு மீது சாயப் போட்டுக் கொள்ளுகிறேன்—என் ஆதி நாள் செய்கைபோல.

அப்படியே இருவரும் யுக யுகாந்தரத்துக்குச் சிலையாகிவிடவேண்டுமென்று...

எவ்வளவு நேரம் அப்படி சமைந்து போனோமோ தெரியாது.

அமைதியாக அவர் மூச்சு ஓடுகிறது. முன்போல அதிலே உஷ்ணம், தீவிரம் இல்லை. மனத் துடிப்பும் அமைதியாகத் துடிக்கிறதை உணருகிறேன். நிம்மதியான மூச்சு எனக்கும். இருவர் மனமும் லேசாகிவிட்டது.

இருவர் எண்ணமும் விரிந்துவிட்டது—பரந்த கடல் அளவுக்கு, வானமளவுக்கு, தூய நிறத்தை விடச் சுத்தமாகிவிட்டது.

"நிர்மலன்..."

கண்ணீருடே அவர் ஏற நோக்குகிறார்; நிமிருகிறார். வளைந்து என் பாதங்களில் மீண்டும் தலை புதைத்து 'நீ என் சகோதரி... நீ என் சகோதரி...' என்கிறார். எழுந்து, நிமிர்ந்து நிற்கிறார். அவர் பாதங்களில் என் சிரம் தோய்கிறது. குப்புறப் பணிகிறேன். 'நீங்க என் அண்ணன்... நீங்க என் அண்ணன்..." என்கிறேன். கண்ணீரால் அவர் பாதங்கள் நனைகின்றன.



எகிப்து நாட்டிலே

கே. ஸ்ரீநிவாஸன்

எகிப்திய சர்க்கார் எவ்வளவோ எனக்கு அவர்கள் நாட்டிற்கு விஜயம் செய்யும் படி அழைத்தது வாஸ்தவம்தான். ஆனால் நம் நாட்டை விட்டு வெளி நாட்டுக்குச் செல்லப் பலவிதச் சடங்குகள் செய்தாக வேண்டும். அவைகளைச் செய்யக் குறைந்தது இரண்டு வாரங்களாவது அவகாசம் வேண்டும். 'பாஸ்போர்ட்' என்ற ஐந்து வருட காலத்திற்குச் செல்லுபடியாகும் அனுமதிச் சீட்டைப் பெறுவதற்கு, கடவுள் ஒருவர் நீங்கலாக, மற்றவர்கள் தயவு வேண்டும். முதல் முதலில் போலீஸ், நான் மற்ற நாட்டுக்குச் செல்ல அருகதை உள்ளவன், புரட்சிக்காரன் இல்லை என்று சர்டிபிகேட் கொடுக்கவேண்டும். அடுத்தபடியாக, குடலைப் பிடுங்கி வரி வசூல் செய்யும் வருமான வரி இலாகா நான் வள்ளிசாக வரியைச் செலுத்திவிட்டேன் என்று சாக்ஷியப் பத்திரம் கொடுக்கவேண்டும். இதற்கு அடுத்த கண்டம் காலரா, வைசூரிக்கு ஊசி. இதை ஒரு வாரத்திற்குள் இரு தடவை போட்டுக்கொள்ளவேண்டும். இவ்வளவையும் கொஞ்சம் 'ராஜ தந்திர' முறையில் செய்து பிரயாண தஸ்தாவேஜுகளை வைத்துக்கொண்டு டில்லியில் பாலம் ஆகாயக் கூடத்தில் நின்று கொண்டிருந்தபொழுது கூட நான் எகிப்து செல்வேன் என்ற நிச்சயம் இல்லை, ஏதாவது சொல்லித்தடை செய்தால் வாகன் கணக்கில் உள்ள சர்வ தேச சட்டத்தைப்பற்றி யார் கண்டார்கள்?

ஆகாய விமானங்கள் சென்ற சிலவருஷங்களில் பிரமாத முன்னேற்றம் அடைந்துள்ளன. ஆகாயத்தில் பறக்கும் பொழுதும், தரையில் உள்ள சகல சௌகரியங்களும் இருக்குமாறு செய்திருக்கிறார்கள். இதை யெல்லாம் பார்த்தால் உள்ளூரில் ஓடும் "டகோடா" விமானம் கட்டை வண்டி என்றே சொல்ல வேண்டும்.

நான் சென்ற விமானம் புதியதாக AIR INDIA INTERNATIONAL வாங்கியுள்ள "ஸூபர் கான்ஸ்டெல்லேஷன்" என்ற பிரமாண்டமான மூன்று என்ஜின்கள் கொண்ட விமானம். உள்ளே நுழையும்பொழுதே உபசரிப்புமாது முகமன் கூறி உட்காரவைத்தாள். நானும், சென்னை "ஹிந்து" பத்திரிகையின் நிருபர் ஸ்ரீ பார்த்தசாரதியும், அக்கம் பக்கமாக உட்கார்ந்து கொண்டோம். விமானத்தில், ரயிலில் உள்ளது போல, இரு வகுப்புகள் உள்ளன. உயர்ந்த வகுப்பு "ஸ்டாண்டர்ட்" எனப்படும், மற்றது "டூரிஸ்ட்". பம்பாயில், "டைம்ஸ் ஆப் இந்தியா" பிரதிநிதி ஸ்ரீ ஏ. எஸ் ராமானுஜம். "அமிர்த பஜார் பத்திரிகா" பிரதிநிதி ஸ்ரீ சென் குப்தாவும் எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

பம்பாயை விட்டு விமானம் கிளம்பியதும் நாங்கள் கொஞ்சம் குளிர்ந்தபானம் அருந்தினோம். மறறச் சாதாரண விமானங்கள் 7,000 அடி உயரத்தில் பறக்கும் பொழுதே



குளிர் எடுத்து விடும். ஆனால் "கான்ஸ்டெல்லேஷன்" (Presswize) செய்யப்பட்டிருப்பதால் 19,000 அடிக்குமேல் பறக்கும்பொழுது கூட உள்ளே 6,000 அடி சீதோஷ்ண நிலைதான் இருந்தது. (Presswize என்றால் உள்ளே சீசன் நிலையைக் காற்று மூலம் கட்டுப்படுத்துவது.)

கான்ஸ்டெல்லேஷன் 19,000 அடியை அடைந்து மணிக்குச் சுமார் 300 மைல் வேகத்தில் பறக்கும்பொழுதும், உட்கார்ந்திருக்கும் ஆசனத்தில் கை வைக்கும் சட்டத்தின்மேல் அரை ரூபாயைப் பக்கவாட்டில் நிறுத்தினால் ஜோராக நிற்கிறது. இரு கையிருத்திகளிலும் சொருகி ஒரு மேஜை போன்ற பலகையின் மேல் ஆகாரம் கொடுத்தாள் உபசரிப்பு மாது. ஜோராக வீட்டில் சாப்பிடுவது போன்று சாப்பிட்டோம். ஆனால் தூங்குவது மட்டும் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது. உட்காரும் நாற்காலி, ஒரு பித்தானை அமுக்கினால், சாய்கிறது. என்னதான் சாய்ந்தாலும் உட்கார்ந்துகொண்டே எப்படித் தூங்குவது? அப்பொழுதுதான் எனக்கு மூன்றாம் வகுப்பு வண்டியின் மகிமை புலனாயிற்று. கட்டையைச் சாய்க்க எங்காவது கொஞ்சம் இடம் கிடைக்கும் அல்லவா?

இரவு சுமார் 2 மணிக்குமேல்தான் கொஞ்சம் தூங்கினேன். விழித்துப் பார்த்தபொழுது மணி 8 ஆகியிருந்தது. ஆனால் பலார் என்றுகூட விடியவில்லை. என்னடா இது என்று நான் விழித்தபொழுதுதான் நாங்கள் பூமியைச்சுற்றிஎட்டில்ஒரு பங்குக்கு மேல் பிரதக்ஷிணம் செய்துவிட்டோம் என்று தெரிந்தது. ஆகவே காலப்பிரமாணத்தில் மூன்றரை மணிக்கு மேல் வித்தியாசம் ஏற்பட்டிருந்தது. இந்தியாவில் சாயங்காலம் ஆறரைமணி என்றால் எகிப்தில் பிற்பகல் மூன்று மணி.

விமானம் கெய்ரோ ஆகாய விமானக்கூடத்தை அடைந்ததும், மிடுக்காக உடையணிந்த ஒருவர் எங்கள் நால்வரின் பெயர்களையும் சொல்லி முதலில் எங்களுக்கு இறங்க வசதி செய்யுமாறு மற்றப் பிரயாணிகளை கேட்டுக்கொண்டார். இவர் எகிப்துக்கு வரும் யாத்திரிகர்களுக்குச் சௌகரியம்செய்ய நியமிக்கப்பட்டுள்ள 'டூரிஸ்ட் போலீஸை" சேர்ந்தவர் என்று தெரிய வந்தது. எங்களை ஆகாய விமானக் கூடத்தின்மேல் பொறிக்கப்பட்டிருந்த "எகிப்துக்கு வாருங்கள்" என்ற மொழிகள் பரவசப்படுத்தின. எங்களை விமானக் கூடச் சிற்றுண்டிச்சாலையில் உட்காரவைத்துவிட்டு, டூரிஸ்ட் போலீஸார் சுங்கசோதனை முதலிய கடன்களை 10நிமிடங்களில் முடித்து எங்களை வெளியே அழைத்துச்சென்றார்கள். சாதாரணமாக ஒருமணி ஆகும் சோதனைகளை இவ்வளவு சீக்கிரம் முடித்த பெருமை யாத்திரிகர்களுக்குக் காண்பிக்கப்படும் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியது.

விமானக்கூடத்தை விட்டு வெளியே வந்து காரில் ஏறிக்கொண்டோம். டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த எனக்கு வண்டி வேகத்தைக் குறிப்பிடும் கடிகாரத்தைப்

பார்க்கவே பயமாக இருந்தது. முள் 90-க்கும் 100-க்குமிடையே ஊசலாடியது. பிறகுதான் தெரிந்தது எகிப்தில் மைல் கணக்குக் கிடையாது. நீட்டல் அளவை மீட்டர் கணக்கில் உள்ளது. ஒரு கிலோ மீட்டர் முக்கால் மைலுக்குச் சமம். நான், கார் ரோடுக்கு வலது புறமாகச் செல்வதைக் கவனிக்கவில்லை. திடீரென்று ஒரு பெரிய லாரி எதிரே வருவதைக் கவனித்தேன். சரி நிச்சயம் "டகார்" என்ற மோதல் உண்டாகும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி ஒன்றும் நேரவில்லை. பிறகு டிரைவர் சொன்னார்: எகிப்தில் வண்டிப் போக்குவரத்து ரோடுக்கு வலதுபுறம் என்று. எகிப்தில் இருந்தவரை எங்களுக்கு எப்பொழுதும் குழப்பம்தான். தெருவைக் கடக்கும்பொழுது, வலது பக்கம் முதலில் பார்த்து, பிறகு தெருவின் மத்தியில் இடது பக்கம் திரும்பிப் பார்த்துப் பழக்கமான எங்களை, எப்பொழுதும் பல வாடகை வண்டிகள் துரத்துவது வழக்கம். இதில் அபாயம் இருந்தாலும் அராபிய பாஷையில் மெஷின் துப்பாக்கிபோல் அதி வேகமாகத் திட்டி வெளுக்கும் டிரைவர்களைப் பார்க்க எங்களுக்கு எப்பொழுதும் ஆனந்தமாக இருந்தது.

கெய்ரோ நைல் நதியின் நீட்டப்போக்கில் அடைந்த சுந்தரமான நகரம். வழியில் முதல் முதலில் பார்த்த ஹெலியோ போலிஸ் (**Helio Polis**) என்ற பேட்டை கவர்ச்சிகரமாக இருந்தது. எட்டு மாடிகளுக்குக் குறையாத அழகிய கட்டிடங்கள். அகண்ட விசாலமான தெருக்கள். அதிகாலையில் கழுத்து முதல் பாதம் வரை மூடியிருந்த "கௌன்" போன்ற உடையணிந்த எகிப்தியர்கள் பால் சுமந்து கொண்டும், கறிகாய் எடுத்துக்கொண்டும் சென்று கொண்டிருந்தார்கள். தலையில் சிகப்புக்குல்லாய்கள். இவர்கள் பாட்டாளிகள் என்றும் இவர்களை விட்டால் நடு வகுப்பினரும் சரி, மேல் வகுப்பினரும் சரி மேல் நாட்டு நாகரிகத்தை அனுசரித்து நடையுடை பாவனைகளில் முற்றிலும் மாறுப்பட்டவர்கள் என்றும் தெரியவந்தது.

வண்டி சென்று கொண்டேயிருந்தது. கெய்ரோ எடுத்த எடுப்பிலேயே எங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. பாதசாரிகள் நடக்கும் மேடையில் சில நூறு அடிகளுக்கு எட்டுப் பட்டைகள் கொண்ட சிறிய மரத்தால் ஆகிய அறைகள் உள்ளன. இவைகளில் பத்திரிகைகள், சிகரட்டுகள் முதலியவைகள் விற்கிறார்கள். வழி நெடுக ரஸ்தாவை யொட்டி டீக்கடைகள் மேடையிலேயே வியாபாரம் நடத்துகின்றன. விசாலமாக ஹால் காலியாக இருக்கிறது: ஆனால் நாற்காலிகள் வெளியே போடப்பட்டு, அவைகளில் டீ அருந்துபவர்கள், சினிமாக் கொட்டகைகளில் உட்கார்ந்திருப்பது போல், நெருங்கி உட்கார்ந்து சிற்றுண்டி அருந்துகிறார்கள். இவர்கள் காற்றுவாங்குவதற்கு இப்படிச் செய்கிறார்கள் என்று தெரிந்து கொண்டோம்.

சுமார் ஒரு மணி நேரத்திற்குப் பிறகு எங்கள் ஹோட்டலை அடைந்தோம். பிரும்மாண்டமான ஹோட்டல். சுமார் 500 அறைகள் உள்ளன. விசாலமான இருவர் இருக்க ஏற்பாடு உள்ள அறையில் நாங்கள் ஒவ்வொருவரே தங்கினோம். ஸ்நான அறையில் குளிக்கும் தொட்டி, வெந்நீர், குளிர்ந்த ஜலம் கொட்டும் குழாய்கள், பூவாளி போன்று தண்ணீர் கொட்டும் குழாய்கள், எல்லாம் அமைக்கப்பட்டிருந்தன. சாப்பாடு இல்லாமல் தங்குவதற்கு மாத்திரம் தினம் சுமார் 45 ரூபாய்!

எங்களைப் பார்க்க, எகிப்திய சர்க்கார் தேசீய வழிகாட்டி இலாகா பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். நாங்கள் எகிப்திய விடுதலை இரண்டாவது ஆண்டுக் கொண்டாட்டத்தில் பங்கெடுத்துக்கொள்ள வந்திருந்ததால், சர்க்கார் கவனிப்பு ஜரூராகவே இருந்தது. எகிப்தில் மாதர்கள் மிகவும் முன்னேறி யிருக்கிறார்கள். அவர்கள் மேனாட்டு உடையான

கௌன் தரித்துக் கொள்ளுகிருர்கள். எங்களைக் கவனித்துக்கொள்ள வந்த ஸமீரா என்ற மாது தனக்கு இந்திய உடையான புடவை மிகவும் பிடித்தது என்று என்னிடம் சொன்னுள். எகிப்திய மாதர்கள் மோதிரம், சிறிய மெல்லிய கழுத்துச் சங்கிலியைத் தவிர வேறு ஆபரணங்கள் அணிவதில்லை. ஆருயிரம் வருஷங்களுக்கு மேற்பட்ட நாகரிகம் உள்ள எகிப்தில் கிளி கொஞ்சும் அழகிகள் விதம்விதமான ஆபரணங்கள் அணிந்தது அந்தக் காலம். பிறந்த மேனிக்கு மற்ற ஆபரணம் வேண்டாம் என்று மாதர்கள் இருப்பது இந்தக் காலம்.

வந்த அன்றே வேறு விசேஷ நிகழ்ச்சி இல்லாததால் கொஞ்சம் கால் போன போக்கில் சுற்றலானேம். அடடா! என்ன அழகான வீதிகள்! கடையலங்காரத்தில் கெய்ரோவை மிஞ்சிய நகரத்தை நான் இதுவரை கண்டதில்லை. பளபளவென்று மின்னும் கண்ணுடிகளுக்குள் லக்ஷக் கணக்கான ஆபரணங்களை அலங்காரமாக வைத்திருக்கும் காட்சி மறக்க முடியாதது. இரவில் இந்தக் கண்ணுடி விடுதிகளை நன்ருகப் பிரகாச விளக்குகளால் அலங்கரிக்கிருர்கள். யாராவது திருடுவார்களோ என்ற பயம் கிடையாது.

காப்பி கிடைக்கும் என்றவுடன் நாக்கில் ஜலம் ஊறியது. இரண்டு பியஸ்டர்களுக்கு (சுமார் நாலணு) ஒரு கப். கெய்ரோவில் காப்பி என்ருல் துருக்கிய காப்பிதான், பால் இல்லாமல் கொடுப்பார்கள். எங்கள் விளக்கெண்ணெய் முகத்தைப் பார்த்தவுடன் அந்தக் காப்பிக்கடைச் சிப்பந்தி, 'ஓ பால் வேண்டுமா? நீங்கள் பிரெஞ்சுக் காப்பி என்று சொல்லியிருக்கவேண்டும், என்று சொல்லி எங்களுக்குப் பால் கொடுத்தார். காப்பி தயார் செய்யப் பளபளவென்று மின்னும் பெரிய மெஷின்கள் உள்ளன. ஒரு கப் வேண்டும் என்ருல் தக்ஷணம் இரு முட்டைகள் பொடியை மெஷினில் ஒரு கப்பில் போட்டு வைக்கிருர்கள். வெந்நீர் சொட்டுச் சொட்டாகக் காப்பிப் பொடி மூலம் இறங்குகிறது. காப்பி மிகவும் மணமாக இருக்கிறது.

கெய்ரோவின் நடைபாதைகளில் ஆடவர்களும் பெண்களும் அழகாக நடப்பதே கண் கொள்ளாக்காட்சி. நம் பக்கங்களில் உள்ளது போன்ற விழித்துப் பார்க்கும் வழக்கம் இங்குக் கிடையாது. இரவு நேரம் நெருங்க நெருங்க, கெய்ரோவின் அழகும் எழிலும் அதிகரிக்கின்றன. எப்படி? அடுத்த கட்டுரையில் விவரிக்கிறேன். (தொடரும்)

மாதவிடாய்

("தேவி பில்ஸ்" REGD. No. CDL/688)

பெண்களுக்கு ஓர் வரப்பிரஸாதம். மாதவிடாய்க் கோளாறுகளுக்கு ஓர் ஈடு இணையில்லாத மருந்து.

மாதவிடாய்க் காலத்தில் வலி, மாதவிடாய் தடை, நாள் பட்ட மாதவிடாய் அதிகப்போக்கு போன்ற இத்தனை கூற்றுக்களுக்கும் ஏற்றது. உரியதை ஆற்றக்கூடிய ஒரு பாக்கெட் தாமதமான (நாள்பட்ட) கேசுக்குரிய 14 மாத்திரைகள் கொண்ட ஸ்பெஷல் (Special) மருந்து ரூ. 10-8-0. (Ordinary) சாதா மருந்து ரூ. 8-8-0. (தபால் சார்ஜ் தனி.)

கர்ப்பத் தடை

("ஸ்பெக் டாப்ஸ்" REGD. No. 266)

கர்ப்பத்தடைக்கு ஓர் அரிய வரம். இயற்கையிலேயே பெரிய சாதனை. கர்ப்பப் பையில் உற்பத்தியாவதைத் தடுத்து, வாழ்க்கையில் உயர்வை ஊட்டுகிறது. கலப்புத்திர விஷயங்களிலிருந்து சாஸ்திரிய முறைப்படி, செயற்கை முறை தவிர்த்து கர்ப்பத்தடையைச் செய்கிறது. ஆறு வருட காலத்திற்கு கர்ப்பத் தடை செய்யும் ஒரு பாக்கெட் 24 மாத்திரைகள் விலை ரூ. 12-0-0 (தபால் சார்ஜ் தனி). விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்:—

Messrs SEENU & Co, Post Box No 1638, Madras-1

Branches: 134 Serangoon Road, Singapore-8
4 Jalan Maharani Muar, (Malaya)

Agents: New Colombo Medical Stores
82, Main Street, Colombo-11
City Medical & General Agencies
89, Chickpet, Bangalore City.



தொடர் கதை

சித்தன்ன வாசல்

அ. ராம்கோபால்

தமிழன் பெருமைப் படத்தக்க ஓவியச் செல்வங்களுள் சித்தன்ன வாசல் முதன்மையானது. புதுக்கோட்டையிலிருந்து ஒன்பது மைல் தொலைவிலுள்ள இக்கலைக் கோவில் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், யாரும் போக அஞ்சும் பயங்கரக் காட்டகத்தே இருந்த ஒரு மலைக் குகையில் உருப்பெற்றது. இவ் உயிரோவியங்கள் தீட்டப்பட்டு இன்றைக்குச் சுமார் 1350 ஆண்டுகளாகியும் அவற்றின் வர்ணமும் வனப்பும் சிறிதும் மங்கவோ, மாசு படவோ இல்லை இன்று இப்பொழுது தான் தீட்டிய சித்திரங்களைப் போல் பசுமை மாறாமலிருக்கின்றன. உலகம் கண்டு பிரமிக்கும் அஜந்தா ஓவியங்களுக்கு இவை எவ்வகையிலும் தாழ்ந்தவையல்ல என அறிஞரும் கலைஞரும் கருதுகின்றனர். ஆனால் இவ் ஓவியங்களை இவண் வதிந்த பௌத்த துறவிகள் எவ்விதம் வரைந்தனர் என்பதை இவ் நீரக குண்டு யுகத்திலும்கூட யாராலும் கண்டறிய இயலவில்லை. மர்மத்திலும் மர்மமாக அற்புதத்திலும் அற்புதமாக இன்றும் அது நம்மிடையே நிலைத்திருக்கிறது.

இந்த அற்புத கலைக்கோவில் உருப்பெற்ற வரலாற்றை விவரிக்க முற்படுகிறது இவ் நாடகம்.

முக்கிய பாத்திரங்கள்

சுகதர்—அமராவதி பௌத்த மடாலய பிரதான ஆச்சாரியார்.

மகேந்திரவர்மன்—காஞ்சிப் பல்லவ மன்னன் (கி. பி. 600-625)

விஷ்ணுவர்மன்—மகேந்திரன் மந்திரி

பம்பாபதி—மகேந்திரன் சேனாதிபதி

நாகநந்தி—மகேந்திரன் அங்கரட்சகன்

சண்டசேனன்—மகதநாட்டுத் தூதுவன்

டேமதஸ்—சுகதரின் கிரேக்க மாணவன்

பைரவர்—காளி கோவில் பூசாரி

மாடன், மாறன்—ஒற்றர்கள்

பிரிவாதினி—மகேந்திரன் மகள்

விஜயமாலை—பிரிவாதினி தங்கை

கிருஷ்ணகுமாரி—பிரிவாதினியின் உயிர்த்தோழி, ராஜ குரு ருத்ராச்சாரியின் மகள்

இடம்:—காஞ்சியில் மகேந்திரன் அரண்மனையில் அந்தப்புரம் பூங்கா.

காலம்:—அதிகாலை சூரியோதய நேரம்.

(ராஜகுமாரி பிரிவாதினியின் பிறந்தநாள் கொண்டாட்டம். அதிகாலையில் குளித்துவிட்டு நல்லாடை தரித்து கோவிலுக்குச் சென்றுவிட்டு வந்து, ஓர் உயர்ந்த ஆசனத்தில் அமர்ந்திருக்கிறாள் பிரிவாதினி தேவி. அவள் அருகே இளைய ராஜகுமாரி விஜயமாலை அமர்ந்திருக்கிறாள். அவர்களைச்சுற்றி எங்கும் மலரும், மலர் மாலைகளும் மற்ற அன்பளிப்புகளும் குவிந்து கிடக்கின்றன. அட்சதையும் ஆரதித்தட்டும் ஏந்தி இரண்டு பணிப்பெண்கள் அவர்கள் பக்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். சில பெண்கள் மங்கள வாழ்த்துப்பாடுகிறார்கள். பாட்டு முடிந்ததும் கூடியிருந்தவர்கள் எல்லோரும் ராஜகுமாரியை வாழத்தி அவள்மீது அட்சதை தூவுகிறார்கள். ஆசனத்தைவிட்டு எழுந்து பிரிவாதினி கீழே இறங்கி வருகிறாள். அதே சமயம் அங்கே கிருஷ்ண குமாரியும் வந்து சேருகிறாள்.)

பிரிவாதினி:—(எதிர்கொண்டு கைகூப்பி நமஸ்காரம் செய்து) வரவேண்டும்! வரவேண்டும்!

கிருஷ்ணகுமாரி:—ஜயமங்களபவ!....... ஆண்டவர் உனக்கு ஆதித்தன் ஆயுள் அளிப்பாராக!

பிரி:—எனக்கு இவ்வளவு பெரிய ஆயுள் எதற்காகத் தேவி?

கிரு:—அபலைகளின் துயரைத் துடைக்க......... ஆயிரம் ஆயிரம் வசந்தம் உனக்கு வாழ்த்துக் கூறட்டும். வேனில் வரவேற்பளிக்கட்டும்...... இங்கே வா! உனக்குப் பிறந்ததினப் பரிசாகஇந்த மாலையை ஏற்றுக்கொள். (பிரிவாதினி கைகூப்பி, தலை குனிகிருள், கிருஷ்ணகுமாரி மாலையிட்டு அட்சதை போடுகிருள்) இந்த மலர் மாலையைப் போல் உன் வாழ்வும் மணம் நிறைந்ததாக இருக்கட்டும்.

பிரி:—குரு புத்திரியாகிய தங்கள் ஆசியே என் பெரும் பாக்கியம்.

கிரு:—(வாசல்பக்கம் திரும்பிப் பார்த்துவிட்டு) அதோ ஆச்சாரிய தேவர் வருகிருர்

(சுகதர் பிரவேசம்)

எல்லோரும்:—(எழுந்து நின்று கை கூப்பி வணங்கி) ஆச்சாரிய தேவரே! வரவேண்டும்! வரவேண்டும்!

சுகதர்:—(வலது கையைத் தூக்கி எல்லோரையும் நோக்கி ஆசீர்வதித்து) ஸ்வஸ்திமத்யோ பவந்து! (பிரிவாதினியை நோக்கி) ராஜகுமாரி! ஜன்மதினப் பரிசாக இம்மாலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். (கைக்குடலையிலிருந்து பூமாலை ஒன்றை எடுத்து நீட்டுகிருர். கிருஷ்ண குமாரி விஜயமாலை நீக்கிமற்றப்பெண்கள் எல்லோரும் போகிருர்கள். மந்திரி விஷ்ணுவர்மன் வருகிருன். வந்தவன் ஆச்சாரியரைக் கண்டதும் தயங்கி நிற்கிருன். பிரிவாதினி ஆச்சாரியர் கொடுத்த மாலையைக் கண்களில் ஒத்திக் கழுத்தில் தானுகை அணிந்துகொள்ளுகிருள்.

பிரி:—(வினயமாக) ஆச்சாரியதேவரே! இப்படி ஆசனத்தில் அமருங்கள்.

சுக:—ஆசீர்வாதம் செய்துபோகவே நான் இச் சமயம் இங்கே வந்தேன் தேவி! இனி எப்பொழுதாவது சமயம் வாய்த்தால்......

கிரு:-(பிரிவாதினியை நோக்கி) ஆண்டுப் பலன் யார் சொல்லுவது? அப்பாதான் தீர்த்தயாத்திரை போய்விட்டாரே.

பிரி:—ஏன் போனுல் என்ன? நீங்கள் தான் சொல்லுங்களேன்.

விஜயமாலை:—இல்லை அக்கா! ஏன் ஆச்சாரிய தேவர்தான் வந்திருக்கிருரே. அவரே சொல்லட்டுமே.

கிரு:—ஆம், அதுதான் சரி (சுகதரை நோக்கி) ஆச்சாரியதேவரே! சிரமத்திற்கு மன்னிக்க வேண்டும். தாங்கள்தான் தேவிக்கு இவ்வாண்டுப் பலனை......

சுக:-(ஆச்சரியத்துடன்) என்ன!......நானு?...

கிரு:—ஆம், ஆச்சாரியதேவரே! தாங்கள்தான். ஜீவனற்ற வீணையைத் தங்கள் விரல்கள் மீட்டும் போது வானம் வளையும், வையம் அசைந்து கொடுக்கும் என்பதை நாங்களறிவோம். உயிரற்ற ஓவியத்தில் ஜீவகலை சுழித்தோடும் தூரிகையைக் கை பிடிக்கும் தாங்கள் கை ரேகை பார்த்துப் பாக்கிய பலன் சொல்லுவதிலும் கை தேர்ந்தவர் என்பது எங்களுக்குத் தெரியும்.

சுக:—அன்புருவும் கருணை வடிவுமான அரச குமாரியின் விழி அசைந்தால் இவ்வையம் அசையும். அப்படி இருக்கும்போது நான் என்ன பலன் சொல்லட்டும்?

கிரு:—அதுதான் தெரிந்ததாயிற்றே. தேவியின் சித்தத்துக்கு மாருன காரியம் ஏதாவது நடக்குமா? கையைப் பார்த்துச் சொல்லுங்கள்.

சுக:— கட்டாயம் சொல்லித்தானுகவேண்டுமென்றுல் சொல்லுகிறேன். (சுகதர் உட்காருகிருர். பிரிவாதினி தன் கையை நீட்டுகிருள். சுகதர் கவனமாய் உற்றுப் பார்க்கிருர். அவர் முகத்தில் மாறி மாறி ஆனந்தம், சோகம், பயம் முதலிய சாயைகள் படருகின்றன. நிமிர்ந்து பிரிவாதினியின் முகத்தை ஒரு முறை கூர்ந்து நோக்குகிருர். அவள் தலையைக் கவிழ்த்துக் கொள்ளுகிருள்.)

கிரு:—(பயத்துடன்) ஆச்சாரியதேவரே! கை ரேகைகள் என்ன சொல்லுகின்றன?

சுக:—(கம்பீரமாகவும் நிதானமாகவும் ஒரே குரலில்) உஷாதேவி தன் பூரண எழிலுடன் ஆகாயவீதியில் மேலே மேலே எழுந்து செல்லுகிருள். அருணன் அவளைப் பின்தொடர்ந்து துரத்திக்கொண்டே வருகிருன். அருணனின் செங்கதிர் பட்டு உஷாதேவி இன்னும் அதிகமான சோபை பெறுகிருள். ஆனுல் இதைப் பார்த்த காற்றுக்குப் பொருமை கிளம்புகிறது. அவன் மேகத்தைத் தூண்டிவிடுகின்றுன். மேகத்துக்குஉதவியாக, சூருவளி உருவெடுத்து,காற்றும் கிளம்புகிறது. உஷாவையும் அருணனையும் அவை மூடி மறைத்துவிடுகின்றன. தங்கள் வெற்றியைக் கொண்டாடும் வரையில் இடியைக்கொண்டு முழக்குகின்றன. மின்னலைக்கொண்டு வாண வேடிக்கை நடத்துகின்றன. (குரலைத் தாழ்த்தி) ஆனுல் இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் அதிகநேரம் நீடிக்கவில்லை. மேகமும் காற்றும் இருந்த இடம் தெரியாமல் ஓடிமறைகின்றன. அருணனின் செங்கதிர் வெளிப்படுகிறது. ஆனுல் அதற்குள் உஷா அஸ்தமனமாகிவிடுகிருள்.

விஜ:—(இளமையின் கபடற்ற முறையில்) நீங்கள் வருட பலன் சொல்லுகிறீர்களா அல்லது ஏதாவது விடுகதை போடுகிறீர்களா?

சுக:—(கம்பீரமாகவும் சாந்தமாகவும்) இரண்டும்தான்.

கிரு:—(பயத்துடன்) ஆனால் அதை எங்களுக்கு விளக்கிச் சொல்லமாட்டீர்களா?

சுக:—நான் விளக்கிச் சொல்லவேண்டாம். கால தேவன் விளக்கிச் சொல்லுவான்...எனக்கு நேரமாகிறது, நான் வருகிறேன் தேவி! (எழுந்து புறப்படுகிறார். மற்றவர்களும் மரியாதைக்காக எழுந்து நிற்கிறார்கள்)

கிரு:—(சந்தேகத்துடனும் மனக்கிலேசத்துடனும்) அப்படியானால் உஷா அஸ்தமனமாகிவிடுவாள் என்றுதான் உறுதியாகச் சொல்லுகிறீர்களா?

சுக:—நான்எப்படி உறுதியாகச்சொல்லமுடியும் தேவி! தெய்வ உபாசனையாலும், தெய்வ சகாயத்தினாலும் கர்மபலனையும் மாற்றிவிடலாம். ...நான் வருகிறேன் தேவி!

விஜ:—(சுகதரிடம்) ஆச்சாரிய தேவரே! நான் வாசல்வரை வந்து உங்களை வழி அனுப்பிவைக்கிறேன் (சுகதரோடு அவள் புறப்படுகிறாள்)

பிரி:
கிரு:—வணக்கம் ஆச்சாரிய தேவரே!

சுக:—ஸ்வஸ்திமத்யோ பவந்து (போகிறார்)

பிரி:—(கிருஷ்ண குமாரியிடம்) ஆச்சாரிய தேவர் சொன்ன வருடபலன் உங்களுக்கு ஏதாவது புரிந்ததா தேவி?

கிரு:—புரியாமலென்ன? உஷா, அருணன், புயல், மேகம், இடி, மின்னல், உஷா தேவியின் அஸ்தமனம்—இவ்வளவுதானா? உஷா தேவி அஸ்தம



னம்தான் ஆகவேண்டுமா?...தேவி! இந்தப்பல னைக் கேட்டதிலிருந்து என்மனம் என்ன என் னவோபடுகிறது.

பிரி:—எதற்காக இவ்விதம் கலக்கமடைகி றீர்கள்?

கிரு:—இவ்வளவு போராட்டத்துக்குப் பிறகு கடைசியில் உஷாவுக்கு அஸ்தமனம் தானு கிட்ட வேண்டும்? எவ்வளவு பயங்கரமான முடிவு.

பிரி:—முடிவு எப்படி இருந்தாலென்ன? அதற் காக நான் அஞ்சவில்லை தேவி! புயல், மேகம், இடி மின்னல் மேகம் மூடி மறைப்பது ஆச்சா ரிய தேவர் கூறிய எல்லாவற்றிற்கும் எனக்கும் உண்மையான பொருள் தெரியும். ஆனல் அதற் காக நான் மனம் கலங்கவில்லை. அவர் கூறியபடி தெய்வ உபாசனையால், தெய்வ உதவியால் தீய சக்திகளை எதிர்த்துப் போராடுவேன், தெய்வம் எனக்குக் கைகொடுக்கும். இதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

கிரு:—தெய்வமும் கை விட்டுவிட்டால்...

பிரி:—தெய்வம் ஒருபோதும் கை விடாது. அப் படி விட்டுவிட்டாலும் அதற்காக அஞ்சப்போவ தில்லை. என் உடலில் உயிர் உள்ளவரை எதிர்த் துப் போராடியே தீருவேன். ஆனல் ஒன்றே ஒன்று.

கிரு:—என்ன அது?

பிரி:—புயல், இடி, மின்னலோடு நான் எதிர்த் துப்போராடும்போது நீங்களாவது எனக்குப் பக்க பலமாக நிற்பீர்கள் அல்லவா?

கிரு:—இதில் கொஞ்சமும் சந்தேகம் வேண் டாம் ராஜகுமாரி! நான் ஆணையிட்டுச் சொல்லு கின்றேன். பிரளயம் வந்தாலும் உங்கள் பக்கத் தில் நிற்பேன். இதில் சிறிதும் சந்தேகம் வேண் டாம் நான் போய்வருகிறேன். எனக்கு நேரமா கிறது (கிருஷ்ணகுமாரி போகிருள்)

விஷ்ணுவர்மன்:— (உதட்டைச் சுவைத்துக் கொண்டு கிண்டலாக) சந்நிதானத்தில் நானும் நிற்கிறேன் தேவி! பார்வையை இப்பக்கமாகக் கொஞ்சம் திருப்பக்கூடாதா?

பிரி:— (திடுக்கிட்டுச் சிரித்துக்கொண்டே) மன்னியுங்கள்! நீங்கள் வந்ததே எனக்குத் தெரியாது.

விஷ்:—(கிண்டலாக) அதெப்படித் தெரியும்? உங்கள் மனம் சிந்தனை எல்லாம்தான் வேறு எங்கோ வட்டமிட்டுக்கொண்டிருக்கின்றனவே (சிரிக்கிருன்) ஹ - ஹ - ஹ - ஹ.

பிரி:—வேறு எங்கே வட்டமிட்டுக்கொண்டிருக் கிறது?

விஷ்:—(கேலியாகவும் பொருமையுடலும்) உங் கள் கர கமலத்தைப்பார்த்து வருடபலன் சொல் லும் பாக்கியம் யாருக்குக் கிட்டியதோ, உங்கள் கழுத்தில் யார் மாலை புன்னகை பூக்கப் புரண்டு விளையாடுகிறதோ அவரைச் சுற்றி (வரட்டுச் சிரிப்புடன்) அப்படித்தானே?...ஹ - ஹ - ஹ.

பிரி:—மந்திரியாரே! என்ன சொன்னீர்கள்?

விஷ்:—(கேலியாக) என்ன சொன்னேன்? கண் ணுல் கண்டு, காதால் கேட்டு, மதியால் தெளிந் ததைப் புதிர்போடாமல் விளக்கமாகச் சொன் னேன், சுகதரைப்போல் புதிர்போட்டுப் பேச எனக்குத் தெரியவும் தெரியாது, வரவும் வராது.

பிரி:—என்ன ஏதேதோ உளறுகிறீரே!......... சுகதர் யார் தெரியுமா? எனக்கு மட்டுமல்ல, அரசி யான என் அன்னைக்கும் குருதேவர். அமராவதி* பௌத்த மடாலய பிரதான ஆச்சாரியரான அவரை என் அன்னைதான் இங்கே அழைத்து வந்தார்கள். இது தெரியாமல் ஏதேதோ பிதற்று கிறீரே.

விஷ்:—நான் ஒன்றும் பிதற்றவில்லை தேவி! பிதற்ற நான் பித்துக்கொள்ளி ஒன்றுமில்லை. சுய புத்தியோடுதான் நானிருக்கிறேன். சுயபுத்தி யோடுதான் பேசுகிறேன். பார்க்கிறேன். உங்கள் உள்ளக் கிளர்ச்சிதான் முகத்தில் எதிரொலிக் கிறதே. ஒருவனிடம் செல்வம் அளவுக்கு மீறிக் குவிந்துவிட்டால் கண் தெரியாதென்று சொல்லு வார்கள். உங்களுக்குக் குருபக்தி அளவுக்கு மீறி விட்டது. அதனல்தான் நான் வந்ததுகூட உங்க ளுக்குக் கண் தெரியவில்லை போலிருக்கிறது...... சரி. அதெல்லாமிருக்கட்டும், சுகதர் தங்கள் குரு என்று சொல்லுகிறீரே. அவரிடம் ஒருநாளாவது தாங்கள் பாடம் கேட்டதுண்டா?

பரி:—பாடம் கேட்காவிட்டால் என்ன? பாடம் கேட்டால்தான் குருவா? என் அன்னைக்குக் குரு வென்ருல் எனக்கும் அவர் குருதானே? என் அப்பா உங்களுக்கு மன்னன் என்ருல் உங்கள் பிள்ளைக்கும் மன்னன்தானே. இந்தச் சாதாரண உண்மைகூட உமக்குத் தெரியாமல்போனதேன்?

விஷ்:-தெரியாமலென்ன? மன்னிக்கவேண்டும். தங்கள் அன்னைக்கு யாராவது உடன்பிறந்தா ரிருந்தால் அவர் தங்களுக்கும் உடன்பிறந்தார் தானு? அரசரை வேண்டுமானல் நீங்கள் ஏமாற் றலாம், என்னையும் அரசசபையையும் ஏமாற்ற முடியாது. பல்லவ அரசகுமாரியின் உள்ளம் இப்பொழுது எப்பக்கமாக நிலைபெயர்ந்திருக்கிற தென்பதை நானறிவேன். மக்களும் அறிவர்.

பிரி:—(சற்றுக் கடுமையாக) மந்திரி! எங்கே யாரோடு பேசிக்கொண்டிருக்கிறீர் என்பது ஞாபகமிருக்கட்டும். நிதானமாகப்பேசும்.

விஷ்:—நான் நிதானமாகத்தான் பேசுகிறேன் தேவி! நிதானம் தவறி ஒன்றும் பேசவில்லை.

பிரி:—மதுவெறியில் உள்ளவன் நிதானம் கெட்டுப் பேசுவதைப்போல்தான் நீங்கள் இப்பொழுது பொறாமை வெறியில் நிதானம் கெட்டுப் பேசுகிறீங்கள்.

விஷ்:—பருவவெறியில் நிதானம் கெட்டுப் பேசுவது நீங்களா நானா என்பதை வருங்காலம் சொல்லும். ஆனால் ஒன்று மாத்திரம் உங்களை எச்சரிக்கிறேன். கண்ணை மூடிக்கொண்டு படுகுழியை நோக்கி நீங்கள் ஓடிக்கொண்டிருக்கிறீர்கள். தவறிவிழுந்தால் பிறகு எழுந்துவரவே முடியாது.

பிரி:—அதைப்பற்றி எல்லாம் நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம். தவறி விழுந்தாலும் உங்களை உதவிக்கழைக்கமாட்டேன். இதை நீங்கள் உறுதியாக நம்பலாம். (பேச்சை மாற்றி) அதெல்லாமிருக்கட்டும். நீங்கள் இங்கே வந்த காரியம் என்ன? ஏதாவதிருந்தால் சொல்லுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் போய் வாலாம்.

விஷ்:—ஒன்றுமில்லை. உங்கள் பிறந்த தினத்திற்கு உங்களைப் பார்த்து வாழ்த்துக் கூறிவிட்டு அன்பளிப்பாக இந்த மலர்மாலையைக் கொடுத்துவிட்டுப் போகலாமென்று வந்தேன். (மலர்மாலை ஒன்றை எடுத்து நீட்டி) இதோ, இதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

பிரி:—(மாலையை வெடுக்கென்று பிடுங்கிப் பிய்த்து அவன் முகத்தில் வீசி ஆவேசமாக) உங்கள் வாழ்த்தும் எனக்கு வேண்டாம். அன்பளிப்பும் வேண்டாம். உங்கள் அன்பளிப்பை நீங்களே எடுத்துக்கொண்டு போகலாம்.

விஷ்:—(பிய்த்தெறிந்த மாலையைப் பொறுக்கி எடுத்துக் கபடமாக நகைத்துக்கொண்டே) போகிறேன் தேவி? என் மாலையைப் பிய்த்து எறிந்து என்னை அவமானப்படுத்தியதற்குப் பலிக்குப்பலி எடுக்காவிட்டால் நான் விஷ்ணு வர்மனல்ல.

பிரி:—(ஆவேசமாக) என் முன் நிற்க வேண்டாம். ஆண் சிங்கமானால் உம்மால் ஆனதைப் போய்ப் பாரும். (போகிறான்)

2

இடம்:—அரண்மனை, விஷ்ணு ஆலயம்.

நேரம்:—பௌர்ணமி இரவு.

(ஒரு தட்டில் புஷ்பம், தீபம், வெற்றிலை, பாக்கு, துளசி பத்திரம், ராத்திரி போஜனம் இவ்வளவையும் வைத்துத் தூக்கிக்கொண்டு வந்து விஷ்ணு பகவானின் மூர்த்தியின் முன் வைத்து நிவேதனம் செய்து போஜன பாத்திரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு வெளியே வருகிறாள் கிருஷ்ணகுமாரி. அதே சமயம் மற்றொரு பக்கத்திலிருந்து பல்லவ சேனாதிபதி பம்பாபதி அங்கே வந்து சேருகிறான்.)

பம்பாபதி:—தேவி?

கிருஷ்ணகுமாரி:—(திடுக்கிட்டுத் திரும்பி) யாரது?

பம்:—நான்தான் பம்பாபதி.

கிரு:—ஓ! சேனாதிபதியா? இந்நேரத்தில் இங்கே என்ன விசேஷம்?

பம்:—ஒன்றுமில்லை. உங்களிடம்தான் ஒரு காரியமாக வந்தேன்.

கிரு:—என்னிடம் அப்படி என்ன காரியம்? சொல்லுங்கள்.

பம்:—நம் அரசகுமாரிகள் இருவரும் இனிமேல் தங்களிடம் சங்கீதம் கற்றுக்கொள்ள மாட்டார்கள்.

கிரு:—ஏன் அப்படி? நான் என்ன அப்படித் தவறு செய்தேன்?

பம்:—அதெல்லாம் எனக்கு என்ன தெரியும்? இனிமேல் அவர்கள் சுகதரிடம் சங்கீதம் கற்றுக்கொள்ளப்போகிறார்களாம்.

கிரு:—சுகதரிடமா! உங்களிடம் யார் இதைச் சொன்னது?

பம்:—நம் மந்திரி விஷ்ணு வர்மர்தான்.

கிரு:—(சந்தேகத்துடன்) அவர்தானே சொன்னார்?

பம்:—ஆம் அவர்தான். ஏன் அவர் வார்த்தையில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

கிரு:—நம்பிக்கை இல்லை என்று யார் சொன்னார்கள்? ஆனால் இது நம்பக் கூடியதாக இல்லை.

பம்:—அவர் வார்த்தையை நம்பாவிட்டால் போகிறது. இதோ அரசர் ஆக்ஞாபத்திரமிருக்கிறது. அதையாவது நம்புகிறீர்களா? (ஆக்ஞாபத்திரத்தை வெளியே எடுக்கிறான்.)

கிரு:—அந்த ஆக்ஞாபத்திரத்தில் என்ன எழுதி இருக்கிறது? நான் படிக்காவிட்டால் என்ன? நீங்கள்தான் சொல்லுங்களேன்.

பம்:—அரசகுமாரிகளுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்கச் சுகதரை நான் போய் அழைத்து வரவேண்டும் என்பது அரசர் கட்டளை.

கிரு:—ஆனல் ஆச்சாரியதேவர் இதற்குச் சம்மதிப்பாரா என்பதுதான் எனக்குச் சந்தேக மாக இருக்கிறது.

பம்:—ஏன்?

கிரு:—ஏனென்று கேட்கிறீர்கள். கல்யாண மாகாத கன்னிகைகளுக்கு வாலிப ஆச்சாரியர்கள் பாடம் கற்பிப்பது பாரதப்பண்பாடல்ல.

பம்:—பண்பாடோ இல்லையோ. அதைப்பற்றி யெல்லாம் எனக்குக் கவலை இல்லை. யாராக இருந் தாலும் சரி, அரசர் கட்டளைக்குப் பணிந்துதானக வேண்டும்.

கிரு:— ஆனல் ஆச்சாரியதேவர் அப்படிப் பணிந்துபோகக் கூடியவரல்லவே.

பம்:—பணிவதோ பணியாததோ அவர் இச் சையைப் பொறுத்ததல்ல. பல்லவசேனதிபதி அரசர் கட்டளை எடுத்துப்போகிறன். யாரா யிருந்தாலும் அதற்குப் பணிந்துதான் ஆக வேண்டும்.

கிரு:—பணியாவிட்டால்?

பம்:—பணியாதவர் யாரும் இந்தப் பல்லவ நாட்டு எல்லைக்குள் இருக்கமுடியாது?

கிரு:—இருந்தால்?

பம்:—இருந்தால் என் கத்திக்குப் பலியாக வேண்டியதுதான்.

கிரு:-உம்முடைய கத்திக்குப் பலியாக ஆச்சாரிய தேவர் அப்படி ஒன்றும் ஆட்டுக்குட்டியல்ல. அவர் விஷயத்தில் சற்று நிதானமாகவே நீங்கள் நடந்துகொள்ளவேண்டும் சேனபதி! அவ்வளவு தான் நான் சொல்லுவேன்.

பம்:—தங்கள் புத்திமதி எனக்குத் தேவை இல்லை. எப்படி நடந்துகொள்ளுவது என்பது எனக்குத் தெரியும்.

கிரு:—தெரிந்தாலும் சரி. தெரியாவிட்டாலும் சரி. நீங்கள் போய்வரலாம். எனக்கு நேர மாகிறது. (கிருஷ்ணகுமாரி போகிறள். பம்பா பதி அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த் துக் கொண்டு நிற்கிறன். அவனுக்குப் பின்பக்க மாக மகதநாட்டுத் தூதுவன் சண்டசேனன் வந்து அவன் தோளைப்பிடித்துக் குலுக்குகிறன்.)

பம்:—(திடுக்கிட்டுத் திரும்பி) யாரது?

சண்:—பயப்பட வேண்டாம். ஒருவருமில்லை அண்ணே!........தங்களுடைய நிலையைப்பார்க்க எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது.

பம்:—ஏன் சண்டா?

சண்:-பல்லவ சேனதிபதி என்று கொஞ்சமும் மதியாமல் தங்களிடம் ஒரு பெண், அதுவும் பிரா மணப்பெண் அப்படிப் பேசினளே, அதைக் கேட்டுக்கொண்டு நீங்களும் ஹி ஹி ஹி என்று நின்றீர்களே. இதைப் பார்க்கத்தான் எனக்கு மிகவும் பரிதாபமாக இருந்தது.

பம்:-(ஆவேசமாக) கேட்டுக்கொண்டில்லாமல் அவளோடு என்னை என்ன சண்டைபோடச் சொல்லுகிறீர்களா?

சண்:—ஒரு பெண்ணேடு யாராவது சண் டை போடச்சொல்லுவார்களா! அவள் எவ் வளவு துடுக்காகப் பேசுகிறள். நீங்கள் பேசா மல் கேட்டுக்கொண்டு நிற்கிறீர்களே. ஜாக்கி ரதை! நான் யார் தெரியுமா? வாயை அடக்கிப் பேசு என ஒரு தடவையாவது அவளை எச் சரித்திருந்தால் அவள் அவ்வளவு தூரம் அகங் காரமாகப் பேசியே இருக்கமாட்டாள்.

பம்:—(மனக் கிலேசத்துடன்) அப்படியானல் அவள் பேசியதெல்லாம் நீங்களும் கேட்டுக் கொண்டுதானிருந்தீர்களா?

சண்:—கேட்டுக்கொண்டில்லாமல் என்ன செய்வது? யக்ஞவல்கியருக்கும் கார்க்கிக்கும் நடந்த தர்க்கப் போராட்டம் முழுவதையும் கேட்டுக்கொண்டுதானிருந்தேன். ஆனல் இதில் எனக்கு ஒரே ஒரு வருத்தம். புராணக் கதை யில் நடந்த தர்க்கப் போராட்டத்தில் வென்ற வர் யக்ஞவல்கியரே. ஆனல் இங்கே இப் பொழுது நடந்தப் போராட்டத்திலோ வென் றது கார்க்கிதேவியே?

பம்:—நீர் சொல்லுவது ஒன்றும் எனக்குப் புரியவில்லையே! வெற்றி தோல்வி என்ற பேச்சுக்கே இங்கே இடமில்லையே.

சண்:—நீங்கள் சொல்லுவதும் ஒரு வகைக்கு உண்மைதான். அதெல்லாம் மூக்கு உள்ளவர் களுக்குத்தான் தெரியும். இல்லாதவர்களுக்கு (மூக்கைப் பிடித்துக்கொண்டு மூக்கரையன் மாதிரி) எல்லாம் ம்ஹ, ம்ஹ, ம்ஹதான்.

பம்:—இதோ பார் சண்டா! (சற்றுக் கடுமையாக) நண்பனென்றாலும் வேடிக்கைக் கும் விளையாட்டுக்கும் ஒரு வரம்பு உண்டு. தெரியுமா?

சண்:—தெரியும் நண்பா! சேனாதிபதியின் அதிகாரத்துக்கும் ஒரு வரம்பு உண்டு. உங்கள் மன்னன் அதிகாரத்துக்கும் ஒரு வரம்பு உண்டு. தெரியுமா?

பம்:—என்னுடைய அதிகாரத்துக்கு வேண்டுமானால் ஒரு வரம்பிருக்கலாம். எங்கள் மன்னன் அதிகாரத்துக்கு எவ்வித வரம்புமில்லை.

சண்:—ஏன் இல்லை? நான் உங்கள் நாட்டில் உங்கள் மன்னன் அதிகார எல்லைக்குள் தானிருக்கிறேன். ஆனால் உங்கள் மன்னன் அதிகார வரம்புக்கு நான் பூரணமாக உட்பட்டவனல்ல. ஆச்சாரியதேவரும் அப்படியே. (மன்னன் மகேந்திரனின் அங்கரட்சகன் நாகநந்தி வருகிறான்.)

பம்:—(ஆவலுடன்) நாகநந்தியாரே! என்ன விசேஷம்? இங்கே இவ்வளவு அவசரமாக வந்த காரியம் என்ன?

நாகநந்தி:—தங்களிடம்தான் ஒரு அவசர காரியமாக வந்தேன்.

பம்:—என்னிடம் அப்படி என்ன அவசர காரியம்? இப்பொழுதுதானே மன்னரைப் பார்த்துவிட்டு வருகிறேன்?

நாக:—மன்னர்தான் என்னை அவசரமாக உங்களிடம் அனுப்பி வைத்தார். ஆச்சாரிய தேவர் மடாலயத்தில் அரசகுமாரிகளுக்குப் பாடம் கற்பிக்க ஒருப்படாவிட்டால் அந்தப்புரத்துக்கே வந்து கற்பிக்கலாம் என அவரிடம் சொல்லச் சொன்னார்.

பம்;—அதற்கும் அவர் ஒருப்படாவிட்டால்?

சண்:—ஒருப்படாவிட்டால் என்ன? நான் கற்பிக்கிறேன்.

பம்:—(சண்டனை நோக்கி) சண்டரே! விளையாட்டுக்கும் வேடிக்கைக்கும் இது சமயமல்ல?

நாக:—நீங்கள் அவரிடம் அரசரின் வேண்டுகோளைச் சொல்லுங்கள். அவர் அதற்கு என்ன பதில் சொல்லுகிறாரோ அதை வந்து அரசரிடம் சொல்லிவிடுங்கள். அவ்வளவுதானே! இன்னொரு விஷயமும் அரசர் உங்களிடம் சொல்லச் சொன்னார். ஆச்சாரியதேவரிடம் மிகவும் மரியாதையாகவும் பணிவாகவும் நடந்துகொள்ள வேண்டுமாம்.

பம்:—எனக்கென்ன? உத்தரவுப்படியே நடந்து கொள்ளுகிறேன்.

நாக:—சரி, அப்படியானால் நான் வருகிறேன். (நாகநந்தி போகிறான்)

நாட்டின்
நல் வளம்
பெருக ....

ஒவ்வொருவரும் நோயற்ற வாழ்வுடன், கல்வியறிவை அடைந்து நாட்டில் வறுமையை விரட்டி, செல்வமும் செழுமையும் நிறைந்து விளங்கச் செய்வதற்கான ஐந்து வருடத் திட்டமொன்று உருவாகியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் நாட்டில் பள்ளிக்கூடங்கள், வைத்திய சாலைகள், ஆராய்ச்சிக் கூடங்கள், மின்சார விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் இவைகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட் சிமெண்ட்
அனேக தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் உபயோகிக்கப்பட்டு வருகிறது

சங்கர் SANKAR IC BRAND பிராண்ட்

போர்ட்லண்ட் ஸிமெண்ட்

திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது

தயாரிப்பவர் :
இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட்
தொழிற்சாலை :
சங்கர் நகர், :: திருநெல்வேலி ஜில்லா
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
11/12, ஸெகண்ட்லைன் பீச், மதராஸ்.

பம்:—(சண்டசேனனை நோக்கி) சண்டரே! நீங்களும் வருகிறீர்களா, மடாலயத்திற்குப் போவோம்.

சண்:—இல்லை அண்ணே! எனக்கு வேலை இருக்கிறது. நீங்கள் போய் வாருங்கள். ஆனால் ஒன்று மட்டும் ஜாக்கிரதை! மூக்கைப் பறிகொடுத்து விட்டுச் சூர்ப்பணகை மாதிரி வந்து நிற்க வேண்டாம். ஜாக்கிரதை!

பம்:—உங்கள் மூக்கு சரியாக இருக்கிறதா என முதலில் பார்த்துக்கொள்ளுங்கள். பிறகு என் மூக்குக்கு வரலாம்.

சண்:(மூக்கைப்பிடித்து ஆட்டி) என் மூக்கு சரியாகத்தானே இருக்கிறது. (மந்திரி விஷ்ணு வர்மன் வருகிறான்) அதோ மந்திரியார் வருகிறார். நான் போகிறேன். நேரமாகிறது. மூக்கு ஜாக்கிரதை. ஞாபகமிருக்கட்டும். (சண்டசேனன் போகிறான்.)

விஷ்:—(சற்று உரத்த குரலில்) சேனாபதி!

பம்.—வணக்கம் மந்திரியாரே!

விஷயத்தைக் கிருஷ்ணகுமாரியிடம் சொன்னீர்களா?

பம்:—நான் சொன்னேன். ஆனால் அதற்கெல்லாம் அவள் அசைபவளாகத் தெரியவில்லை.

விஷ்:—நான் சொல்லுவதைக்கேள் சேனாபதி! நம்மை அவமானப்படுத்திப் பாதாளப் படுகுழியில் தள்ளப்பெரும் சதிஒன்று நடக்கிறது. அதை வளரவிடாமல் முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். வளரவிட்டால் நமக்கே பேராபத்தாக வந்து முடியும்.

பம்:—நானிருக்கும்போது நீங்கள் எதற்காகவும் கலங்கவேண்டாம். பம்பனுக்கு விரோதமாகச் சதிசெய்தவன் யாரும் இந்தப் பல்லவ நாட்டில் உயிரோடிருக்கமுடியாது.

விஷ்:—பம்பா! நீ நினைக்கிறபடி அந்தச் சதிகாரனை ஒழிப்பது அவ்வளவு சுலபமல்ல. அவன் வேறு எங்குமில்லை. இங்கேதான் இருக்கிறான். நான் உனக்காக இத்தனை நாள் கட்டிவந்த கோட்டையிலும் இப்பொழுது அவன் வந்து புகுந்துவிட்டான்.

பம்:—நீங்கள் சொல்லுவதொன்றும் எனக்குப் புரியவில்லையே! யாரவன்?

விஷ்:—இப்படிப் பக்கத்தில் வா சொல்லுகிறேன். (பம்பாபதியைப் பக்கத்தில் இழுத்து அவன் காதில் குசு குசு என) உன் எதிரி அரசகுமாரிக்குக் குரு என்ற கபட வேஷத்திலிருக்கிறான். அவனிடம் அரசகுமாரியைப் பாடம்கேட்க அனுமதித்தால் நம்திட்டம் கைகூடாது. அரசகுமாரியை அடையும் உன் ஆசையும் மண்ணாகிவிடும்.

பம்:—இது நானுயிரோடிருக்கும் வரை ஒருபோதும் நடக்காது. நான் இப்பொழுதே போய் இச்சதியைக் கிள்ளி எறிகிறேன் (பம்பாபதி வேகமாகப் போகிறான்)

விஷ்:—(கபடமாக அவன் போன திசையை நோக்கிப் பார்த்துக்கொண்டே தனக்குத்தானே) வைக்கோல்போரில் நெருப்பு வைத்தாகிவிட்டது. இனி புயல் கிளம்பும். நெருப்பும் புயலும் சேர்ந்து பேயாட்டமாடும்போதுதான் ராஜகுமாரிக்குத் தெரியும்விஷ்ணு வர்மன் யார்? குருதேவர் யார்? என்று (கோரச் சிரிப்புச் சிரிக்கிறான்) ஹ ஹ ஹ.

(தொடரும்)

ஒவ்வொரு தினமும் உங்கள் குழந்தைகள் அழுக்கிலுள்ள கிருமி களின் அபாயத்துக் குள்ளாகலாம்.
இந்தக் கிருமிகளை லைப்பாய் சோப்பினால் கழுவிக்களைந்து தினமும் அவர்களைக் காப் பாற்றுங்கள்.
லைப்பாய் சோப்
தினசரித் தொல்லையான அழுக்கி லிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.
லைப்பாயின் "பாதுகாக்கும் நுரை" குழந்தை களின் ஆரோக்கி யத்தைக் காப் பாற்றுகிறது.
LIFEBUOY SOAP
இந்தியாவில் தயாரித்தது.
L. 249-X52 TM

சாரதா

மூலம் - மலையாளம் - **ஜெயதேவ்**

மொழிபெயர்ப்பு: **எஸ். பி. ராமகிருஷ்ணன்**

ஜன்னல் கம்பிகளில் முகமமர்த்திக்கொண்டு சாரதா நீல நிற மேகங்கள் நிறைந்த ஆகாயத்தை நோக்கிக் கொண்டிருந்தாள். வானிலே மின்னும் சில நட்சத்திரங்கள் அவளை நோக்கி, புன்சிரிப்பதுபோல இருந்தது. அவைகளை உற்று நோக்கிக் கொண்டு அவள் சிறிது நேரம் அப்படியே சிலை மாதிரி நின்று கொண்டிருந்தாள்.

நிமிஷங்கள் நெளிந்து நெளிந்து மெதுவாக நீண்டு கொண்டிருந்தன.

இரண்டு தினங்களிலே அவளுக்குத் திருமணம் நடக்கப்போகிறது. திருமணத்தின் பிறகு எங்ஙனம் நடக்க வேண்டும் என்பதைப் பற்றி அவள் யோசித்துக் கொண்டிருந்தாள். முடிவான ஒரு நிலைமைக்கு வர அவளால் முடியவில்லை. அவளது கற்பனைக்குதிரை அதிவேகமாகச் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. சுவரில் மாட்டப் பட்டிருந்த ஒரு போட்டோவை எடுத்து நோக்கினாள். முறுக்கி விடப்பட்ட மீசை—தடித்த சரீரம்— மாறு கண்ணுகள்— பயங்கரமான பார்வை இவை எல்லாம் இப்படி யிருப்பினும் அந்த உருவத்தின் முகத்திலே அன்பின் சாயல் பிரதிபலித்தது. இன்னும் இரண்டு தினங்களிலே அவள் அந்த மனிதரின் தர்மபத்தினி ஆகப் போகிறாள். அவரைத் திருமணம் செய்து கொள்ள அவளுக்கு முதலில் இஷ்டமில்லை, அப்பப்பா! எத்தனை குறைவுள்ள மனிதன்—ஒரு கால் சுவாதீனமில்லை–மாறு கண்ணுகள்—முக முழுவதும் அம்மைத் தழும்புகள்; ஆனால் அவர் தான் அவளது கணவனாகப் போகிறார். அவள்கூட சம்மதமும் தெரிவித்து விட்டாள். காரணம்: அவளது வாழ்விலே போட்டியிடும் முதல் மாப்பிள்ளை இல்லை. யாரும் தனக்காகப் போட்டியிட்டு வராத 27 ஆண்டுகளில் தைரியமாக முன் வந்த தைரியசாலி என்பதற்காகத் தான். வாழ்வுபற்றிக் கனவு கண்டு கொண்டிருந்த அவளது இருளடைந்த வாழ்விற்கு அந்தச் சம்பவம் தான் ஆசையின் கிரணங்களை வாரியிறைத்தது. குடும்ப வாழ்வில் ஏற்படும் இரவு பகல் போன்ற போராட்டப் படிகளை அவள் தாண்ட ஆசைப்பட்டாள். அவளது ஆசை நிறைவேறும் சமயம். வாழ்விலே சிரிப்பதற்குக் கிடைத்த ஒரு நிமிஷத்தை அழுவதற்காகக் கிடைத்த மணிகள் விழுங்கி விட்டனவே. ஒரு துளி போன்ற சந்தோஷம் ஏற்பட்டால் மலை போன்ற துக்கம் உண்டாயிருக்கிறதே. அவளுக்கு எப்பொழுதாவது சிரிப்பு உண்டானால் அப்பொழுதே அழுகை அதை அடக்கி விடுமே. இப்படிப்பட்ட துயருள்ள வாழ்விலிருந்து சுதந்திரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையால் குறையுள்ளவனுக்குக் குற்றேவல் செய்யும் பத்னியாக மாற ஒப்பினாள்.

அவள் அந்தப் போட்டோவை மார்பில் அமர்த்திக் கொண்டு படுக்கையில் சாய்ந்தாள். கண்களை மூடிக் கொண்டு கனவு காண முயன்றாள். அவளை அறியாமலே ஒரு பெருமூச்சு! உலைக்களத்தில் இருந்து 'புஷ்' என்று வருவது போல,

* * * * *

அவளுடைய தமக்கை. தங்கைகளுக்கெல்லாம் திருமணம் நடந்து ஒவ்வொருவரும் இரண்டு மூன்று குழந்தைக்குத் தாயாக இருக்கின்றனர். ஆனால் அவளோ! ஒருவர்கூடத் திரும்பிப் பார்க்கவேயில்லையே, சாரதா எத்தனையோ தடவை அழுது புலம்பியிருக்கிறாள். மனம் நொந்து ஈசுவரனை வேண்டியிருக்கிறாள். பலன் இல்லை. உயிரை மாய்த்துக் கொள்ளலாம் என்று கூட எண்ணியிருக்கிறாள், ஆனால் அவளது மனச்சாட்சி அவளை அனுமதிக்கவில்லை,

அவள் குடும்பத்திலே எல்லோரும் அழகுள்ளவர்கள். ஆனால் அவள் மாத்திரம் அழகற்றவள். இந்த வித்தியாசம் அவளைச் சிந்திக்கச் செய்தது. மற்றவர்களெல்லாம் படிப்பிலே கெட்டிக்காரர்

கள் .அந்த விஷயத்திலும் சாரதா பின்னுலேயே இருந்தாள். படிக்க முடியாது போய்விட்டது. அதற்கு முன்பே அவள் அடுக்களையை அபயம் தேடிவிட்டாளே!

மூத்த சகோதரியின் திருமணத்தின் போது அவளது மனம் மகிழ்வுக் கடலிலே மூழ்கியது. அடுத்த திருமணம் தனக்கல்லவா என்று எண்ணினுள். ஆனுல் அது வெறும் எண்ணமாயிருந்தது. பகற் கனவாக இருந்தது. அவளுடைய எண்ணங்கள் தகர்ந்து சின்னுபின்னமாயின.........

வர்ணங்கள் நிறைந்த பூ, மணம் விசி அலர்ந்து கொண்டு இருக்கிறது. வண்டுகளின் ரீங்காரம் கேட்க அவைகளின் வருகையை வழி மேல் விழி வைத்துக்கொண்டு எதிர்பார்த்திருந்தது. ஆனுல் திடீரென்று பெரும் காற்று வந்து அதை இருந்த இடம் தெரியாமல் அழித்து விட்டது. சாரதாவின் இன்பமான எதிர் காலம் நம்பிக்கை இல்லாது போய்விட்டது.......

அவளுடைய இளைய சகோதரி புன்னகையின் புது நிலவு—கோலக்குயிலோசை—வாலைக்குமரி—அழகுத் தெய்வமாக வளர்ந்து வருகிருள். பொருமை கலந்த பார்வையோடு அவள் நோக்கிக் கொண்டிருக்கிருள், கனவு காணும் கண்கள்—சிவந்த அதரம்—முத்தொளிப் பற்கள்—அழகான கன்னங்கள்—அவளைச் சித்திக்கத் தூண்டியது.

அவள் கண்ணுடி எடுத்து நோக்கினுள். செத்த மீன் கண்கள் போன்ற கண்கள்—தடித்த உதடுகள்—முகமுழுவதும் பருக்கள்—அவைகளின் நுனியிலே ஒரு கருமையான படர்ச்சி.

இளைய சகோதரிக்குத் திருமண ஆலோசனைகள் ஒன்றன் பின் ஒன்ருக வந்து கொண்டேயிருந்தன. தாயும் தந்தையும் துன்பமடைந்தனர். மூத்தவள் பிராயமாகி இருக்கும்போது எப்படி இளையவளைக் கட்டிக்கொடுப்பது என்று சாரதாவின் மனவேதனையை அவர்கள் அறிந்திருந்தனர். அவர்களால் என்ன செய்யமுடியும்!

"பெண்களுக்குத் தகுந்த மாப்பிள்ளை கிடைக்கும் போது கட்டிக் கொடுக்க வில்லையென்ருல் பிறகு சங்கடம் தான்" பலரும் கூறினர்.

சாரதாவின் சகோதரி திருமணம் நிச்சயிக்கப்பட்டது. தங்கையின் வாழ்விலே ஒரு பொன்னுள். ஆனுல் சாரதாவுக்கு ஒரு துக்க தினமாக இருந்தது. வெறுத்த முகத்தோடு துன்பம் இருதயத்தை அமுக்க, விம்மும் வேதனையோடு வீட்டில் அங்குமிங்கும் சுற்றி நடந்தாள். புதிதாகப் பிறந்த கன்றுக் குட்டி துள்ளிக் குதித்து விளையாடுகிறது. ஆடியோடி ஆனந்திக்கிறது. பல நாட்களுக்குப் பிறகு அது ஏரிலே கட்டுவதற்கு அதன் கழுத்திலே கயிறு போடப்பட்ட உடனே அது மெல்ல மெல்ல இளைக்க ஆரம்பிக்கிறது. அதன் முகத்திலே வாட்டமும் துன்பமும் தோன்றுகின்றன. சாரதா ஆடி ஓடி மகிழ்ந்தது போய் தனது தங்கை திருமணத்திற்குப் பிறகு துயரே உருவாகிவிட்டாள். ஒரு மணவாளனை அன்புபாராட்டவும் கடமை செய்யவும் அவளது இருதயம் படபடத்தது. ஆனுல்...

"பாவம் சாரதா. நல்ல குணம். ஹூம். அவளுடைய யோகம்" இரக்கச் சிந்தையோடு பலரும் அவளைப் பற்றி வருந்திக் கூறினர்.

அந்தத் திருமணத்திற்குப் பிறகு அவளுடைய வாழ்வில் ஒரு பெரிய வித்தியாசம் ஏற்பட்டது. சாந்தமே குடிகொண்டிருந்த அவள் கோபத்தின் இறுதிக் கோடாக மாறினுள். வீட்டிலே வேலைக்காரர்களை அனுவசியமாக அதட்டுவாள். குழந்தைகளை அழவைப்பாள். எல்லாம் முடிந்தால் அறைக் கதவுகளை மூடிக்கொண்டு அழுவாள்.

தாய் தந்தையர்களுக்கு ஒரு பாரமாகினுள். தாய் தந்தையர்களுக்குள் அவள் காரணமாகச் சண்டைகள்கூட ஏற்படும்.

"பின்னே பெண்ணை இப்படி வைத்துக் கொண்டிருப்பது நல்லதா"

"நான் என்ன செய்றது. தலையிலே வைத்து நடக்கனுமா?"

"கழுதைக்குக் கலியாண நேரம் இல்லை?"

இதெல்லாம் அவள் கேட்கும் போது அவளது மனம் வேதனைப்படும். பாவம் அவள் என்ன செய்வாள்?

பொன்னும் புகழும் ஒருங்கே பெற்ற குடும்பம் அவர்களுடையது. ஸ்திரீதனமாக ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பல ஏகர் நிலங்கள் தர அவர்கள் தயார் தான். இருப்பினும் யாரும் வரவில்லை.

மற்றவர்களின் குழந்தைகளை ஆவேசத்தோடு வாரி எடுத்து அவள் கடித்து முத்தம் கொடுக்கும் போது அவளது அணைப்பிலே சிக்குண்ட குழந்தைகள் கதறும். அது தாய்மார்களுக்குப் பிடிக்கவில்லை. அவரில் யாரோ ஒருத்தி ஒரு அழகிய பெயர் கொடுத்தாள் 'சூர்ப்பனகை' என்று. தன்னை அந்தப் பெயர் சொல்லிப் பலர் பேசுவது அவளுக்குத் தெரியும். ஆயிரமாயிரம் அம்புகள் ஒரே சமயத்தில் இருதயத்தில் பாய்வது போன்ற வேதனை.

பலப்பல வேதனை தரும் சம்பவங்கள்—ஈட்டி முனை போன்ற கொடும் சொற்கள். இவைகளை எல்லாம் சகிக்க முடியும். ஆனுல் எதிர் பாராது வெளியே முகம் நீட்டினுல் 'டேய் பாருடா! சூர்ப்பனகை வேட்டையாட வந்திருக்கிறது' என்று கேலியோடு சிலர் கூறும் வார்த்தைகள் மட்டும் பொறுக்க முடியாதவைகளாக இருந்தன.

அந்தச் சந்தர்ப்பங்களில் எல்லாம் ஏமாற்றத்தின் பெரு மூச்சுகள் புறப்படும்,

அடிக்கடி கண்ணுடி எடுத்துப் பார்த்தாள். இறந்த மீனினது கண் போன்ற இமைகள், தடித்த உதடுகள்...உலகிலே கண்ணுடியே இல்லாது ஆக்க வேண்டும் என்று கூட அவளுக்குத் தோன்றியுள்ளது. அவள் வீட்டில் இருந்த இரண்டு மூன்று கண்ணுடிகளைக் கூட உடைத்து விட்டுத் தாயிடம் திட்டு வாங்கியிருக்கிருள். ஒரு வார்த்தை கூடக் கூருது முகத்தை 'உர்' என்று வைத்துக் கொண்டு, கூண்டுப் புலியைப் போல அங்கும் இங்கும் நடப்பாள். அவளைக் கண்ட உடன் தாயின் அதட்டல் குரல் கேட்க ஆரம்பிக்கும். 'பார்க்கல்லே? எருமை மாதிரி எட்டு வருஷமா இருக்கிறதை, எவனுவது ஏன் என்று கேட்கிருனு? சுபாவத்தின் குணம்!!

* * * *

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன,

அன்று! அவளது வாழ்விலே ஒரு சுப தினம். இருளடைந்த வாழ்வின் ஒரு கோடியிலே சிறிது பிரகாசம் தெரியும் பொன்தினம். அவளது திருமண விஷயமாக இரண்டு மூன்று பேர் அவளது வீட்டிற்கு வந்தனர். அன்று வீட்டிலே கும்மாளத்தின் அலைகள் அடித்துக் கொண்டிருந்தன.

சாரதா தன்னை நன்ருக அலங்கரித்துக் கொண்டாள். தலையில் முல்லைப்பூ சூட்டிக்கொண்டாள். நகைகள் எல்லாம் எடுத்து, கையும் கழுத்தும் நிறைத்து விட்டாள், முகப்பருவை மறைக்கக் கூடப் பவுடரை அப்பிக் கொண்டாள்.

முதலில் அவளுக்கு மாப்பிள்ளையை பிடிக்க வில்லை. ஆனுல் ஏதோ ஒரு வித சக்தி அவளைச் சம்மதிக்கச் செய்தது. அவர்கள் இருவரும் துன்பமென்ற தராசின் இரு தட்டுகள் என்று எண்ணினுள். கால கட்டத்தில் வயது கூடுதலாக இருப்பினும் அவருக்குச் சிநேகிக்கும் இருதயம் உண்டு என்று அவள் நம்பினுள். அவரைக் கண்காணிக்கும் அந்த நாட்களை அவள் ஆவலோடு நோக்கிக் கொண்டிருந்தாள். நெளிந்து நெளிந்து நீண்டு போகின்ற நாட்கள்.!

அவளுடைய வாழ்விலே மீண்டும் ஒரு புதுமை புலப்பட்டது, அவள் பழைய சாரதாவாக மாறினுள். எல்லோருடனும் எத்தனை அன்பு,

"பாரம் ஒழிந்தது" என்று வீட்டில் உள்ளோர் சந்தோஷப்பட்டனர்.

"உம்......பரவாயில்லை. சக்திக்குத் தகுந்த சங்கரன்" என்று சிலர் மாப்பிள்ளையைப்பற்றி.

"பாவம். அவளுக்கு நல்ல காலம் வரட்டும்" பலர் அவளை ஆசீர்வதித்தனர்.

அழகிய சொப்பனங்களும் பொங்கும் உவகையும் நிறைந்த உள்ளத்தோடு அவள் காத்திருந்தாள். அந்த நாளுக்காக!

* * * *

சிலும்—!

சாரதா உறக்கத்தில் இருந்து திடீரென்று எழுந்தாள். மார்புடன் அணைத்திருந்த அவளது 'வருங்கால' கணவனின் போட்டோ நிலத்திலே விழ்ந்து விட்டது. சிந்திச் சிதறியது......அவள் பயந்து போனுள். ஒரு குற்றவாளியைப் போலத் தலைகுனிந்து அந்த உடைந்த சில்லுகளைப்பொறுக்கி எடுத்தாள்.

வெளியே ஒரே அமர்க்களம். பாத்திரங்கள் கூட்டி முட்டுவதால் ஏற்படும் ஓசை. குழந்தைகளின் இரைச்சல். கலியாணவீடே அதிர்ந்துகொண்டிருந்தது. ஆனுல் பயமும் ஆசையும் இல்லாத மனத்திலிருந்து உதித்து வருகின்ற சோகப்பாடல் உயர்ந்த குரலில் தங்கு த டை யின் றி ஒலித்துக் கொண்டிருந்தது.

"சாரதா"!........"சாரதா" கதவைத்தட்டி யாரோ கூப்பிட்டார்கள்: அவள் கதவைத் திறந்தாள்; அப்பொழுதும் அவளது முகம் ஒரு நிரபராதியைப்போல இருந்தது.

சாரதா குளித்துவிட்டுக்கண்ணாடியின்முன்போய் நின்றாள். அன்று கண்ணாடியை உடைக்கவேண்டுமென்று அவளுக்குத் தோன்றவில்லை. ஆனால் மனதிலே பொறுக்கமுடியாத போராட்டம்.........ஒரு மரப்பொம்மையைப் போல உணர்வற்று அவள் நின்று கொண்டிருந்தாள். அவளது சிநேகிதிகள் ஆபரணம் அணிவித்தனர். அலங்கரித்துக் கொண்டிருந்தனர். சிலர் அவளைக் கேலி செய்தனர். நாணம் அவளது முகத்திலே குடிகொண்டது. அவள் பேசவில்லை. அதே சமயம் சிரிக்கவும் இல்லை. ஆனால் புன்சிரிப்பு அவளது முகத்திலே படர்ந்தது. வேதனையுடன் கூடிய புன்சிரிப்பு.

அவள் ஜன்னல் வழியே வெளிப் பக்கம் பார்த்தாள். தந்திச் சேவகன்! அவள் பயந்து போய் விட்டாள்!......பலரும் அது கண்டு!

“ஓ! கல்யாண வாழ்த்தாயிருக்கும்” ஒரு காலேஜ் குமாரி கூறினாள். சாரதா உள்ளே நுழைந்தாள். அவளது தந்தை தந்தியை வாங்கி உடைத்துப் பார்க்கவும் மூர்ச்சையானார். சாரதா இடி கொண்டது போல ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

“மாப்பிள்ளைக்கு இருதயம் ஸ்தம்பிதம் (Heart - Failure) ...... அவளுடைய யோகம்.” யாரோ அனுதாபத்தோடு கூறுவது கேட்டது. தலையிலே கொடுங்காற்று அடிப்பதுபோல அவளுக்குத் தோன்றியது. ஒன்றும் சரியாகப்பார்க்க முடியவில்லை. இருதயம் வெடித்து விடும் போன்ற வேதனை.........

சாரதா அழவில்லை. அவளுக்கு அழ வேண்டும் என்று தோன்றவில்லை. இல்லை, அழுதால் பிரயோஜனம்?

வாழ்க்கைப் பட்டரையிலே நம்பிக்கை என்ற ஈயம் கொண்டு இன்பமான எதிர்காலம் உருவாக்க முயன்றாள். ஐயோ! பாவம். ஈயமும் உருகி விட்டது. துருத்தியும் சிவந்து சாம்பலாகி விட்டதே.

புத்தக விமர்சனம்

அனார் கலி [சரித்திர நாடகம்]

ஆசிரியர்—வி இரா. சிவாநந்தன் ரதி பதிப்பகம், தெற்காவணி மூலவீதி, மதுரை. விலை 1—0—0

70 பக்கங்கள், 29 காட்சிகளால் ஆன இந் நாடகம் அனார்கலியின் காதலுடன் மேஹருன்னிஸ்ஸா கதையும் சேர்த்து ஒரு கதம்பமாகி நிற்கிறது. அக்பர் தம் புதல்வன் ஸலீம் அனார்கலியைக் காதலிப்பதை ஒரு ராஜத்ரோகமாகக் கருதுகிறார். இதை அறிந்த அனார்கலிதானே பலியாகத் தயங்கவில்லை. ஆனால் அவளிடம் அளவில்லாத காதல் கொண்ட ஸலீம் உடனேயே மேஹரை அடையச் சூழ்ச்சி செய்து, அவள் கணவன் ஷெர்ஷாவைக் கொன்று அவளைத் தன் அந்தப் புரத்தில் அமர்த்திக் கொள்ளுகிறான். ஷெர்ஷாவின் பிரமை உருவம் மேஹரை வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் தூண்டி விடுகிறது. அவள் ஸலீமின் மனைவியாகவும் பட்டமகிஷியாகவும் ஆகச் சம்மதித்து விடுகிறாள். அவளிடம் ஸலீம் இவ்வளவு கதைகளையும் சொல்வதாக முதல் காட்சி ஆரம்பமாகிறது.

சிரித்த முகம் [குறு நாவல்]

எல்லார்வி எழுதியது. ரதி பதிப்பகம், 127 தெற்கு ஆவணி மதுரை. விலை 1—4—0 107. பக்கங்கள்.

'சிரித்தமுகம்' என்ற தலைப்புக்கேற்ற ஒரு கதையை எழுதப் புறப்பட்ட, எல்லார்வி, கீதா என்னும் நற்குணம் நிறைந்த ஒரு நங்கையைச் சிருஷ்டித்து, என்ன என்ன இன்னல்கள் குறுக்கிட்டாலும் தன் சிரித்த முகத்தைச் சுளித்துக் கொள்ளாமலேயே சமாளித்துக் கொள்பவளாக காட்டிஅதிருஷ்டக் குறைவினால் ஒரு சஞ்சலப் பிரகிருதியான கணவன் சந்தேகத்துக்கு இலக்காகித் தற்கொலை செய்து கொள்வதாக முடிக்கிறார். ஆனால் அப்பொழுதும் அவள் சிரிப்புவிடவில்லை.அவள் அசட்டுச் சிரிப்பல்ல, அமைதிச் சிரிப்பு சிரிப்புசகிப்புச் சிரிப்பு என்கிறார் ஆசிரியர். வாஸ்தவம்பின் ஏன்அவள் தற்கொலை புரிந்து கொள்ள வேண்டும். கதைக்காகவா? என்று வாசகர்கள் கேட்கக்கூடும்.

சூனியக்காரி

சிரஞ்சீவி எழுதியது. ராம்நாத்பப்ளிகேஷன்ஸ். ராயப்பேட்டை சென்னை-14 விலை 1—0—0 148 பக்கங்கள்.

சிரஞ்சீவி முன் எழுதி வெளியான 'மாய வில்லா' போலவே இதுவும் ஒரு ரஸமான துப்பறியும் பயங்கரக் கதை. எத்தனையோ கொலைகள். இன்ஸ்பெக்டரும் துப்பறிபவரும் ஒன்றும் துப்பு அகப்படாமல் தவிக்கிறார்கள். கோயிலில் அம்மன் வருஷம் ஒருதரம் கழுத்தில் தரித்துக் காட்சியளிக்கும் வைரமாலையைத் தர்மகர்த்தாவே எடுத்து அடகு வைத்துக் கடனைக் கொடுத்துத் தீர்க்கப்போக, அடகு பிடித்தவன் பேராசைகொண்டு வைரங்களைப் பெயர்த்து விற்று, சுயப் பிரயோஜனப்படுவதைத் தெரிந்து, அவனை வஞ்சனையால் வெல்லத் துணிந்து முயன்றதில் ஏற்படும் சூழ்ச்சிகளும் எதிர்ச் சூழ்ச்சிகளும் கதையைப் பின் இழுத்துச் செல்லுகின்றன.

மேகமும் நிலவும்

எஸ். பி. ஹர்ஷன் எழுதியது. மோகன் அன் கம்பெனி 43, லிங்கிசெட்டித்தெரு, சென்னை-1 விலை 1—4—0

அவள் அமாவாசையில் பிறந்தவள் என்று தெரிந்தவுடன் அவன் அவளைக் கைவிட்டுச் சென்றுவிட்டான். ஏன்? அமாவாசையில் பிறந்த அவன் தம்பி தான்தோன்றியாய்த் திரிவதால் அவளும் அப்படித்தான் ஆகிவிடுவாள் என்று தீர்மானித்துக் கொள்ளுகிறான். கதை மேலே ஸ்வாரஸ்யமாகப் போகிறது. அவள் கதைகள் எழுதுகிறாள். தன் கதையையும் எழுதுகிறாள். எல்லோரும் படிக்கிறார்கள். அவனும் படிக்கிறான். புரிந்து கொள்ளுகிறான். மேகமும் நிலவுமாக அவள் பழகும் விதத்தையும் அறிந்துகொள்ளுகிறான்.

அழகான கதை. அழகாக எழுதியிருக்கிறார். உவமை, உலக இயல் சித்திரம், பாத்திரங்களின் குணபூர்த்தி, விறுவிறுப்பான நடை, சொல்லாமல் சொல்லும் தர்மோபதேசம் எல்லாமே இனிமைந்த சிறந்த நூல்.

வெள்ளியம்பலக் குறவஞ்சி

பரத நாட்டிய நாடகம். குத்தாலம் M. கோபாலன் இயற்றியது. விலை 0—12—0. பரதக்கலை ஆசிரியர் S. கணேசம் பிள்ளை அருணகிரிநாதர் தெரு, குத்தாலம். (தஞ்சை ஜில்லா).

லோபா முத்ராதேவி குறத்தியாக வந்து குறி சொல்லி, மதுரை மரகதவல்லித் தேவியார் பரமசிவனை மணம்புரிவது நாட்டிய நாடகமாகத் தொடுக்கப்பெற்றுப் பாத்திரங்களுக்கு ஏற்றவாறு அபிநயங்கள் ஆடல்கள் ஜதிச் சொல்லுக்

கட்டுகள் தீர்மானங்கள் நடுநடுவே விருத்தங்கள் எல்லாம் இனிமையாகப் பொருத்தப்பட்ட கலை விருந்து.

திருவுந்தியார்—தெளிவுக் கட்டுரை

திருவாவடுதுறை ஆதீன வெளியீடு-ஆதீன வித்துவான் ஸ்ரீநிவாசாச்சாரியார் எழுதியது. விலை 0—12—0.

மெய்கண்ட சாஸ்திரங்கள் பதினன்கில் முதன்மையான 'திருவுந்தியார்' எனும் நூல் உய்ய வந்த தேவநாயனாரால் இயற்றப்பெற்றது. இது 45 கலித்தாழிசைகளைக்கொண்டது. செய்யுள் தோறும் 'உந்தீபற' என்ற முடிவுச் சொற்றெடரைக்கொண்டது. இதற்குச் சூர்ணிகையும் எளிதில் விளங்கும்படி தெளிவுரையும் தகுந்த மேற்கோள்களுடனும் உவமைகளுடனும், எழுதப்பெற்று ஆஸ்திகர்கள் அனைவருக்கும் உய்யும் வண்ணம் இப்பொழுது வெளியிடப்படுகிறது,

ஸ்ரீவர்த்தமான மகாவீரரின் திவ்ய சரித்திரம்

குமாரி விசாகாநேமி குமார் சேட் எழுதியது. V. S. வெங்கடராமன் கம்பெனி, கும்பகோணம். விலை 0—2—0

நல்ல முறையில் நேர்த்தியாக வெளியிடப்பட்டிருக்கும் இச்சிறு நூல் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பாடப் புத்தகமாக வைக்கத் தகுந்தது.

திராவிடத்தில் வடநாட்டுப் பைத்தியம்

கௌந்தி எழுதியது, மனோஹர் பிரசுரம். 43, லிங்கிசெட்டித்தெரு-சென்னை-1 விலை 0-10-0

"ஏழைகள் முழு வாழ்வு பெறுவதற்குத் தடையாக இருக்கும் எதனையும் உடைத்தெறிய வேண்டும். ஆம். ஜெபமாலை பர்ணசாலை, வேதாந்தம், தத்துவம், யாக யோகம் எதனையும்" என்ற அறிஞர் அழகனைப் பின்பற்றும் திராவிடர்களின் தனி நாடு இயக்கத்தைப் பண்டிதர் நேரு பைத்தியக்காரத்தனம் என்று பரிஹஸித்ததைக் கண்டித்து, ரயிலை நிறுத்தி கல்லக்குடி என்ற பெயரை டால்மியாபுரத்துக்கு மறுபடி சூட்டிய வெற்றியைப் பாராட்டி, ஸ்ரீராமசாமி படையாச்சி 'நான்ஸென்ஸ்' என்று திராவிட இயக்கத்தை இகழ்ந்ததையும் எதிர்த்து, காங்கிரஸ்காரர்களின் செயல்களை இகழ்ந்து, கட்சிப் பிரச்சாரப் போக்கில் எழுதப்பட்ட நூல் இது.

இனி நாம் என்ன செய்யப் போகிறோம்

எம். ஆர். ஏ. வெளியீடு விலை 0—3—0.

உலகம்சுலபமாக இன்று உருளத்தடைகளென்ன? உலகம் நன்ருக நடந்து நாமும் உய்யும் வழியும் என்ன? என்பதைச் சித்திரிக்கிறது இந்நூல். ஒவ்வொரு பக்கமும் ஒரு சித்திரம். அதன் விளக்கமாக வசனம் என்ற முறையில் கண்ணுக்கும் கருத்துக்கும் இனிமையாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும். இந்நூல் Moral Rearmament ஸ்தாபன வெளியீடு. ஜாதி, தேச. மதவேறுபாடின்றி, தார்மிகப் புனரமைப்புக்காகப் பாடுபடும் இயக்கம்.

ஒளி, சக்தி, ஞானம்.

ஸ்ரீ சுவாமி சிவானந்தா அருளியது. தமிழாக்கியவர் ஸ்ரீ. மு. ஸ்ரீநிவாஸன். யோகவேதாந்த ஆரண்ய விசுவ வித்யாலயம் – சிவாநந்தநகர் போஸ்ட் ஆனந்த குடீர், ரிஷிகேசம் ஹிமாலயம். விலை 2—0—0

ஆத்மசாதனைக்குரிய உயர்ந்த கருத்துக்களை ஒவ்வொருவரும் அறியவேண்டும் என்பதற்காக ஸ்ரீ சுவாமி சிவானந்தா ஓயாமல் பிரசாரம் செய்து வருகிருர். நல்ல விஷயங்களையும் ஒருங்கு எடுத்துச்சொல்லி, தம்பட்டம் அடித்து, தயங்குபவர்களைத் திருப்ப வேண்டும், என்ற கொள்கையைக் கடைப்பிடித்தவர். தம்மை அணுகி அந்தரங்கமாக உபதேசம் நாடுகிறவர்களுக்குப்பயன்படுவது போலவே தம்மை நாடாமல் தன்போக்கே போகுமவர்களுக்கும் சமயத்தில் பயன் படக்கூடிய முறையில் தம் உபதேச மொழிகளை உலகம் உபயோகிக்கும் வண்ணம் ஹிமயத்தினின்று ஓர் கங்கையாகப் பிரவஹித்துக் கொண்டிருக்கிருர். 'ஆராய்ச்சி செய், அறிந்துகொள், ஞானம் பெறு' என்று கதறுகிருர். இந்நூலில் ஒரு விசேஷம் என்னவென்ருல் ஞானத்தைத் தேடுபவனும் தன் கடமைகளைச் செய்து கொண்டு அன்பும் பணியும் மேற் கொண்டு விதிப்போனுடன் ஒன்ருக வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

Brahma Vidya Vilasa

By Swami Sivananda Sarasvati Yoga Vedanta Forest University Anand Kutir P. O. Sivananda Nagar. U. P. (Himalayas) Rs 4-8-0. 420 பக்கங்கள்.

வேதாந்த விஷயங்களை நாடக ரூபமாக முதல் முதல் எழுதியது 'ப்ரபோத சந்திரோதய' கிருஷ்ண மிச்ரர். அவரைத் தொடர்ந்து அநேகர். நாடக ரூபத்தை இன்று பயன் படுத்தி வருபவர் ஸ்ரீஸ்வாமி சிவானந்தர். அத்யாத்ம விஷயங்களை வெகு எளிதாகச் சொல்

வதற்காகத் தம் ஆச்ரமத்தில் பெரும் கூட்டம் கூடும் பொழுதெல்லாம் ஒவ்வொரு நாடகம் எழுதி நடிக்கச் செய்துள்ளார். வேதாந்தமும் யோகமும் ஸங்கீதத்துடனும் நாட்யத்துடனும் சேர்ந்து கற்பது எளிதாகட்டும் என்று 20 நாடகங்களுக்கு மேல் எழுதப்பட்டு இந்நூலில் வெளியிடப் பட்டிருக்கின்றன். ஆத்மவித்ய ஸதாசிவப் பிர்ம்மேந்திராளது ஆத்மவித்யா விலாசம் நாகர மூலம் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் இந்நூலில் சேர்ந்திருக்கிறது. உலக மதங்களும் ஞானிகளும் கூடி விவாதிப்பதாக ஒரு நாடகம் எழுதப்பட்டிருப்பது வெகு ரஸமாக இருக்கிறது. சங்கராசார்யாரும் மேல் தேசங்களைச் சேர்ந்த டேகார்ட் முதல் ப்ராட்லீ, ரஸ்ஸல், வைட்ஹெட்வரை உள்ள மேதாவிகளும் விவாதித்துக் கொள்வது வெகு அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது. நகைச்சுவை நிறைந்த நாடகங்களும் காண்கின்றன. காபி குடிப்பதின் கெடுதல்களைப்பற்றி ஒன்று. பார்வதி, பரமசிவன் புதிதாகத் தங்களுக்குப் மாளிகை கட்டி அதை எரித்துவிடுவதைப்பற்றி ஒன்று, யமன் எச்சரிக்கைகளைப்பற்றி ஒன்று. டாக்டர்கள், வாய் வேதாந்திகள், ஸம்சாரிகளின் துயரங்கள் இவைகளைப்பற்றி அனுபவத்தோடு எழுதப்பட்டிருக்கிறது. எல்லோரும் ரஸிப்பதுடன் எல்லோரும்மீண்டும் மீண்டும் படிக்கும்வண்ணம் அமைந்திருக்கிறது இந்நூல் 'சுக்லாம்பரதரம்விஷ்ணும்' என்றால்வெள்ளி ரூபாயைப்பற்றிப் பாடியது என்ற பொருளில் ஒன்று, இம்மாதிரி பல வேடிக்கைக் குட்டி நாடகங்கள் இருக்கின்றன.

Sivananda — His life and Work

ஆனந்த குடீரம் சிவாநந்தநகரம் P. O. விலை 10-0-0. 67-ஆவது பிறந்த நாள் நினைவு மலராக வெளியிடப்பட்டிக்கும் 880 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தில் ஸ்வாமிஜீயைப்பற்றிய வாழ்க்கை வரலாறு விபரங்களும் வெளித் தேசத்திலும் நம் தேசத்திலும் அவர்கள் பக்தர்கள் அவர்களுக்கு அளிக்கும் நன்றியறிவு புகழ் மாலைகளும், அவர்கள் எழுதியிருக்கும் 200 புத்தகங்களைப்பற்றியும் வெளி நாடுகளில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் விபரங்களும் அறியப்படுகின்றன.

ஆனந்தகுடீர ஆங்கில நூல்கள்

1. Self Realisation by Sri Swami Sivananda. 1—0—0
2. Goal of Life and its Attainment 2—0—0
3. Essays in Philosophy 2—0—0
4. World Parliament of Religions 0—8—0
5. Philosophy & teachings of Swami Sivananda 1—0—0
6. A dynamic Yogi (படங்கள்) 1—0—0

ஸ்வாமி சிவானந்தர் தான் இன்றைய இந்தியாவின் ஆத்மா. இவரது நூல்கள்ஒவ்வொன்றையும் நாம் படித்தே ஆகவேண்டும். இவரைப்பற்றிய நூல்களையும் படிக்க வேண்டும். இந்நூல்கள் ஆங்கிலத்தில் எங்கும் பரவி நிற்பது போல் தமிழாக்கப் பட்டு, தென்னிந்தியாவிலும் பரப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆனந்தகுடீர யோக வேதாந்த அரண்ய விசுவ வித்யாலயம் இத்தொண்டில் ஈடுபட்டிருக்கிறது. சில நூல்கள் தமிழாக்கப்பட்டு வெளியாகியிருக்கின்றன. மற்றவையும் கூடிய சீக்கிரம் வெளிவரும் என்று எதிர்பார்க்கிறோம்.

காவேரி சந்தா விகிதம்

	இலங்கை, பர்மா & உள்நாடு			மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
ஒரு வருஷம்	6	0	0	7	8	0
அரை வருஷம்	3	0	0	3	12	0
தனிப் பிரதி	0	8	0	0	10	0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

சீக்கிரமே நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே
வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்
"வாத்தியார் அம்மாள் என் சுத்தமான தோற்றத்தை புகழ்கிருள். என் தாய் என் பிராக்குகளை ஸன்லைட் சோப்பினுல் பளிச்சென்று வெண்மையாக சலவை செய்வதுதான் இதற்குக்காரணம்."
"என் வகுப்பில் நான்தான் அதிக சோபையுடன் விளங்குகிறேன். என் கலர் பிராக்கை ஸன்லைட் சோப் எவ்வளவு பிரகாசமாக சலவை செய்திருக்கிறதென்று பாருங்கள்!."
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்
துணிகளைக்காப்பாற்றுகிறது, சிரமத்தைக்குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது
S. 219-X52 TM
இந்தியாவில் தயாரித்தது.

தொடர்கதை:

வெற்றியும் தோல்வியும்

ஜி. எஸ். மணி

19

கமலம் பிரஸித்தி பெற்ற பாடகியானாள். சென்னை மாகாணம் முழுவதிலும் அவளுக்கு நல்ல பெயர் ஏற்பட்டுவிட்டது. அடிக்கடி ரேடியோக்களிலும் பாடலானாள். "மிஸ் கமலம், மிஸ் கமலம்" என்று தமிழ் நாட்டில் யாவரும் அவளைக்கொண்டாடினார்கள். இழையும் அவளது சாரீரத்தின் இனிமையிலே, ஸ்திரீகள் முதற் கொண்டு மயங்கினார்கள். வித்வத் நிறைந்த கமலத்தின் ஸங்கீதத்திற்கு நல்ல பிராபல்யமும், ஏகப்பட்ட கிராக்கியும் ஏற்பட்டன.

எல்லாவற்றிற்கும் காரணம் ஹரிஹரய்யரின் விடாமுயற்சிதான் என்று சொல்லவேண்டியதில்லை. கமலத்தின்மீது தம் உயிரையே வைத்திருந்தார். அவளைக் கண்ணுள் மணியாகக் காப்பாற்றலானார்.

மிஸ் கமலத்தைப்பற்றிப்பசுபதியும், ராதையும், கனகமும்கூட மிகவும் கேள்விப்பட்டிருந்தார்கள். ஆனால் அவள் செய்த சில கச்சேரிகளுக்கு இதுவரையில் அவர்கள் போனதில்லையாகையால் அவள் இன்னாரென்று அவர்களுக்குத் தெரியாது. கனகம் மட்டும் முதல் தடவையாக அவளைப் பற்றிக் கேள்விப்பட்டதும் சிறிது 'துணுக்' கென்றது நெஞ்சிலே.சற்றுச் சந்தேகப்பட்டாள்! ஆனால் அடுத்த நிமிஷமே தன்னைத்தானே சமாதானப் படுத்திக்கொண்டாள். "இவள் யாரோ? எவளோ? 'கமலம்' என்று பெயர்கொண்டவள் இந்த உலகத்திலேயே 'அவள்' ஒருத்திதானா?" என்று. "நன்றாய் பயந்தேன்!.........நல்ல மிஸ். கமலம்!" என்று தனக்குத்தானே மெதுவாகச் சிரித்துக்கொண்டாள்.

அன்று ராதைக்கு என்னவோ மனசே சரியாக இல்லை. என்னவோ-அர்த்தமில்லாமல் அவளது உள்ளம் சஞ்சலப்பட்டுக் கொண்டேயிருந்தது.... அதற்கு முதல் நாள் இரவில் தான் தூங்கும் பொழுது அவள் ஒரு ஸ்வப்பனம் கண்டாள். அதாவது--அவர்கள் ஒருவரும்சற்றும் எதிர்பார்க்காத விதத்திலே அவர்களிடம்--அவர்கள் மத்தியில் முற்றும் புதிதான பெண்ணொருத்தி வந்து சேருகிறாள்! பசுபதி, ராதை, கனகம் மூன்று பேருமாகக் கூடிக்கொண்டு ஏதோ தமாஷாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயத்திலே 'திடுதிடு'வென்று மூன்றாவது பெண் ஒருத்தி வந்து பசுபதிக்கும், ராதைக்கும் நடுவில் நின்று கொள்ளுகிறாள்! பார்ப்பதற்கு ரொம்பவும் அழகாயிருக்கிறாள். அப்புறம் ராதையிருப்பதையே துளியாவது லக்ஷியம் செய்யாமல் பசுபதியும் அந்தப் புதியவளுமாக அளவளாவிக் கொள்ளுகிறார்கள். திடீரென்று ஒரு நாள் அவர்களிருவருக்கும் கல்யாணமாகிவிடுகிறது! – அப்புறம் அந்தக் கனவு எப்படித் தொடர்ந்தது என்று ராதைக்குச் சரியாக நினைவில்லை?

ஸ்வப்னாவஸ்தையிலிருந்து ராதா விழித்துக் கொண்டவுடன் கடிகாரத்தில் விடியற்காலம் ஐந்துமணி அடித்தது. இரண்டொரு காகங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாய்க் கரைந்து கொண்டிருந்தன. பட்டப்பகலைப்போலே பால் நிலாக் காய்ந்துகொண்டிருந்தது.

அப்புறம் அவளுக்குத் தூக்கமே வரவில்லை! பொழுது விடிந்ததும் விடியாததுமாக இருக்கும் போதே அவள் படுக்கை விட்டெழுந்ததும் முதல் காரியமாகத் தான்கண்ட கனவைக் கனகத்

திடம் சொல்லி, 'விடியற்கால நேரத்தில் கண்ட கனவு கட்டாயம் அப்படியே பலிக்கும் என்பார்களே, எனக்கு என்னவோ ரொம்பவும் சங்கடப்படுத்துகிறது, கனகம்! மனசை என்னவோ வேதனை செய்கிறது?' என்றாள்.

அவள் கண்ட கனவின் விஷயத்தைக் கனகம் கேட்டதும் அவளுக்கும் என்னவோ போலிருந்தது-விளக்கெண்ணெய் சாப்பிட்டபின் இருப்பது போலே! இருந்தாலும் சமாளித்துக்கொண்டு அவள் பரிகாசமாகச் சிரித்தாள். போடி! அசடே! வெறும் சொப்பனத்தைக் கண்டு இப்படிப் பயப்படுவார்களோ?' என்று ராதையைக் கேலி செய்தாள்.

ஆனால் ராதைக்கு மனசே கேட்கவில்லை. 'இருந்தாலும்?... நான் சொப்பனம் கண்டு விழித்ததும் அதே சமயத்தில் சொல்லிவைத்தாற் போலே கடியாரத்தில் ஐந்து மணி அடித்ததும் அவ்வளவு கணக்காக ஏற்படவேண்டுமா? கனகம்! ஆனால் இதைப்பற்றி நீ அவரிடம் ஒன்றுமே சொல்லாதே. நானும் சொல்லப்போகிறதில்லை!' என்றாள்.

"நானா சொல்லுவேன்? பயப்படாதே-போய்ப் பல்லைத் தேய்த்துக்கொண்டு வா-காப்பி சாப்பிடலாம்!" என்றாள் கனகம்.

ராதை எழுந்து சென்றாள்.

ஆனால் எப்படித்தான் தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்ட போதிலும், கனகமும் என்னதான் தேறுதல் சொன்ன போதிலும், அன்று முழுவதுமே ராதையின் உள்ளம் எந்த விதத்திலோ சஞ்சலப்பட்டுக்கொண்டே யிருந்தது. எப்பொழுது பார்த்தாலும் 'சுர்'ரென்றே முகத்தை வைத்துக்கொண்டு எதைப்பற்றியோ யோசித்துக்கொண்டேயிருந்தாள்.

மாலை ஐந்து மணி அடித்துவிட்டது. அப்பொழுதும், ராதையின் முகம் கொஞ்சம்கூட மலரவில்லை! அவள் வதனத்தைப் பார்க்கச் சஹிக்கவில்லை கனகத்திற்கு. அவ்வளவு தூரம் வாடிப்போயிருந்தது.

கனகத்திற்கும் அன்று முழுவதும் என்னவோ குத்துகிறது குடைகிறது என்றுதானிருந்தது!

"ராதா! வேண்டுமானால் இப்படியே சற்றுத் தூரம் வெளியில் போய் வரலாம், வருகிறாயா? காலாற, இப்படி காற்று வாங்கிக்கொண்டே போனோமானால் பொழுதும் சீக்கிரத்தில் போய் விடும். உனக்கும் மனசிற்குச் சற்று விச்ராந்தியாக இருக்கும்" என்றாள் கனகம்.

"உம்!" என்று கொண்டு உடனே கிளம்பினாள் ராதா. கனகம் சொல்வதும் ஒருவிதத்தில் நல்லது என்றுதான் பட்டது அவளுக்கு. வீண் கற்பனைகள் செய்துகொண்டு பொழுதைக் கொன்று கொண்டிருப்பதைவிட, வெளியில் போனால் வேடிக்கையாவது பார்க்கலாம் அல்லவா?

துணைக்குப் பசுபதியையும் அழைத்துக் கொண்டு ராதையும் கனகமும், கால்நடையாகவே கிளம்பினார்கள்.

"கனவாவது, பலிக்கவாவது! முதலில் 'கனவு' என்பதே உள்ளத்தின் கற்பனைதான்... நீ எதைப் பற்றி இரவு பகலாக யோசித்துக்கொண்டேயிருக்கிறாயோ அதுவே கடைசியில் கனவாகப் பரிணமிக்கும். எல்லாம் வீண் பிரமைதான்" என்றெல்லாம் ராதையும், கனகமும் தமக்குள்ளாகவே பேசியபடி வந்துகொண்டிருந்தனர். பசுபதி மௌனமாய் அவர்களைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தான்.

அப்போது அவர்கள் மூவரும் 'சாரதா விலாஸ சங்கீத ஸபை' கட்டிடத்தின் வழியாகப் போய்க்கொண்டிருந்தார்கள்...

அன்றைய தினம் தான் அங்கே 'சாரதா விலாஸ ஸங்கீத ஸபை'யின் ஆதரவிலே மிஸ். கமலத்தின் கச்சேரியும் ஏற்பாடாகியிருந்தது.

அதற்கு ஒரு வாரம் முன்னதாகவே பிடித்து மிஸ். கமலத்தின் வரப்போகும் ஸங்கீதக் கச்சேரியைப்பற்றி ஏகப்பட்ட விளம்பரங்கள் சுவரொட்டிகள்-எல்லாம் அமர்க்களப்பட்டன. அன்றும் ஸபைக் கட்டிடத்தின் வாசலிலே பெரிதாகப் பந்தல் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு, மாவிலைத் தோரணங்களும், தென்னங்குருத்துப் பின்னல்களும் கட்டப்பட்டிருந்தன. இன்னும் காகித வேலைப்பாடுகள் வேறே. பந்தற் கால்களில், தாறுடன் கூடிய வாழை மரங்கள்; தொங்கலாடிகள்; எங்கும் பிரகாசமாக எரியும் மின்சார விளக்குகளின் ஜாஜ்வல்யமான பிரகாசம்; எல்லாம் ஒரே தடபுடலாக இருந்தது.

பந்தலுக்கு வெளியே 'மிஸ். கமலத்தின் ஸங்கீதக் கச்சேரி'யென்று பிரபலமான பக்க வாத்ய கோஷ்டியுடன் கொட்டை எழுத்துக்களில் விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது. வெளியே ஏராளமான கூட்டம் மொய்த்துக் கொண்டிருந்தது.

அந்தப்பக்கமாகத்தான் ராதை, கனகம், பசுபதி மூவரும் குஷாலாகப்போய்க்கொண்டிருந்தார்கள்.

வெளியே வைக்கப்பட்டிருந்த விளம்பர போர்டை அகஸ்மாத்தாகக் கவனித்த கனகத்திற்கு, ஏனோ தெரியவில்லை, நெஞ்சிலே மறுபடியும் 'துணுக்'கென்றது!

அதே சமயம் ராதையும், பசுபதியும் அந்த விளம்பரத்தைப் பார்த்தார்கள். அதற்குள் ஸபைக் கட்டிடத்தின் வாயிலுக்கு நேரே வந்துவிட்ட மூவரும், தங்களை அறியாமலேயே நின்ருர்கள். ஒருவர் முகத்தையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

நல்ல ஸங்கீதக் கச்சேரியென்ருல் மயங்காதவர்கள் யார்தான் இருக்கிருர்கள்? தவிரக் களைப்படைந்த உள்ளங்களுக்கும் 'ஸங்கீதம், ஒரு சிறந்த 'டானிக்' அல்லவா?

"உள்ளே நுழையலாமா?" என்று அவர்களை நோக்கிக் கேட்டான் பசுபதி, தனது கைக் கடிகாரத்தைப் பார்த்த பிறகு.

அப்போது மணி ஆறே கால் ஆகியிருந்தது. சரியாக ஆறரை மணிக்குக் கச்சேரி துவக்கம் என்றிருந்தது.

ராதா, கனகத்தைப் பார்த்துக்கொண்டே இதையுந்தான் கேட்டுவிடலாமே?... ஏதோ 'மிஸ். கமலா—மிஸ். கமலா' என்று எங்குப் பார்த்தாலும் பெயர் பிரமாதமாக அடிபடுகிறதே?' என்ருள்.

"அதற்கென்ன! கேட்டேவிடுவோம், கமலத்தின் கச்சேரியையும்!" என்ருள் கனகம்.

முதற் கிளாஸ் டிக்கட் வாங்கிக்கொண்டு மூன்று பேரும் உள்ளே நுழைந்தார்கள்.

உள்ளே 'ஜே ஜே'யென்று தாங்கமுடியாத கூட்டம். எங்கு நோக்கினுலும் ஒரே தலைகள் மயம்? இருந்த இடமெல்லாம் ஜனங்கள் நிரம்பிப்போய், இன்னும், தூண்களில் தொத்திக்கொண்டும், கம்பிகளில் தொத்திக்கொண்டும், சுவரோரங்களில் ஒட்டிக்கொண்டும் ஜனங்கள் தவியாய்த் தவித்துக்கொண்டிருந்தார்கள்! வந்திருந்தவர்களில் ஸ்திரீகளுக்கும் குறைவில்லை! இன்னும் மேலும் மேலும் வந்துகொண்டேயிருந்தார்கள்.

ஸபைக் காரியதரிசி ஹரிஹரய்யர் இங்கும் அங்கும் ஓடியாடி-பம்பரம்போல் சுற்றிச் சுழன்று, வருபவர்களுக்குச் சௌகர்யமாக உட்கார இடவசதி அளித்துக்கொண்டிருந்தார்.

முதற் கிளாஸ் டிக்கட் வாங்கியிருக்கும் பசுபதி, ராதை, கனகம் மூவரையும் 'வாருங்கள்' என்று அன்புடன் அழைத்து, வெகு மரியாதையுடன் கூட்டிக்கொண்டுபோய், ஸங்கீத மேடைக்குப் பக்கத்திலே, சௌகர்யமாக உட்காருவதற்கு இடம் அமைத்துக் கொடுத்தார்.

பசுபதி சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே, 'ஏ அம்மா? என்ன கூட்டம்! என்ன கூட்டம்! இவ்வளவு பெயர் பெற்றவளா இந்த மிஸ். கமலம்!' என்று வாய் விட்டுச் சொல்லி ஆச்சரியப்பட்டான். கூடவே புருஷர்களிடத்தில் சாதாரணமாகக் காணப்படுகின்ற 'ஸ்வபாவ' குணத்தினலே—'ஆனல்...... ஆள் எப்படியிருக்கிருளோ!' என்றும் சொல்லி வைத்தான்!

அதைக்கேட்டுவிட்ட ராதா 'சட்டென்று அவன் பக்கம் திரும்பி அவனை ஒரு தினுசாகப் பார்த்தாள்.

கனகமும் இதையெல்லாம் கவனித்துக்கொண்டுதானிருந்தாள். ஸங்கீத மண்டபத்திற்குள் வந்தது முதலே அவளுடைய மனசையும், வயிற்றையும் என்னவோ செய்துகொண்டேயிருந்தது! அவளுக்கே அது ஆச்சரியமாயிருந்தது. அது ஏன் என்று அவளுக்கே தெரியவில்லை...

மணி ஆறரைக்கும் மேலாகவே ஓடிவிட்டது. பொறுமையிழந்திருந்த ஜனங்கள் — கூட்டம் தாங்காமலும், அதனலேற்பட்ட புழுக்கத்தினும் ஆரவாரிக்க ஆரம்பித்தார்கள்...

சில நிமிஷங்கள் சென்றன...

ஸபையோரின் வானைப் பிளக்கும் கரகோஷத்தினிடையே பாடகியான மிஸ். கமலம், ஸங்கீத மேடையை அடைந்து, ஸபையைக் கைகூப்பி வணங்கிவிட்டு, மேடையில் அடக்க ஒடுக்கமாக அமர்ந்துகொண்டாள்.

மிருதங்க வித்வானும், பிடில் வித்வானும் சுருதி சேர்க்கத் தொடங்கினர்கள்.

பாடகியையே சிறிது நேரமாக உற்றுக் கவனித்துக்கொண்டிருந்த கனகத்திற்கு அவளது சந்தேகம் ஊர்ஜிதமாகத் தொடங்கியது!... முதன் முதலில் அவள் மேடைக்கு வரும்போதே அவளைப் பார்த்த கனகத்திற்கு அடிவயிற்றிலே 'சொரேர்' என்றது. மேலும் மேலும் அவளையே பார்க்கப் பார்க்க, 'பட பட'வென்று வெகு வேகமாகக் கனகத்தின் நெஞ்சு அடித்துக்கொள்ள ஆரம்பித்தது... 'எங்கேயாவது மயக்க முற்றுக் கீழே அப்படியே 'விழுந்துவிடுவோமோ' வென்றுகூடப்பயந்து, உட்கார்ந்திருந்த நாற்காலியின் கைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்! நடை, அங்க அசைவுகள், பார்வையெல்லாம் தத்ரூபம் அதே 'கமலி'தான்! சந்தேகமேயில்லையென்றெண்ணிக்கொண்டாள். வாயைத் திறந்து அவள் பாடவும் ஆரம்பித்ததும் கனகத்தின் சந்தேகம் பஞ்சாய்ப்பறந்தே விட்டது. கொஞ்ச நஞ்சம் இருந்ததும் போய், 'இவள் அதே கமலிதான்' என்ற தீர்மானத்திற்கும்

"வெண்மையான, சுத்தமான
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரை
மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது..."
என்கிருர் எம். வி. ராஜம்மா

இந்தியாவில் தயாரித்தது.

இந்த வெண்மையான, சுத்தமான சோப்பின் பாதுகாப்பை உங்கள் சருமத்திற்கு அளித்து யெளவன காந்தியைப் பெறுங்கள். எம். வி. ராஜம்மா கூறுவதாவது: "சருமத்தை பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பின் மிக மிருதுவான, நறுமணம் கமழும் நுரையைப் போல் வேறெதுவுமில்லை. அது உங்கள் இயற்கை எழிலை மலரச் செய்கிறது. அன்றியும் அதன் நீடித்திருக்கும் நறுமணத்தையும் நீங்கள் மிகவும் விரும்புவீர்கள்."

"...அதனுல்தான் என் வதனத்தை அழகாக வைத்துக் கொள்ள லக்ஸ் டாய்லட் சோப்பையே நம்பியிருக்கிறேன்."

முக்கிய செய்தி!

தலைமுதல் கால்வரை கவர்ச்சி அளிக்க
புதிய பெரிய சைஸிலும்
இப்பொழுது கிடைக்கிறது.
இன்றே வாங்குங்கள்!

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 420-X52 TM

வந்துவிட்டாள். கமலியின் 'அதே குரல்' எத்தனை யுகங்கள் ஆனால்தான் என்ன—அவளுடன் கூடவேயிருந்து பழகிவந்த கனகத்திற்குக்கூடவா மறந்து போய்விடும்? 'ஆனால் கமலி இங்கே எங்கே இருக்கிறாள்? யார் வீட்டில் இதுவரையில் இருந்து வருகிறாள்? எப்படி இப்பேர்ப்பட்ட பிரபலமான பாடகியாக மாறினாள்?' என்றெல்லாம் யோசிக்கத் தொடங்கினாள் கனகம். என்ன யோசித்தும் அவளுக்கொன்றுமே புரியவில்லை. எல்லாம் புதிர் போடுவது போல் ஒரே மர்மமாக இருந்தது.

கனகத்தின் மூளை குழம்பியது. அவள் தன் தலையை இரு கைகளாலும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள்... லேசாகத் தலையைத் திருப்பி பசுபதியின் பக்கம் கண்பார்வையைச் செலுத்தினாள்...

பசுபதி அப்படியே ஸ்தம்பித்துப்போய், கமலத்தையே கண்கொட்டாமல் கவனித்துக்கொண்டிருந்தான்! அவனுடைய இரண்டு விழிகளும் கண்களைவிட்டு வெகுதூரம் வெளியே வந்திருந்தன! இன்னும் சற்றுப்போனால் அவையிரண்டும் அப்படியே பிதுங்கி விழுந்துவிடுமோவென்று சந்தேகப்படும்படியாக இருந்தது! அவன் முகத்தில் பிரமை தட்டிப்போயிருந்தது. கைகளும், தேகமும் பதறுவதையும் கண்டாள் கனகம். அவனும் கமலியைத் தெரிந்துகொண்டுவிட்டானென்று அறிந்துகொண்டாள் கனகம்.

ராதா!—மேடை மீது அமர்ந்துகொண்டிருக்கும் 'பாடகி' இன்னாரென்று அவளுக்குத் தெரியவில்லை. பாவம்! கமலியைப்பற்றி அவள் ஏதோ கேட்டிருக்கிறாளே தவிர, இன்னமும் அவளை நேரிற் கண்டதில்லையல்லவா? அதுவும் பசுபதியும்—கனகமும் அவளைப்பற்றி, அவன் கொஞ்சம், அவள் கொஞ்சமாக ஏதோ சொல்லியிருப்பதினால்தான் அந்த மட்டில் அவ்வளாவாவது ராதைக்குத் தெரிந்திருந்தது. அதுவும் இல்லையானால் அவள் என்னத்தைக் கண்டாள்? பாவம்-பேதை! பசுபதியையும் கமலத்தையும் மாறி மாறிப் பார்த்தபடியே உள்ளூர மனோவேதனையை அனுபவித்தபடி உட்கார்ந்திருந்தாள்...

கச்சேரி துவக்கமாயிற்று. பெருத்த கரகோஷத்தினிடையே, ஸௌராஷ்டிரத்தில் 'ஸ்ரீ கணபதி நி ஸேவிம்பரே' என்று ஆரம்பித்துப் பாடி முடித்தாள். அப்புறம் பந்துவராளியை அருமையாக ஆலாபித்து 'நின்னே நெர நம்மினானுரா' என்று பாடினாள். பிறகு 'நடசி நடசி ஜூசே' என்று தொடங்கி வெகு உருக்கமாய் உருகினாள். அப்புறம் 'தோடி'யை விஸ்தாரமாகச் சஞ்சாரம் செய்து' 'கதி நீ வனி நே கோரி வச்சிதி' என்று அத்புதமாக ஆரம்பித்த பொழுது கமலத்தின் கண்கள் முன் வரிசை 'ஸீட்'டில் உட்கார்ந்தபடி, தன்னையே கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த பசுபதியின் மீது சென்று ஒரு க்ஷணம் நிலைத்த பிறகு அவள் திடுக்கிட்டு மறுபடியும் அவனை உற்றுப் பார்க்கவே—கமலத்தின் கண்களும், அத்துடனே அவள் மனதும் ஒரே சமயத்தில் அவன் மீதே லயித்துப் போய்விட்டபடியால், பாடிக்கொண்டே யிருந்த அவளது ஸ்தாயியில், திடீரென்று ஓர் இறக்கம் ஏற்பட்டு, ராகமும் போய்க்கொண்டிருந்த பாதையை விட்டுத் தவறிவிட்டது!

அவ்வளவுதான்! மறு க்ஷணம் ஸபையோரிடையே ஒரே, 'உஸ்ஸ்ஸ்' என்று நீண்ட சப்தமும், 'த்ஸொத்ஸொத்' என்ற பச்சாத்தாபங்களும், பிறகு அதிருப்தியும், கோபமும் கொண்ட கூச்சலும், ஆரவாரமும் எழுந்தன ஒருங்கே!

விஷயத்தைப் புரிந்து கொண்ட கமலம், 'சட்டென்று சமாளித்துக்கொண்டு, பழையபடி ஒழுங்காகப்பாட ஆரம்பித்தாள். மறுபடியும் தவறுதல்' ஏற்பட்டுவிடாமல் இருக்கவேண்டுமே, யென்று பயந்து கொண்டு வெகு உஷாரக இருக்கத் தொடங்கினாள்.

இருந்தாலும் கமலத்தின் உள்ளம் மாத்திரம் வெகு 'விறுவிறுப்புடன் உள்ளூற வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது.



'பசுபதி! யாருக்காக அவள் தன் சொந்த ஊரைவிட்டு, வாசலைவிட்டு, ஓடினாளோ—யாருக்காக இந்தப் பட்டணத்து வீதிகளிலெல்லாம்–நாயினும் கேடாக, தெருத் தெருவாய்த் தேடி அலைந்தாளோ–பசி பட்டினியையும் கவனியாமல் யாருக்காக இந்த ஊரையே சுற்றித் திரிந்தாளோ–எந்த ஒருவனுக்கு இத்தனை காலமும் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தாளோ—அதே ஆசாமி—அதே பசுபதி, இதோ, அவளுக்கெதிரிலே உட்கார்ந்துகொண்டு அவள் பாட்டைக் கேட்டுக்கொண்டிருக்கிறான்! அவள் பாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்! அவளைக் கண்டு கொண்டுவிட்டானோ அவன்? ஆம்... அப்படித்தான் போலிருக்கிறது!... இல்லையானால் ஏன் அவ்விதம் அவளையே விறைக்க விறைக்க — கண்ணை ஒரு க்ஷணம் கூட இமைக்காமல் பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டும்?... இப்பொழுது எங்கேயிருந்து வருகிறான்?... அவள் கச்சேரியென்று தெரிந்துதான் வந்தானோ? இருக்காது!... அகஸ்மாத்தாகத்தான் வந்திருக்கவேண்டும்!... இல்லையானால் ஏன் அப்படி–விரஸம் தோன்றும்படியாகப் பார்க்கவேண்டும்?... இங்கேயேதான் வசித்து வருகிறானோ?... எங்கே இருக்கிறான்?...

'பசுபதியின் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அவள்? அவள் யார்?...ஒரு வேளை...'அவளா'யிருக்குமா?...பின்...மடியில் ஒரு குழந்தையை வேறு வைத்துக்கொண்டிருக்கிறாளே? ஏன் பிறந்திருக்கலாகாதா?......... இன்னுமா அவளும், இவரும்...? இருக்கலாம்?...காதல்!...காதல்?... அவள் ஏன் இப்படித் தன்னையும், அவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும்?......

"என்ன?...என்ன!..,அது யார்?...கனகம்?... கனகம்!"

கமலம் இரண்டாவது தடவையாகப்பாடுவதில் 'தவறி விடுவாள் போலே' காணப்பட்டாள்...... நல்ல வேளை!...அப்படி யொன்றும் நேரவில்லை. சமயத்தில் சமாளித்துக் கொண்டு விட்டாள் 'சட்'டென்று......

சங்கீத ரஸிகர்களுக்கெல்லாம் இந்த மட்டிலும் தப்பித்துக் கொண்டாளே யென்று பரமதிருப்தி. 'குரல் சொன்னபடி கேட்கவில்லை' யென்று சிலர் சொல்லிக் கொண்டார்கள். 'அதில்லை ஸார்! விஷயம் வேறே! அவள் மனசில் என்னவோ வேலை செய்கிறது! அதனால் தான் பாட்டில் கவனமில்லை 'என்றனர்' விஷயம் தெரிந்த 'வேறு சிலர். 'ஜலதோஷமாயிருக்கும்!' என்று பேசிக் கொண்டனர் வேறு சிலர்.

எப்படியோ? அன்றைய கச்சேரியை, 'சுமார்' கோஷ்டியில் சேர்த்து விட்டனர் யாவருமாகச் சேர்ந்து கொண்டு. அதிகமாக எதிர்பார்த்துச் சென்றிருந்தவர்களுக்கு அன்றைய தினம் ஏமாற்றம்தான் மிஞ்சியிருக்கும்......

இரவு ஒன்பதரை மணி சுமாருக்குக் கச்சேரி முடிந்து, சபை கலைந்தது.

கூட்டம் கொஞ்சம் கூட இல்லாமல் அவ்வளவும் கலைந்து போகிற வரையில் பசுபதி, ராதா, கனகம் மூன்று பேரும் உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருக்காமல் காத்திருந்தனர்.

சமயம் பார்த்து, கனகம், தன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ராதையின் காதைக் கடித்தாள்—'ராதா! இப்பொழுது நான் உன்னிடம் ஒரு ரகசியம்சொல்லப்போகிறேன்! உனக்குத்தெரிந்ததாகவே வெளியில் காண்பித்துக் கொள்ளக் கூடாது—மனசிற்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும்—தெரிந்ததா?' என்று முதலிலேயே அவளை எச்சரித்து விட்டு, இத்தனை நேரம் இந்த மேடையில் கச்சேரி செய்து கொண்டிருந்தது யார் தெரியுமா?...அவள் தான் பசுபதியின் மாமா பெண்ணான கமலம்!...... 'பூங்குளத்தை விட்டு இவரைத் தேடிக்கொண்டு ஓடிவந்து விட்டாள்! என்றேனே—அந்தக் கமலம்!...இவளைத் தேடிக்கொண்டு தான் நான் இங்கே வந்தது!' என்றாள்.

ராதைக்கு வெளிப்படையாகவே தூக்கிப் வாரிப்போட்டது! எதிர்பார்க்காத இந்தச் செய்தியினால் உள்ளமும் உடலும் 'வெல வெல'த்துப்போய், அவள் திரும்பி, கனகத்தின் முகத்தை நோக்கினாள். அவளது அழகிய வதனம் அப்போது பொலி விழந்து விளங்கியது. பேயறைந்தவளைப் போலே காட்சியளித்தாள்.

"சப்தம்ஒன்றும் செய்யாதே?"என்கிற தினுஸில் தன் வாயை ஒரு விரலால் மூடிக்காண்பித்தாள்

"ஏன்? போகலாமே?...நாம் தான் பாக்கி! மீதி யெல்லோரும் வீட்டுக்குக் கூட போய்ச் சேர்ந்திருப்பார்கள்—பாடகியுள்பட" என்றான் பசுபதி.

அவன் சொன்னது முற்றிலும் உண்மை. சங்கீத மண்டபம் 'கிச்'சென்றிருந்தது.

வெளியே வந்தார்கள். 'பிசு பிசு' வென்று மழை தூறிக் கொண்டிருந்தது. ஏற்கனவே பலத்த மழை பெய்திருந்தது போல் தோன்றியது. வீதியெல்லாம் 'நச நச' வென்று ஒரே சேறும் சகதியுமாயிருந்தது.

வந்தது போல் நடந்தே போய்விடலாம், மெதுவாக என்பது இப்பொழுது கொஞ்சம் கூட முடியாத காரியம். கைக்குழந்தைக்காரியான ராதா வேறு இருக்கிறாள்......

ஒரு 'டாக்ஸி'யை அமர்த்தினான் பசுபதி. மூவரும் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

கார் புறப்பட்டது. வாயு வேகமாக திருவல்லிக்கேணியை நோக்கிப் பறக்கத் தொடங்கியது.

தெருக்களில் ஜன நடமாட்டம் என்பதேயில்லை. எங்குப் பார்த்தாலும் சுடுகாடு மாதிரியே தோன்றியது. மழை பலத்துப் பெய்ய ஆரம்பித்தது.........

மோட்டருக்கு நூறு அடி தூரத்திற்கு முன்னால் குதிரை வண்டியொன்று, 'டாக் டாக்' கென்று முழு வேகத்துடன் போய்க்கொண்டிருந்தது. மோட்டார் ஓட்டியும், 'ஹாரன்' அடித்துக் கொண்டே, 'ஸ்பீடையும்' குறைத்து, உஷாராகத்தான் ஓட்டிவந்தான்.......

ஹாரன் அடித்தவண்ணமே 'ஸ்டியரிங்' வீலைத் திருப்பி, குதிரை வண்டியை ஒதுக்க யத்தனித்தான். ஆனால் கொஞ்சம் தவறிவிட்டது! பெய்கின்ற மழைக்கும்-வீதியிலிருக்கும் முழங்கால் 'சகதி'க்கும், முன் சக்கரம் கொஞ்சம் பிசகி, மோட்டாரின் 'மட்கார்டு' குதிரை வண்டியின் சக்கரத்தில் பலமாகத் தாக்கி விட்டது!

அதே சமயம் அலறி அடித்துக் கொண்டு ஸ்டீரிங் வீலை மறுபுறம் திருப்பினான் டிரைவர்,

அதே சமயம் குதிரை வண்டி தலைகீழாகக் குடை சாய்ந்த சப்தம்; வண்டிக்குள்ளிருந்து 'ஐயோ ஈச்வரா!' என்று ஒரு பெண்ணின் வீறிட்ட அலறல்; 'சர்ர்ர்ர்!' என்று மோட்டாரின் பிரேக்குகள் விழும் சப்தம்! எல்லாம் ஒரே க்ஷண நேரத்தில்! குதிரை வெறி கொண்டு அறுத்துக் கொண்டு ஓடியது......

ஏதடா, சனியன்!" என்று கொண்டே டிரைவர் காரை விட்டு வெளியில் வந்தான். பசுபதியும் டிரைவரைப் பின் தொடர்ந்தான்.

குதிரை வண்டிக்காரன் ஒரு ஓரத்தில் விழுந்து பேச்சு மூச்சில்லாமல் கிடந்தான். மற்றும் இருவர்—ஒரு புருஷனும், ஒரு பெண்ணும்-தெருவின் மத்தியில் சேற்றில் விழுந்து கிடந்தார்கள்.

டிரைவர் நாற்புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். ஒரு ஈ காக்காயைக்கூடக் காணோம்! உயிர் இருப்பதாகவே தெரியவில்லை, அந்தத் தெருவில்!...'நல்ல வேளை! பிடியுங்க ஸார், ஒருத்தர் ஒருத்தராக! உங்க வீட்டுக்கே இவங்களைக் கொண்டு போயிடலாம்! நாளைக்காலையில் பேசிக்கிட்டா போவுது!' என்றான் டிரைவர்.

பசுபதி சற்று நின்று யோசித்தான். அதற்குள் அந்தத் தெருக்கோடியில் யாரோ இரண்டு பேர் பேசிக் கொண்டு வருவது தெரிந்தது......

"பிடியுங்க, ஸார்-ஒரு கை! ஜல்தி! யாரும் பார்க்கும் முன்னேயே கொண்டு போயிடலாம் இவங்களை! உம்! அதோ-யாரோ வந்திக்கிட்டிருக்காங்க பாருங்க?...சீக்கிரம்!" என்று அவசரப் படுத்தினான் டிரைவர்—தான் தப்பிக் கொள்வதற்காக.

யோசித்துக் கொண்டு நிற்க நேரமில்லை. மிகவும் அவசரமாக அந்தப் புருஷனையும், பெண்ணையும் காரில் கொண்டு போய்ச் சேர்த்ததும் கார் மறுபடியும் புறப்பட்டுக் காற்றாகப் பறந்தது!

குதிரை வண்டிக்காரன் கவனிப்பார் இன்றி அந்த மழையிலும், சேற்றிலும், தெரு ஓரமாகக் கிடந்தான்!

20

வீட்டுக்கு வந்து சேர்ந்ததும், அந்தப்பெண் கமலம் என்றும், அந்தப் புதிய புருஷன், சங்கீத மண்டபத்தில் தங்களை வரவேற்று உபசரித்த ஸபைக் காரியதரிசி என்றும் தெரிந்து கொண்டதும் அந்த மூவருமே சொல்ல முடியாத பிரமிப்பினால் அப்படியே திகைத்துப் போனார்கள். பகவத் சங்கல்பத்தின் அதிசயத்தைப்பற்றி மூவரும் தங்கள் தங்கள் மனப் போக்கின் பிரகாரம் உள்ளுக்குள்ளேயே வியந்து கொண்டார்கள்.

நல்ல வேளையாகக் கடவுள் கிருபையினால் கமலத்திற்கும், ஹரிஹரய்யருக்கும் பலமான அடி ஒன்றும் படாமல் தப்பித்துக் கொண்டார்கள். ஆனால் அவ்விருவருக்கும் தேகம் பூராவுமே சிராய்த்துப் போயிருந்தது. அவ்விரவு பூராவுமே இருவரும் பேச்சு மூச்சற்றுப் படுக்கையில் கிடந்தார்கள். கமலம் திடீரென்று ஏற்பட்டுவிட்ட எதிர்பாராத விபத்தினால் திகிலடைந்து மூர்ச்சையுற்றிருந்தாள். ஹரிஹரய்யர், எதையும் அதிக நேரம் தாங்க முடியாத கிழட்டுப் பருவத்தை அடைந்திருந்த படியினால் மூர்ச்சை போயிருந்தார். இடையில்

இருவருக்கும் சிறிது பிரக்ஞை வந்த சமயம் பார்த்து, அவர்களை அதிகம் பேசவிடாமல், அவர்கள் வாயில் சிறிது சூடான பாலை ஊற்றி நிம்மதியாகத் தூங்கும்படி சொன்னார்கள்.

மறு நாள் அதிகாலையில் ஹரிஹரய்யர் தான் முதன் முதலில் விழித்து எழுந்தார். பசுபதி தயாராய்க் கையில் காப்பியுடன் அவர் அருகில் நின்றுகொண்டிருந்தான்.

கண் விழித்த ஹரிஹரய்யர் தம் முகத்திற்கு நேராக நின்றுகொண்டிருந்த பசுபதியைக் கொஞ்ச நாழிகை வரையில் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார். அப்புறம் நாலாபுறமும் தலையைத் திருப்பிக் கவனித்தவாறு மிரள மிரள விழித்தார். அதற்குள் பசுபதி அவரிடம் சென்று மெதுவாக அவரைத் தூக்கி உட்காரவைத்தான். 'இந்தாருங்கள் – இந்தக் காப்பியை முதலில் சாப்பிடுங்கள்' என்று டம்ளரை நீட்டினான்.

அதை நன்றி ததும்பும் கண்களுடனே வாங்கிப் பருகிய பிறகு, களைப்புத் தீர்ந்ததற்கு அறிகுறியாக நீண்ட பெருமூச் செறிந்தார். உடனே பசுபதியின் முகத்தைப் பார்த்தவராய், 'நீங்கள் யார், தெரியவில்லையே?...நான் எங்கேயிருக்கிறேன் இப்போது?' என்று அடக்க முடியாத ஆவலுடன் வினவினார்.

"நீங்கள் இப்போது என் வீட்டில் தான் இருக்கிறீர்கள்! நேற்றைய தினம் உங்கள் ஸபையின் ஆதரவில் நடந்த கச்சேரிக்கு நாங்கள் வந்திருந்தோம். கச்சேரி முடிந்து வீடு திரும்பும் வழியில், கொஞ்சமும் எதிர்பாராத வகையில் ஒரு விபத்து நேர்ந்துவிட்டது!... பலத்த மழையின் காரணமாகத் தெருவெல்லாம் இருந்த சகதியினால், நீங்கள் வந்துகொண்டிருந்த வண்டியைத் தாண்டிக்கொண்டு போக நினைக்கையில்...எங்கள் மோட்டாரின் முன் சக்கரம்..." என்று பசுபதி மேலும் சொல்லி முடிக்கு முன்னர், ஹரிஹரய்யர், 'ஓஹோ! சரிதான்!... இப்பொழுது தான் எனக்கு எல்லாம் ஞாபகம் வருகிறது!... நாங்களும் அப்போதுதான் ஸபையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிப்போய்க்கொண்டிருந்தோம்... ஒரு வாடகை வண்டியில்...' என்றார்.

"ஏதோ தெய்வாதீனமாக எல்லாம் நடந்துவிட்டது. நல்ல வேளையாக நீங்கள் இரண்டு பேரும் இந்த மட்டில் உயிர் தப்பியது, எங்களைப் பிடித்த நல்ல காலம் என்று தான் சொல்லவேண்டும்!... ஏதோ?...எங்களை நீங்கள் தான் மன்னிக்கவேண்டும், ரொம்பவும்...!"

"நாங்கள் மன்னிப்பதா!... நன்றாகத்தானிருக்கிறது நாங்கள் மன்னிப்பது!... நீங்கள் சொல்லியது போல் எல்லாம் தெய்வாதீனம் தான். இதில் ஒருவரையும் குற்றம் சொல்ல ஒன்றுமேயில்லை... அந்தக் கருணாமூர்த்தியிருக்கிறான், நம்மையெல்லாம் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதற்கு! நீங்கள், பாவம் வீணாக அலட்டிக்கொள்ளாதீர்கள்!... போகிறது!... நல்ல வேளையாகக் கமலத்திற்கும் ஒன்றும் காயமில்லையே? அவளும் இங்குத்தானே இருக்கிறாள்?"

என்று விவரிக்கமுடியாத ஆவலுடன் வினவினர் ஹரிஹரய்யர்.

"அவளுக்கும் அதிகமாகக் காயம் ஒன்றுமில்லே பயப்படும்படியாக. லேசாக அங்கே கொஞ்சம் இங்கே கொஞ்சமாகச் சிராய்த்திருக்கிறது!... அவ்வளவுதான்... கவலேப்படவேண்டியதில்லே..." என்முன் பசுபதி.

"அந்த மட்டில் அதுவும் ரொம்ப சந்தோஷ மாகப் போயிற்று. எனக்குக் காயம் பட்டா லும் – உயிருக்கே ஆபத்தாயிருந்தாலும்கூட அதைப்பற்றி எனக்குக் கவலேயில்லே...ஆனல்... என் கமலம், ஆண்டவன் அருளால், ஒன்று மில்லாமல், நன்ருயிருக்கவேண்டும்...! இதுதான் எனக்கு எப்பவும் பிரார்த்தனே இராப் பகலாக!" என்ருர் ஹரிஹரய்யர்.

"ஆண்டவன் உங்கள் இருவர் விஷயத்திலுமே கவலேக்கு இடமே வைக்கவில்லே, எங்களுக்கும்! உங்களுக்குப் போட்டிருக்கிற மருந்தைத்தான் அவள் உடம்பிலும் தடவியிருக்கிறது. உங்களே ஒரு சங்கதி கேட்கவேண்டுமென்று நேற்று ராத்திரி முதல் என் மனசு அடித்துக் கொள் கிறது! கிடந்து தவிக்கிறேன். கேட்கலாமா?..." என்ருன் பசுபதி.

"எது வேண்டுமானுலும், தாராளமாகக் கேளுங்கள்! சொல்லுகிறேன்–ஒரு இரவு பூரா வுமே எங்களுக்காகக் கவலேப்பட்டு–அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்த உங்களுக்குச் சொல்லக் கூடவா, எனக்கு வலிக்கும்? கூசாமல் கேளுங் கள்!" என்ருர்.

"வேருென்றுமில்லே...கமலம் உங்களிடம் எப்படி வந்து சேர்ந்தாள்? எத்தனே நாளாக உங்களிடம் இருந்து வருகிருள்?...அவள் கதை யென்ன?-என்று இவற்றைப்பற்றித் தயவுசெய்து கொஞ்சம் விவரமாக என்னிடம் தெரிவிக்க லாமா?" என்று மிகவும் வினயத்துடன் கேட் டான், பசுபதி.

அவன் கேள்வியைக் கேட்ட ஹரிஹரய்யர் முதலில் கொஞ்சம் திடுக்கிட்டுப் போனுர். அப்புறம் அவனேப் பார்த்து, 'நான் கேட் கிறேனேயென்று நீங்களும் வித்யாசமாக ஒன்றும் நினேத்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் கமலத்திற்கு ஏதாகிலும் உறவோ?" என்ருர் ஆச்சரியத்துடனே.

"ஆமாம்! அவளுக்கு உறவுதான்!"

ஹரிஹரய்யர் சிரித்தார். 'அதுதானே கேட் டேன்?... இல்லாவிட்டால் இத்தனே குறிப் பாகக் கேட்க முடியுமாவென்றுதான் யோசித் தேன். 'ஆனல் அவள் எனக்கு உறவு' என்று தான் நான்–என்னேத் தெரிந்த மற்ற எல்லோ ரிடத்திலும் இது வரையில் சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன்!... ஆனல் அதில் பொய் ஒன்றும் கிடையாது. உண்மையில் பூங்குளம் சுப்பராம அய்யர்–பால்ய முதற்கொண்டே எனக்கு ஆப்த சிநேகிதர். பத்தாவது வரை யில் நாங்கள் இருவரும் சேர்ந்தேதான் படித்து வந்தோம். அப்புறம் அவர் வேறு வழியில் போனுர். நான் ஸங்கீதத் துறையில் இறங்கி னேன். கமலம் சுப்பராம அய்யரின் பெண் என்ருல் எனக்கும் அவள் பெண்தானே?' என்று ஆரம்பித்து, கமலம் அவருடைய வளர்ப்புப் புதல்வியாக மாறியதையெல்லாம் விவரமாகச் சொல்லி முடித்தார். கடைசியில்–' கமலம் முதலில் ஒன்றையுமே என்னிடம் தெரிவிக்கமாட்டேனென்று பேசாமலேயிருந்து வந்தாள். நானும் அவளே வற்புறுத்தாமலேயே அவள் இஷ்டம்போல் விட்டு வந்தேன்... அப் புறம், பாவம், அவளுக்கே என்ன தோன்றி யதோ, என்னவோ–அவளாகவே சிறுகச் சிறுகச் சந்தர்ப்பம் வந்தபோதெல்லாம், எல்லாவற்றை யுமே என்னிடம் சொல்லிவிட்டாள். பாவம்! ரொம்பவும் தங்கமான பெண்! அவளுக்கு இப்படியெல்லாம் நேரவே கூடாதுதான்... இருந்தாலும் தெய்வ சங்கல்பம் எவ்விதமிருக் கிறதோ, யார் கண்டார்? எப்படியிருந்தாலும் அந்தக் கருணுமூர்த்தியும், கிருபாஸமுத்ரமான என் அன்னேயும் அவளே அனுதரவாக இப்ப டியே விட்டுவிடமாட்டார்களென்றே நான் நிச்சயம் நம்புகிறேன். ஏன்? நீங்களும் 'கமலத் தின் உறவினர்' என்றுதானே சொல்லிக் கொள்ளுகிறீர்கள்? இதையும் தான் உங்களி டம் சொல்லிவிட்டால தான் என்ன மோச மாகவா போய்விடப்போகிறது!... உங்களேயும் பார்த்தால் மிகவும் நல்ல குணமுள்ளவராகத் தான் காணப்படுகிறீர்கள். என் கமலத்திற்கு உங்களால் நன்மைதான் உண்டாகுமே தவிர கெடுதல் ஏற்படாது' என்று, என்னவோ, என்னுள், என் அந்தராத்மா சொல்லுகிறது!... ஏதோ? உங்களால் ஆன உபகாரத்தை நீங் களும் அவளுக்குச் செய்யக்கூடாதா? யாரோ அவளுக்கு ஒரு அத்தானும்! 'பசுபதி' என்று பெயராம்! அவளேக் 'கல்யாணம் செய்து கொள்ளுகிறேன்' என்று சொல்லிச் சம்மதித்து விட்டுப் பிறகு அன்றிரவே ஒருவருக்குமே தெரியாமல் பூங்குளத்தை விட்டே ஓடிப்போய் விட்டானும்! என் கண்ணுன கமலம் இன்றும் நாளேக்கும் அந்தப் பசுபதியையே நினேத்து நினேத்து அப்படியே ஏங்கி, உருகி, தவித்துக் கொண்டிருக்கிருள்! அவனேத் தேடிக்கொண்டு, அவளும், அவன் பின்னுலேயே ஊரை விட்டு, பெற்ற தாய் தந்தையரை விட்டு, வீட்டை விட்டு, இங்கே ஓடி ஓடியே வந்திருக்கிருள். அவன் படித்துக்கொண்டிருந்த காலேஜில் போய் அவனேப்பற்றி விசாரித்திருக்கிருள்! ஆனல் அவன் அந்தக் காலேஜிலும் அப்போது இல்லேயென்று கேள்விப்பட்டு, எங்கேயாவது அவன் முகத்தையாவது பார்க்கமாட்டோமா வென்று துடி துடித்துக்கொண்டு இத்தனே பெரிய பட்டணத்தில் தெருத் தெருவாய்ச்

சுற்றி, அந்தப் பசுபதியைத் தேடியலைந்து தவியாய்த் தவிக்கிறாள், பாருங்கள், ஸார்! அடாடா! எத்தனை இரவு பகல்கள் ஒரு கவளம் அன்னமின்றி ஒருவாய் தண்ணீர் இல்லாமல் தங்க இடமில்லாமல் தவித்திருக்கிறாள், தெரியுமா! இப்பேர்ப்பட்ட மாணிக்கத்தை ஏமாற்றிவிட்டு ஓட அந்தப் பாவி பசுபதிக்கு எப்படித்தான் மனசு வந்ததோ! என் கண்ணான கமலத்தின் கையைப் பிடித்துக் கல்யாணம் செய்துகொள்ள ஒருவன் பூர்வ ஜன்மத்திலேயே எவ்வளவோ பாக்யம் செய்திருக்கவேண்டும், ஸார்! எவ்வளவோ கொடுத்து வைத்திருக்கவேண்டும்!... முட்டாள்! மாணிக்கத்தின் மதிப்புத் தெரியாத மூடன்! என் கமலம்! அவள் அத்தனையும் கமலத்தைப் போன்றவளே: அத்தனை மிருது, அத்தனை துல்யம்! அத்தனை பரிசுத்தம்! தேவர்களுக்கு அர்ச்சிக்கப்படவேண்டிய கமல புஷ்பம் அல்லவா அது? எங்காகிலும் அந்தப் பசுபதியைக் கண்டால் நீங்களும் கொஞ்சம் சொல்லுங்கள், ஸார், அவனிடம்! அவன் மனசைத் திருப்ப முயற்சித்துப் பாருங்கள்! 'கல்யாணம் செய்துகொண்டால் பசுபதியைத் தான் செய்துகொள்வேன்! இல்லையானால் இப்படியே கன்னிகையாகவே இருந்து என் காலம் முழுவதையும் கழித்துவிடுகிறேன்! என்று தீவிரமான வைராக்யத்துடனே இருக்கிறாள், ஸார்? என்ன? அவனிடம் நீங்களும் கண்டால் சொல்லுகிறீர்களா? எப்படியும் 'அந்தப் பசுபதி அகப்படாமல் போகமாட்டான்' என்றே எனக்கு என்னமாகவோ தோன்றுகிறது!... பார்க்கலாம், எதற்கும்!... என் அன்னை சாரதாம்பிகை இருக்கவே இருக்கிறாள். கமலத்தை, களங்கமற்ற கமலத்தைப் பரிதவிக்க விட்டுவிடமாட்டாள் இப்படியே!... ஆமாம்?... இவ்வளவு தூரம் கேட்டீர்களே?... நீங்கள் கமலத்திற்கு என்ன உறவு என்பதை இது வரையில் என்னிடம் சொல்லவில்லையே?... நானும் கேட்க மறந்தே போனேன்! இப்பொழுது தான் சொல்லுங்கள், என்று கடைசியாக ஒரு பெரிய வெடி குண்டையும் வீசியெறிந்தார் ஹரிஹரய்யர்!

பசுபதியின் கோழை மனதைக் கலக்குவதற்கு அவ்வளவே போதுமானது! அவன் தலை சுழலுவது போலிருந்தது. அவன் உள்ளம் தத்தளித்துத் தடுமாறியது. நெஞ்சம் பதறியது. கீழே விழுந்து விடுபவன் போலே அவன் தடுமாறினான். 'இத்தனை மகத்தான தியாகியா கமலம்!' என்று எண்ணியெண்ணி, மனம் குழம்பியவனாய் அப்படியே திக்பிரமித்து நின்றான்!

சில நிமிஷங்கள் மௌனமாகவே கழிந்தன. ஹரிஹரய்யர் பசுபதியின் முகத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தார்.

பிறகு பசுபதி, அவரது கேள்விக்குப் பதில் சொல்லாமலேயே அவரைப் பார்த்து, 'எல்லாம் சரிதான்...?... ஆனால்... பசுபதியைக் காலேஜில் தேடிக்கொண்டு போனதாகச் சொன்னீர்களே?... 'அங்கே அவன் இல்லை' என்று மட்டும் தெரிந்ததாமோ?... கமலம் வேறு ஒன்றுமே அவனைப்பற்றிக் கேள்விப்படவில்லை?' என்று சர்வ சாதாரணமாகக் கேட்பவன் போலே (ஆனால் உள்ளூறத் துடிக்கின்ற உள்ளத்துடன்!) அவரை வினவினான்,

"அவளிடமிருந்து நான் கேட்டது இவ்வளவு தான். இல்லை, அவள் என்னிடம் சொன்னது இவ்வளவுதான் என்று வைத்துக்கொண்டாலும் சரி. என்னுடன் அவள் இவ்வளவு தூரம் மனம் விட்டு சொன்னதே பெரிதல்லவா?... அது சரி?... நீங்கள் யார் என்பதை... இன்னும்...?"

என்ன சொல்வதென்று தெரியாமல் க்ஷண நேரம் ஸ்தம்பமாய் நின்றான் பசுபதி. பிறகு, கமலம் சொல்லிய அவளுடைய அத்தான் பசுபதி நான்தான்!" என்றான் மெதுவாக.

இந்தத் தடவை அவன் சொன்னதைக் கேட்ட ஹரிஹரய்யர் அப்படியே ஸ்தம்பித்துப் போனார்! தம்மைச் சமாளித்துக்கொண்டு அவர் மறுபடியும் பேச ஆரம்பிப்பதற்கு வெகு நேரம் சென்றது...

"என்ன?... நீங்கள்தானா பசுபதி!... பின்... அப்பொழுதே... முதலிலேயே...என்னிடம் ஏன் சொல்லவில்லை?..."

பசுபதி பதில் பேசாமல் மௌனமாயிருந்தான்.

இன்னும் சில நிமிஷங்கள் அமைதியாகவே சென்ற பிறகு, அவனைப் பார்த்து மறுபடியும் ஹரிஹரய்யர் 'போகிறது!... இப்பொழுதாவது சொன்னீர்களே?... நான் இதுவரை உங்களிடம் சொன்ன அவ்வளவும் ஒரு வார்த்தை விடாமல் ஞாபகம் இருக்கிறதல்லவா?... அப்பொழுதே சொன்னேன் அல்லவா?... எப்படியும் 'பசுபதி அகப்பட்டுவிடுவான்' என்று எனக்குத் தோன்றுகிறதென்று?... இத்தனை நாழியும் அந்தப் பசுபதியுடனேயேதான் பேசிக்கொண்டிருந்தேன் என்பது இப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது!... போகிறது என் அன்னை சாரதாம்பிகை கருணைசமுத்ரம் என்பது இப்பொழுதாவது தெரிகிறதல்லவா?... 'என் கமலத்தை அவள் எந்நாளும் இப்படியே பரிதவிக்கும்படி விட்டுவிடமாட்டாள்' என்று சொல்லி நான் வாய் மூடவில்லை. பலனைப் பார்த்தீர்களா! இதுவே நல்ல சகுனம்!... கமலத்தைப்பற்றி இவ்வளவு தூரம் தெரிந்து கொண்ட பிறகாவது உங்கள் மனம் மாறியதா? போனதெல்லாம் போகட்டும், விட்டுத் தள்ளுங்கள். பழைய குப்பையை! இந்த க்ஷணம் கமலியை விவாஹம் செய்துகொள்ள உங்களுக்கு ஆக்ஷேபனை

யில்லையே? சொல்லுங்கள்!... இதோ... இப்பொழுதே நானே நிமிஷத்தில் ஏற்பாடு செய்து விடுகிறேன்!' என்றார் மிகவும் பரபரப்புடன்.

ஏற்கனவே பசுபதியின் உள்ளம் கமலத்தைப் பற்றி வெகு தீவிரமாக யோசித்துக்கொண்டிருந்தது. ஹரிஹரய்யர் வேறு, போதாக் குறைக்கு இவ்விதம் சொன்னதும், அவனது பரந்த நெற்றியிலே வியர்வைத் துளிகள் அரும்பின. ஆழ்ந்ததொரு பெருமூச்சு அவன் உள்ளத்தின் ஆழத்திலிருந்து மெதுவாக வெளியேறியது. ஹரிஹரய்யரைப் பார்த்து அவன் நடுங்கிய குரலிலே 'இவ்வளவு அவசரமாக வேண்டாம்!... பார்த்துக்கொள்ளலாம்.... கொஞ்சம் யோசனை செய்து சொல்லுகிறேன்...' என்றான்.

"அப்படியானால் சரி. இன்று நான் போகும் பொழுது கமலத்தையும் என் பின்னேயே என் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன்" என்றார் ஹரிஹரய்யர்.

"ஏன்? இனிமேல் அவள் இங்கேயே இருக்கட்டுமே? தவிர அவள் உடம்பிலிருக்கும் சிறிய காயங்களுக்கெல்லாம் சிகித்ஸை செய்யலாமென்று பார்க்கிறேன்!... நீங்கள், எப்பொழுது இஷ்டப்பட்டாலும், கமலத்தை இங்கேயே வந்து பார்த்து, அவளுடன் பேசிக்கொண்டிருக்கலாம். நீங்களும் அடிக்கடி இங்கே வந்துபோய்க்கொண்டிருந்தால் எங்களுக்கும் எவ்வளவோ சந்தோஷமாயிருக்கும். கொஞ்சம் தயவு செய்து பெரிய மனசு பண்ணிக் கமலத்தை இங்கேயே நீங்கள் விட்டு வைக்கலாகாதா?" நானும் அவளுடன் எவ்வளவோ விஷயங்கள் பேச ஆசைப்படுகிறேன்.' என்று ஹரிஹரய்யரைப் பார்த்துப் பரிதாபகரமாகக் கெஞ்சினான் பசுபதி.

ஹரிஹரய்யர் சற்று நேரம் ஏதோ யோசித்தார். பிறகு உங்கள் இஷ்டப்படியே இருக்கட்டும்! என்றைக்கிருந்தாலும் கமலம் உங்கள் சரக்குத்தானே! அவளுக்கும் உங்களைத் திரும்பவும் நேரில் கண்டுவிட்டால், உங்களை விட்டு மறுபடியும் என்னுடன் வர மனமிருக்காது என்றுதான் நினைக்கிறேன். ஆனால்... ஜாக்கிரதை!... ஏற்கனவே அவள் உள்ளம் தாங்க முடியாத ஏமாற்றத்தினால் உடைந்து போயிருக்கிறது. மறுபடியும் அவளை ஏமாற அடித்து விடாதீர்கள்.' என்றார் சிரித்துக்கொண்டே.

பசுபதி மௌனமாகத் தலை குனிந்து கொண்டான்.

இத்தனை நேரமும், அவர்கள் இருந்த அறைக் கதவின் பக்கத்தில், மறைவாக இருந்து கொண்டு, அந்தச் சம்பாஷணையை ஆதியோடந்தமாய் ஒன்று விடாமல் கேட்டுக்கொண்டேயிருந்த இரண்டு உருவங்கள் ஏக காலத்தில் நீண்ட பெருமூச்செறிந்தன.

அவர்களுள் ஒருத்தி ராதா: மற்றொருத்தி கனகம்!

ராதா ஏக்கம் நிறைந்த பெருமூச்செறிந்தாள்.

கனகத்தினுடையதில் விஷம் கலந்திருந்தது.

[தொடரும்]

ஜீவ தாதுக்கள்

அ. ராம்கோபால்

நம் வாழ்விற்குத் தேவையான அநேக தாதுப் பொருள்களை இயற்கைத்தேவி பூமியின் கண் புதைத்து வைத்திருக்கிருள். அவற்றைத் தாவரங்கள் தேடிச் சேகரித்துத் தங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதோடு மனித சமூகத்துக்கும் தந்து உதவுகின்றன. தாவரங்கள் இன்றேல் இத்தாதுப் பொருள்கள் மனிதனுக்குக் கிட்டாது. இதனுல் அவன் உடல் நலம் குன்றி நாளடைவில் நசித்துப்போயிருப்பான்.

தாவரங்களில்

தாவரங்களைச் சோதித்துப் பார்த்தால் அவற்றில் செல்லுலோஸ் (Cellulose), சர்க்கரை (Sugar), ஸ்டார்ச் (Starch), கோந்து (Gum), எண்ணெய் அல்லது கொழுப்புச் சத்து (Fat or oil), புரொடீன் (Protein), தண்ணீர், சாம்பல் முதலியவை அடங்கி இருப்பதாகத் தெரிய வந்திருக்கிறது. இவற்றையெல்லாம் இரசாயனக் கூறுபாடு செய்து பார்த்ததில் கீழ்க்கண்ட மூலப் பொருள்களால் ஆக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கரி பிராண வாயு நீரகம் →	செல்லுலோஸ் சர்க்கரை ஸ்டார்ச் கோந்து எண்ணெய்
கரி பிராண வாயு நீரகம் உப்பு வாயு கந்தகம் பாஸ்பரஸ் →	புரொடீன்
நீரகம் பிராணவாயு →	தண்ணீர்
கந்தகம் பாஸ்பரஸ் பொடாசியம் மாக்னிசியம் இரும்பு சோடியம் சிலிகன் மாங்கனிஸ் க்ளோரின் ப்ளோரின் →	சாம்பல்

இவற்றுள் கரியை இலைகள் மூலம் காற்றிலிருந்து தாவரங்கள் பெறுகின்றன. நீரகம், பிராணவாயு இரண்டையும் தண்ணீர் மூலம் பெறுகின்றன. மற்றவை எல்லாம் பூமியிலிருந்து கிடைப்பவையே. தாவரங்களிலிருந்து கிடைக்கும் தானியம், கீரை, காய்கறி, பழங்கள் மசாலைப் பொருள்கள் முதலிய வற்றை மனிதன் தன் உணவாக உட்கொள்ளுகிருன். இதன் மூலம் அவற்றில் அடங்கியுள்ள மேலே கூறிய தாதுப்பொருள்கள் எல்லாம் மனித இரத்தத்தோடு கலந்து அவனுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்கின்றன. இத்தாதுப்பொருள்கள் எக்காரணத்தினுலாவது தாவரங்களுக்குப் போதுமான அளவு கிடைக்காவிட்டால் அவற்றின் வளர்ச்சி குன்றும். பலவித நோய்கள் அவற்றைப் பற்றிக்கொள்ளும். இதனுல் அவை சரியான பலன் கொடுக்கமுடியாமல் போய்விடும். இது மனிதனுக்கும் பொருந்தும். மனிதனையும் தாவரங்களையும் எவ்விதம் இத்தாதுக்கள் வாழ்விக்கவும் பாதிக்கவும் செய்கின்றன என்பதை இங்கே சற்றுக் கவனிப்போம்.

கால்சியம்

மனித வாழ்வைப் பாதிக்கும் தாதுப் பொருள்களில் இது முக்கியமானது. எலும்பும் பற்களும் உறுதியாக அமைய உதவும் தாது இதுதான். இரத்தம் சுத்தமாக ஆவதற்கும், பால் கொடுக்கும் தாய்மார்களுக்குப் பால் பெருகவும் உதவுவது இத்தாதுவே. பால், தயிர், கடுகுக் கீரை, டர்னிப், நிலக்கடலை, வாதுமைப் பருப்பு, முட்டை மஞ்சள் கரு, அவரை, மொச்சை, பீன்ஸ், கறுப்பு உளுந்து, லெட்டூஸ், முட்டை கோசு, பசலிக்கீரை, மற்றக் கீரை வகை முள்ளங்கி, எலுமிச்சை, ஆரஞ்சு, திராட்சை, அத்திப்பழம், வெந்தயம், எள் முதலியவைகளில் இத்தாதுச் சத்து மிகுதியாக அடங்கி இருக்கிறது.

தாவரங்களுக்கு இச்சத்து போதுமான அளவில் கிட்டாவிட்டால் முதலில் புதி

தாகத் துளிர்த்துள்ள அதன் பாகங்கள் பாதிக்கப்படும். வேர்கள் சரியான வளர்ச்சி யடையாது. இதனுல் போதுமான பயிரு ணவுகளை அவைகளால் கிரகிக்க முடியா மல் போய்விடும். சர்க்கரைவள்ளி, முள் ளங்கி, உருளைக்கிழங்கு போன்ற கிழங்கு வகைகள் நன்கு பெருக்கவும் இச்சத்துத் தேவை. அகாரணமாகப் பூக்கள் உதிர்வ தற்குக் காரணமும் இச்சத்துக் குறைவே. இலைகளின் ஓரங்கள் சுருங்கி மடிவதற்கும் இச்சத்துக் குறைவே காரணம்.

சோடியம்

சோடியம் ஜீரண சக்தியைப் பெருக்க வல்ல ஒரு தாதுப் பொருள். இதன் உதவியால் தான் இரத்தத்தில் இரும்புச் சத்து கலக்க முடிகிறது. இரத்த விருத் திக்கு இரும்புச் சத்தே பிரதானமானது. தசைக் கோளங்கள் தடித்துக் கெட்டிப்படா மலிருக்கவும் இச்சத்தே உதவுகிறது. காது செவிடாகாமலும் நன்ருகக் காது கேட்கும் படி உதவுவதும் இச்சத்தே. இச்சத்துக் குறைவு ஏற்பட்டால் காது மந்தம், இரத் தக் குறைவு தசைக் கோளங்கள் முரடு கட்டுதல் போன்ற குறைகள் உண்டாகும். உலர்ந்த பழங்கள், பால், தயிர், முட்டை, வெள்ளரிக்காய், கக்கரிக் காய், ஆப்பில், பருப்புக்கீரை, லெட்டூஸ், காரெட், தர்பூஸ்பழம், பீட்ரூட், தக்காளி, முதலியவைகளில் இச்சத்து மிகுதியாக அடங்கி இருக்கிறது.

இச்சத்து தாவரங்களை எவ்விதம் பாதிக் கிறது என இன்னும் தெளிவாகக் கண் டறியப் படவில்லை. ஒரு பயிருக்குக் கிடைக் கும் கால்சியத்தின் அளவு சோடியத்தை விடக் குறைவாஞல் அதன் இலைகள் வெண்மை கலந்த மஞ்சள் நிறமாக மாறி, சீக்கிரம் உதிர்ந்துவிடுவதாக எப். ஜி. கிர கெரி, எப்: ஜே. ரிச்சர்ட்ஸ், ஷூஹ் என்னும் மூன்று தாவர நிபுணர்கள் கண்டறிந்திருக் கிருர்கள். ரோதம்ஸ்டெட் (Rothemsted) தாவர ஆராய்ச்சி நிலையத்தில் நடந்த சோதனைகளும் இதை உறுதிப்படுத்து கின்றன. ஒரு பயிருக்கு அதிகமான கால் சியமும் குறைவான சோடியமும் கிடைத் தால் நடுத் தண்டின் வளர்ச்சி குன்றும். ஏராளமான பக்கத் தண்டுகள் வெடிக்கும். செடிகள் படுக்கை வசமாக வளர ஆரம் பிக்கும். இலைகள் சிறுத்து, கரும்பசுமை யாகவும் கெட்டியாகவும் மாறி அவற்றில் சிகப்புப் பொட்டுகள் விழ ஆரம்பிக்கும் என ஜி. ஜான்சன் ஆர். பி. பர்த்லொமியு என்னும் இரண்டு தாவர சாஸ்திரிகள் கண்டறிந்திருக்கின்றனர்.

பாஸ்பரஸ்

மூளை, இருதயம், இரத்தக் குழாய் முத லியவற்றிற்கு வலுவூட்டுவது பாஸ்பரஸ். எலும்பு, பல், தலைமயிர் முதலியவைகளுக்குப் பலம் அளிப்பதும் பாஸ்பரசே. மூளை வேலை செய்கிறவர்களுக்கு இச்சத்து மிக மிக அவசியம். இச்சத்துக் குறைவால் மனச்சஞ்சலம், சோர்வு, மறதி, தலைமயிர் உதிர்தல், சொட்டை விழுதல், எலும்பு வலுப்படாமல் மெலின சரீரமாக இருத்தல் போன்ற குறைகள் உண்டாகும். கோகோ, முட்டை மஞ்சள் கரு, பால் பவுடர், அவரை, மொச்சை, பீன்ஸ், துவரை, பட்டாணி, கோதுமை, ஜவ்வரிசி, வாது மைப் பருப்பு, ஆப்பில், தண்டங்கீரை, மீன் முதலியவைகளில் இச்சத்து அதிகம் அடங்கி இருக்கிறது.

தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவைப் படும் மூன்று பிரதான சத்துக்களில் பாஸ் பரசும் ஒன்று. இச்சத்துக் குறைந்தால் இலைகளின் பசுமையும் பளபளப்பும் குன் றும். இலையின் ஓரங்கள் மேல்நோக்கிச் சுருளும். இது மண்ணிற்குள் உள்ள வேர், கிழங்கு முதலியவைகளை நன்கு வளரச் செய்யும். ஆகையால் எல்லாவகைத் தாவரங் களுக்கும் முக்கியமாகக் கிழங்கு வகை களுக்கு இது முக்கியம். பழத்தோட்டங் களுக்கும் முக்கியம். இது தாவரங்கள் எளிதில் பூக்க உதவும். தானியப் பயிர் களுக்கு இச்சத்துக் குறைந்தால் ராசி குறைவுபடும்.

கந்தகம்

மனிதனின் ஆயுளை விருத்தி செய்யும் தாது கந்தகம்தான். பித்தப்பை (Liver) க்கு ஆக்கமளிப்பதும் கந்தகம்தான். இது சரீரத்தில் உட்பாகங்களிலும் அவயவங் களிலும் சேர்ந்துள்ள அழுக்குகளைப் போக்கி சரீரத்தின் உட்பகுதியைச் சுத்தம் செய்ய வல்லது. நரம்புகளுக்கு வலுவூட்டும் சக்தி யும் இதற்குண்டு. கந்தகக் குறைவிஞல் உடம்பில் அசுத்தங்கள் அதிகரிக்கும். பித் தப்பை சரியாக வேலை செய்யாது. இத ஞல் பலவித ஜீரணக் கோளாறுகள் உண் டாகும். கந்தகச் சத்து தயிர், முட்டை, தானியங்கள், மீன், மாமிசம், உலர்ந்த

பழங்கள், ஈஸ்ட் எனப்படும் காடி, லெட்டூஸ், சாக்லெட், பேரீச்சம்பழம், அத்திப்பழம், பருப்புக்கீரை, பால், வெங்காயம், உருளைக் கிழங்கு முதலியவைகளில் முக்கியமாக அடங்கி இருக்கிறது.

இச்சத்துத் தாவர வளர்ச்சியை எவ் விதம் பாதிக்கிறதெனத் திட்டமாக இன் னும் கண்டறியப்படவில்லை. தாவரங்களின் இலைகளில் மஞ்சள் நிறப்பொட்டுகள் அல் லது காப்பி நிறப்பொட்டுகள் ஏற்படுவது கந்தகக் குறைவினால்தான்.

பொடாசியம்

உடம்பில் ஏற்படும் காயங்கள் புண்கள் முதலியவை சீக்கிரம் ஆற உதவுவது பொட் டாசியம் சத்துத்தான். உடம்பில் இச்சத் துக் குறைவாக உள்ளவர்களுக்குக் காயமோ, புண்ணோ ஏற்பட்டால் சீக்கிரம் ஆறாது. உடம்புக்குத் தெம்பும் உற்சாக உணர்ச்சி யும் அளிப்பது இச்சத்தே. இச்சத்துப் போதுமான அளவு உடம்பிலிருந்தால் மலச் சிக்கல் ஏற்படாது. குறைவு பட்டால் மலச்சிக்கல் உண்டாகும். பொடாசியம் நரம்புகளுக்கும் பித்தப் பைக்கும் வலு வூட்டுவதிலும் சிறந்தது. இச்சத்துப்போது மான அளவு உடலில் இருந்தால் நோவு களையும், வலிகளையும் தாங்கிக் கொள்ளும் சக்தி உண்டாகும். முகத்தில் ஒருவித தேஜஸ் உண்டாக்கும் சக்தியும் இதற்கு உண்டு. இச்சத்துக் குறைந்தவர்கள் முகத் தைப் பார்த்தால் தூங்கி வழிவது போலி ருக்கும். தக்காளி, கத்தரி, உலர்ந்த பழங் கள், ஆரஞ்சு, எலுமிச்சை, நாரத்தை, கொழுஞ்சி, பம்ளிமாசு, திராட்சை, இலந்தை, லெட்டூஸ், உருளைக்கிழங்கு, பட்டாணி, பீச், பால், மொச்சை, அவரை, பீன்ஸ், அன்னாசி, வெள்ளரி, கக்கரி முதலிய வைகளில் பொட்டாசியம் சத்து மிகுதியாக உண்டு.

இலைகள் காற்றிலிருந்து கரியமிலவாயு வைப் பிரித்து தம் உணவுக்கு வேண்டிய கரிச் சத்தைப்பெற உதவுவது இத்தாதுவே. ஒளிச் சேர்க்கை (Photo Synthesis) செய் யும் சக்தியை இலைகளுக்கு அதிகமாகக் கொடுத்து அதன் மூலம் தாவர உணவு உற்பத்தி அளவை அதிகரிக்கச் செய்வதும் இச்சத்தே. பொடாசியம் சத்து போது மான அளவு நிலத்தில் இல்லாவிட்டால் நிலத்தில் உள்ள இரும்புச் சத்தை வேர்கள் கிரஹிக்க இயலாது என ஜி. ரோடு என் னும் தாவர நிபுணர் கண்டறிந்திருக்கிறார். இதனால் தாவரங்களின் பசுமை குன்ற ஏதுவாகும் எனவும் அவர் கூறுகிறார். பொட்டாசியக் குறைவினால் வேர் வளர்ச்சி யும் அதன் மூலம் தாவர வளர்ச்சியும் குன்றும்.

மாக்னீசியம்

நரம்புத் தளர்ச்சியையும் சோர்வையும் போக்கி அவற்றிற்கு வலு ஊட்ட வல்லது மாக்னீசியம் தாது. இத்தாது போதுமான அளவு உடம்பிலிருந்தால் நல்ல நித்திரை வரும். உடம்பும் தெம்பாகவும் உற்சாக மாகவுமிருக்கும். குறைந்தால் சோம்பல் மிகுதியாக இருக்கும். தூக்கம் சரியாக வராது. பித்தமும் புளிச்சேப்பமும் அதி கரிக்கும். கோதுமைத் தவிடு, உலர்ந்த பழங்கள், கோகோ, தக்காளி, பச்சைக் கீரைகள், பேரீச்சம்பழம், அத்தி, இலந்தை, கிஸ்மிஸ், எலுமிச்சை, ஆரஞ்சு, லெட்டூஸ், ஆப்பில் முதலியவைகளில் மாக்னீசியம் சத்து மிகுதியாக உண்டு.

தாவரங்களுக்குப் போதிய மாக்னீசியச் சத்துக் கிடைக்காவிட்டால் அதனால் முதலில் அவற்றின் முதிய பாகங்கள்தான் பாதிக்கப் படும். பிறகே இளையபகுதிகள் பாதிக்கப் படும், இலைகளை நுனியிலிருந்து காம்பு நோக்கி மாக்னீசியக்குறைவு பாதிக்கும். அதாவது போதிய மாக்னீசியச் சத்துப் பெறாத தாவரங்களின் இலைகள் நுனியி லிருந்து காம்பு நோக்கி பசுமை குறைந்து கொண்டேவரும். கடைசியாக இலை முழுவ தும் வெண்மையாகவோ, மஞ்சள் கலந்த வெண்மையாகவோ மாறிவிடும். பிறகு இலை கள் உதிர ஆரம்பிக்கும்.

அயடின்

மனித உடலில் உள்ள சுரப்பிகள் (glands) சரியாக இயங்க உதவுவது இத்தாதுவே. கழுத்துக்கட்டி (goitre) உண்டாகாமல் தடுக்க உதவுவதும் அயடினே. சரீரத்தின் மற்றப் பாகங்களில் விஷ சம்பந்தமான பொருள்கள் சேரும்போது அதனால் மூளை பாதிக்கப்படாமலிருக்க உதவுவதும் இவ் அயடினே. இச்சத்துக்குறைந்தால் சுரப்பி கள் சரியாக ஹார்மோன் (Harmones)கள் எனப்படும் ஜீவநீர்களை இரத்தத்தில் சேர்க்க முடியாது. இதனால் பல்வேறு அவயவங்கள் சரியாக இயங்கத் தவறிவிடும். இதன் பய னாகப் பல்வேறு நோய்கள் உண்டாகும். கழுத்தில் கட்டியும் ஏற்படும். தாவரங்களை

அயடின் எவ்வகையில் பாதிக்கிறது என இன்னும் கண்டறியப்படவில்லை. தக்காளி, காரட், பட்டாணி, லெட்டூஸ், வாழைப்பழம், கீரைகள், உருளைக்கிழங்கு, வெள்ளைப்பூண்டு முதலியவைகளில் இச்சத்து மிகுதியாக உண்டு.

க்ளோரின்

க்ளோரின் சரீரத்தின் பொருத்துகளையும் (joints) மாமிசக் கோளங்களையும் சரியான படி இயக்க உதவுகிறது. உடம்பில் அளவுக் கதிகமான கொழுப்புச்சத்து சேராமலும் இது தடுக்கிறது. பயரியா எனப்படும் பயங் கரப் பல்நோய் ஏற்படாமலும் காக்கிறது. க்ளோரினை உடலின் வண்ணான் எனக் கூற லாம். உடலில் உள்ள அனாவசியப் பொருட் களை வெளியேற்றி உடலைச் சுத்தம் செய்யும் வேலையைப் பிரதானமாகக் கவனிப்பது க்ளோரின்தான். இது குறைந்தால் இரத்த அசுத்தத்தால் ஏற்படும் பற்பலவிதமான நோய்களும் பயரியாபோன்ற பயங்கரப் பல் நோயும் உண்டாகும். பால், தயிர், தக்காளி, கீரைகள், முட்டையின் வெண்கரு, வாழைப் பழம், பேரீச்சம்பழம், ஜவ்வரிசி, லெட்டூஸ், முதலியவைகளில் இச்சத்து மிகுதியாக இருக் கிறது. தாவரங்களின் வளர்ச்சியை இச் சத்து எவ்விதம் பாதிக்கிறதென இன்னும் கண்டறியப்படவில்லை.

புளோரின்

சரீரத்தைத் தொத்து நோய்கள், எலும்பு சம்பந்த நோய்கள் தாக்காமல் காக்கும் சத்து இதுவே. உடல் அதிக காலம் யௌவன நிலையில் இருக்க உதவுவதும் புளோரினே. இச்சத்துக் குறைந்தால் உட லைத் தொத்து நோய்கள் சுலபமாகப் பற்றிக் கொள்ளும். கண் மங்கலேற்படும். பல் விழுந்துவிடும். வயது முதிர்வதற்கு முன் பாகவே பலர் பற்களை இழந்து பொக்கை வாய்க் கிழவர்களைப்போல் தோற்றமளிப்ப தற்குக் காரணம் அவர்கள் உடலில் இச் சத்துக் குறைவாக இருப்பதே. ஜவ்வரிசி, தயிர், பீட்ரூட், லெட்டூஸ், கீரைகள், காலி ப்ளவர், பால், முட்டை, வெள்ளைப் பூண்டு முதலியவைகளில் இச்சத்து மிகுதியாக உண்டு. தாவரங்களை இச்சத்து எவ்விதம் பாதிக்கிறது என்பது இன்னும் கண்டறியப் படவில்லை.

மாங்கினிஸ்

சரீரத்தில் உள்ள நரம்புகளுக்கு வலுவூட் டக்கூடியது மாங்கனிஸ். உடலைச் சரியான நிலையில் நிலை நிறுத்த (Balancing Body) வும் இது உதவுகிறது. இச்சத்துக் குறைந் தால் ஹிஸ்டீரியா (Hysteria) போன்ற நரம்பு சம்பந்தமான நோய்கள் உண்டாகும். வாதுமைப் பருப்பு, முட்டை மஞ்சள் கரு, கடுகுக்கீரை, எலுமிச்சம்பழம், ஆரஞ்சுப் பழம், முதலியவைகளில் இச்சத்து மிகுதி யாக உண்டு.

தாவரங்களில் இலைகள் பசுமை குன்றுதல், இலைகளின் ஓரங்கள் அல்லது நுனிகள் சேத மடைதல், பருப்புக்களின் உட்பாகம் சேத மடைதல் போன்ற குறைகள் மாங்கனிஸ் குறைவால் ஏற்படுபவை. இச்சத்து அளவுக் கதிகமாக ஒரு நிலத்திலிருந்தால் அங்கே வளரும் தாவரங்களை அது பாதிக்கும். இப்படிப்பட்ட நிலங்களில் வேர்கள் அழுகியோ அல்லது பட்டோ போகும். தாவரங்களின் இலைகளும் மற்றப் பாகங் களும் ஒருவித மஞ்சள் நிறத்தை அடைந்து நாசமாகிவிடும்.

இரும்பு

நம் உடலில் உள்ள இரத்தத்துக்குச் சிகப்பு நிறம் கொடுப்பது அதில் அடங்கியுள்ள 'ஹிமோக்ளோபின்' (Haemoglobin) என்ற சத்தே. இரத்தத்தில் 100-க்கு 90 இச் சத்தே அடங்கி இருக்கிறது. நுரை ஈர லில் வெளிக் காற்றிலிருந்து கிடைக்கும் பிராணவாயுவை உடலின் பல் வேறு பாகங் களுக்கும் கொண்டுபோய்ச் சேர்த்து உட லுக்கு உயிரூட்டுவதும் இவ் ஹீமோகுளோ பினே. இரத்தத்தின் உயிர் நாடியான இவ் ஹிமோகுளோபின் இரும்புச் சத்தால் ஆனது. ஆகையால் உடலில் இரத்த விருத்தி உண்டாவதற்கும், உயிர் தேகத் தில் நிலைத்திருப்பதற்கும் இரும்பு இன்றி யமையாதது என்றால் அது மிகையாகாது. ஆட்டுப்பால், சேப்பங்கிழங்கு, சிறுபாகல், பீர்க்கு, கொத்தவரை, வாழைப்பழம், முந் திரிப் பருப்பு, பாதாம் பருப்பு, பிஸ்தாப் பருப்பு. சேப்பங்கிழங்கு இலை, கீரைகள், பருப்புகள், கம்பு, சோளம், தினை, வரகு, கேப்பை, அவல், பொரி, சாமை, கோதுமை, வெங்காயம், காரட்டு, முருங்கைக்காய், மாங்காய், சுண்டை வற்றல், எள்ளு, முட்டை, ஈரல், மாமிசம், வெல்லம், ஈஸ்ட் எனப்படும் காடி முதலியவைகளில் இச் சத்து மிகுதியாக உண்டு.

நம் இரத்தத்திற்கும் உயிர் வாழ்க்கைக் கும் எவ்விதம் இரும்பு தேவையோ அதே

போல் தாவரங்களின் வாழ்க்கைக்கும் தேவை. மனிதனுக்கு இருதயம் போன்றது தாவரங்களுக்கு இலை. இவ்விலைகள் செம்மையாக வேலை செய்ய உதவுவது இரும்பு. நிலங்களில் போதிய இரும்பு இருந்த போதிலும் சில சமயங்களில் அவை தாவரங்களுக்குப் பயன்படாமல் போவதுண்டு. ஒரு நிலத்தில் அளவுக்கதிகமாகச் சுண்ணும்புச் சத்து இருந்தால் அதில் வளரும் தாவரங்கள் அங்கே உள்ள இரும்புச் சத்தைப் பயன்படுத்திக்கொள்ள இயலாது. நிலத்தில் அளவுக்குக் குறைவாக அமில சத்து அல்லது பொட்டாசியம் சத்து இருந்தாலும் அங்கே வளரும் தாவரத்துக்கு இரும்புச் சத்துப் பயன்படாது. ஆகையால் இக் குறைகளை முதலில் நிவர்த்திக்கவேண்டும்.

குறையைப் போக்க

இவ் ஜீவ தாதுக்களில் ஏதாவது போதுமான அளவு தாவரங்களுக்குக் கிடைக்கவில்லை எனத்தெரிந்தால் இக்குறையை மூன்று வழிகளில் பரிகரிக்கலாம். குறைவுபட்ட ஜீவ தாதுக்களைப் பொடித்து மாட்டெருவோடு கலந்து நிலங்களில் எருவாக இடலாம். சுலபமாகத் தண்ணீரில் கரையக் கூடிய தாதுக்களை 100 காலன் தண்ணீருக்கு 3 ராத்தல் தாது வீதம் கரைத்து ஸ்ப்ரேயர் (Sprayers)களின் உதவியால் தாவரங்களின் மீது தெளிக்கலாம். அல்லது ஊசி போடும் கருவிகளின் உதவியால் (Injections) நேரடியாக உள்ளே செலுத்தலாம், மனிதனுக்கு இவ் ஜீவ தாதுக்களின் குறை ஏற்பட்டால் மேலே குறிப்பிட்ட உணவுப் பொருள்களை விசேஷமாக உட்கொண்டு குறையை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

குழந்தைகளுக்கு
இன்றியமையாத
டானிக்

டோங்ரேயின் பாலாம்ருதம்



K. T. டோங்கரே அண் கோ லிட்., பம்பாய்-4

மூன்று மணி நேரத்தில் நான் ஒரு அதிசயத்தைச் செய்ய வேண்டியிருந்தது!

மத்தியான வேளையில் வெப்பம் தாங்காமல் சற்று கண் அயர்ந்தேன். அப்பொழுது தான் ஆபீஸ் பையன் கதவைத்தட்டி ஒரு சீட்டைக்கொடுத்து விட்டுப்போனான். அடபாவமே! என் கணவர் அவரது மேலதிகாரியை சாப்பாட்டிற்கு அழைத்து வருகிறாராம்! அவர்கள் சாப்பிடவர சரியாக மூன்று மணி நேரம் தானிருந்தது. விருந்தளிப்பதென்றால் ஏதாவது பிரத்தியேகத் தின்பண்டம் தயாரிக்க வேண்டாமா? நான் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தேன்.

அச்சமயம் தபால்காரன் ஒரு பெரிய கவறை என்னிடம் கொடுத்துவிட்டுப் போனான். அதனுள் புத்தம் புதிய டால்டா சமையல் புத்தகம் காட்சி அளித்தது. சமய சஞ்சீவி போல் அப்புத்தகத்தில் சீக்கிரமே தயாரிக்க முடிகிற பிரத்தியேகத் தின்பண்டங்களின் செய்முறைக் குறிப்புகள் பல இருந்தன. என் சந்தோஷத்தை என்ன வென்று சொல்வேன். உடனே சமையலறைக்குச் சென்று டால்டா வனஸ்பதி உபயோகித்து அவசர அவசரமாக தின்பண்டங்களைத் தயாரித்தேன்.

நான் பட்ட சிரமத்திற்கு சீரிய பலன் கிடைத்தது. சாப்பிடும்போது என் கணவரின் முகம் பெருமையால் பூரித்தது. அந்த மேலதிகாரி என் சமையலை புகழ்ந்து பேசினதை நீங்கள் கேட்டிருக்கவேண்டும்.

டால்டா வனஸ்பதி தின்பண்டங்களின் இயற்கையான ருசியை வெளிக்கொண்டுவருகிறது. அன்றாடம் செய்யும் தின்பண்டங்களை இதில் தயாரித்து எவ்வளவு ருசியாயிருக்கிறதென்று பாருங்கள். பொரித்தல், தாளித்தல், தித்திப்புப்பண்டம் தயாரித்தல் இவைபோன்ற எல்லா சமையல் வேலைகளுக்கும் டால்டா வனஸ்பதி பயன்படுகிறது. மேலும் டால்டா வனஸ்பதியில் இப்பொழுது விடமின் 'ஏ' 'டி' இருக்கிறது.

கடையில் சில்லறையாக விற்கப்படும் தாவரக் கொழுப்பை வாங்குவது அபாயகரமானது. ஏனென்றால் மிகவும் விலையுயர்ந்த கொழுப்பும் கலப்படம் செய்யப்பட்டதாக இருக்கலாம். மேலும் எப்பொழுதுமே திறந்து வைத்திருப்பதால் தூசிபடிந்ததாகவும் ஈ மொய்த்ததாகவும் இருக்கலாம். இதை சாப்பிட்டால் வியாதிவர கேட்கவா வேண்டும்?

ஆரோக்கியமாயிருக்க ஒவ்வொருவருடைய உணவிலும் தேவையான சுத்தமான கொழுப்பை டால்டா வனஸ்பதி அளிக்கிறது. காற்றுப் புகாத சீல் செய்த டின்களில் கிடைக்கும் டால்டா வனஸ்பதியையே கேட்டு வாங்குங்கள். இது 10 பவுண்டு, 5 பவுண்டு, 2 பவுண்டு, 1 பவுண்டு டின்களில் தேவைக்குத் தகுந்தபடி கிடைக்கிறது. இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

படங்கள் கொண்ட டால்டா சமையல் புத்தகம் தமிழ், ஹிந்தி, வங்காளி, ஆங்கிலம் என்ற பாஷைகளில் கிடைக்கிறது. 300 செய்முறைக் குறிப்புகள், சமையலறை பராமரிப்பு, ஊட்டம் முதலானவைகளைப்பற்றிய விவரங்கள் அடங்கிய இப்புத்தகத்தின் விலை ரூ. 2/-தான். தபால்செலவு அணா 12 தனி. உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1.

டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு

மர அடையாளமுள்ள டின்னைப் பார்த்து வாங்குங்கள்.

HVM. 210-X52 TM

துளி விஷம்

விஸ்வம்

முதலாளி கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான் ராகவன். தினமும் காலை ஐந்து மணிக்கு எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு, பழையது உண்டு, முதலாளி வீட்டுக்கு ஏழு மணிக்கெல்லாம் சென்றுவிடுவான். அங்கு முதலாளியம்மாள் இடும் சில்லறை ஏவல்களைச் செய்துவிட்டுச் சாவியுடன் கடைக்குச்செல்வான். கடை திறந்து, சுத்தம் செய்து, சாம்பிராணி தூபம் போட்டுக் காத்திருப்பான். பகல் முழுவதும் கடை வேலை. ஒரு மணி நேரம் சாப்பாட்டுக்கு ஓய்வு போக. இரவு கடை கட்டி, சாவியை முதலாளி வீட்டில் கொண்டு கொடுத்துவிட்டு வீட்டுக்குப் போகப் பத்து மணி ஆகிவிடும்.

முதலாளிக்கும் ராகவனிடம் அளவற்ற நம்பிக்கை. பணப்பெட்டி சாவி தவிர எல்லாம் ராகவனிடம் ஒப்புவித்திருந்தார்.

மாதம் பதினைந்து ரூபாய் சம்பளத்தை அப்படியே தாயாரிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிடுவான் ராகவன். வேளை தவறாமல் வயிறு அறிந்து சாதம் போட்டுவந்தாள் தாயார். கவலை தெரியாமல், பணத்தாசையில்லாமல் காலம் கடத்தி வந்தான் ராகவன்.

அவ்வூருக்கு ஒரு கண்காட்சிக்கோஷ்டி வந்தது. ஊருக்கு நடுவே ஒரு திடலில் முகாமிட்டு ஊர் ஜனங்களை ஒன்று கூட்டியது கோஷ்டி. முகாமில் நடனம், நாடகம், இசை, கேளிக்கை முதலிய பல அம்சங்கள். அவைகளைப் பற்றிய விளம்பரம் ஊரே சிதறிக்கிடந்தது. நாடக கோஷ்டியில் நடிக்கும் ஒரு பெண்ணின் உருவப்படம் ஊர்ச்சுவர்களை ஒய்யாரப்படுத்தியது. ஒவ்வொரு இரவையும் அங்கேதான் கழித்தனர் ஊர்மக்கள்.

தினமும் கடை கட்டிவிட்டு முதலாளி வீட்டுக்குப் போகும்போதும், திரும்பி வீடு செல்லும் போதும் முகாம் வாயிலில் கொஞ்சம் நின்று பார்த்துவிட்டுத்தான் போவான் ராகவன். ஒளி அலங்காரம், விளம்பர ஒலி ஒய்யாரம்; உள்ளே செல்லும் ஜனசாரியெல்லாம் ராகவன் மனதையும் கவர்ந்தன. ஆனால் நான்கணா கட்டணம்! தினம் எட்டணா சம்பாதிக்கும் அவன் நாலணாவுக்கு எங்கே போவான்? வெளியே பார்த்துத் திருப்தி அடைவதைத் தவிர வேறு வழியில்லை அவனுக்கு.

ஒரு நாள் இரவு மணி இரண்டு அல்லது மூன்று இருக்கும். ராகவன் ஒரு தூக்கம் தூங்கி விழித்துக் கொண்டான். கண்காட்சி முகாமிலிருந்து திரும்பிச் செல்லும் ஜனங்களின் ஆரவாரம் அவனை மறுபடியும் தூங்கவிடாமல் செய்தது. அவர்களுடைய வர்ணனைகள் அவன் ஆவலைத் தூண்டின. தேன் சொட்டும் சொற்களால் கண்காட்சியின் அழகை வர்ணித்தார்கள். முக்கியமாக நாடகத்தலைவி தாராபாயைப்பற்றி எல்லோரும் ஒரு முகமாகப் புகழ்ந்தார்கள். ராகவன் பெருமூச்சு விட்டுப் புரண்டு புரண்டு படுத்தான்.

மறுநாள் சாவிக்கு முதலாளி வீடு சென்றதும் அவர் ஊரில் இல்லை, அவசரகாரியமாக வெளியூர் சென்றுவிட்டார் என்று அறிந்தான். அன்று கடை நடத்தவேண்டியது அவன் முழுப்பொறுப்பு.

அன்று வழங்கத்திற்குமாறாகக் கூட்டம் அதிகம். ராகவனுக்கு விழி பிதுங்கிற்று; எனினும் சாமர்த்தியமாகவே சமாளித்தான். கடைகட்டிக் கணக்குப் பார்த்தான். கணக்கைவிட கல்லாவில் ஒரு ரூபாய் அதிகம் இருந்தது. எப்படி வந்தது? அவன்தான் கணக்கில் ஏதாவது விட்டுவிட்டானா? அல்லது யாருக்காவது சில்லறை குறைவாகக் கொடுத்துவிட்டானா? காரணம் எதுவாயினும் பணம் என்னவோ கூட இருந்தது. அதை எந்தக் கணக்கில் சேர்ப்பது? கொஞ்சம் குழப்பத்திற்குப் பின் அந்த ரூபாயைத் தனியே வைத்து மீதிப்பணத்தைப் பையில் போட்டுக் கட்டினான். தனி ரூபாய் அவன் சட்டைப் பையை அடைந்தது. முதலாளி அம்மாளிடம் விஷயத்தைச் சொல்லி அந்த ரூபாயையும் மீதிப் பணத்தோடு கொடுத்துவிடவேண்டும் என்ற எண்ணந்தான்.

வழியில் வழக்கம்போல் கண்காட்சி முகாம் கண் சிமிட்டி நின்றது. "டிக்கெட்டிற்கு முந்துங்கள்" என்ற விளம்பர வசனம் ராகவன் காதைத் துளைத்தது. வழக்கம்போல் நின்றான். விளக்கொளியைப் பார்த்தான். விளம்பர ஒலியைக் கேட்டான். வழக்கத்திற்கு விரோதமாக இன்று அவன் இதயம் எதிரொலி செய்தது. சட்டைப் பையிலிருந்த வெள்ளையப்பன் வலைபோட்டு ராகவன் மனதை இழுத்தான்.

முதலாளி வீட்டில் சாவியையும் பணப்பையையும்—பைப்பணத்தை மட்டுந்தான்—கொடுத்துவிட்டு, ஒரு மூச்சில் முகாம் வாயிலில் வந்து நின்றான். அவன் கை சட்டைப்பைக்குள் சென்றது. முழு ரூபாயைச் சுண்டிவிட்டான் டிக்கட் ஜன்னலுக்குள். ஒரு டிக்கட்டும், மீதி முக்கால் ரூபாயும் அவன் கையில் வந்து விழுந்தன. வீட்டை மறந்தான், சோற்றை மறக்க முடியவில்லை—கையில்

தான் முக்கால் ரூபாய் இருக்கிறதே! முகாமிற்குள் சோற்றுக்கடையும் உண்டே!

விடியற்காலம் வீடு சென்று திண்ணையில் படுத்துக் கொண்டான். காலையில் தாயார் எழுப்பியது தான் தெரியும். விழித்துக்கொண்டு பார்த்தான் ராகவன். மணி ஏழு இருக்கும். இரவு ஏன் சாப்பிட வரவில்லை என்று தாய் கேட்டதற்கு என்னென்னவோ பொய்ச்சாக்குகள் சொன்னான். அவள் என்ன கண்டாள்! அவ்வளவையும் நம்பினாள்.

பறக்கப் பறக்கப் பல் துலக்கிக் குளித்துப் பழையது உண்டு முதலாளி வீடு செல்ல மணி ஒன்பதாகி விட்டது. முதலாளி திரும்பி வந்திருந்தார். ஏன் நேரம் என்று முதலாளியம்மாள் கேட்டாள். தவறுசெய்தவனுக்குப் பொய்ச்சாக்குக் கற்பிக்கவா தெரியாது. தாமதமாகச் சென்றதற்குக் கூறி வீட்டு வேலை மிச்சம். சாவியை எடுத்துக்கொண்டு ஓடினான் கடைக்கு. மாலை நெருங்க நெருங்க ராகவன் மனது கடை வியாபாரத்தில் லயிக்கவில்லை. கண்காட்சியின் கோலாகலம் அவன் மனதை ஆட்கொண்டது. முதல் நாள் தாராபாய் நடிக்கவில்லை. இன்றுதான் நடிக்கப் போகிறாள்! என்ன செய்வது?

கடைகட்டும் நேரம் நெருங்கி வந்தது. முதலாளி புகையிலை துப்பக் கல்லாவை விட்டு எழுந்தார். ஒரு முழு ரூபாய் ராகவன் மடியில் நுழைந்து கொண்டது.

கணக்குக் கட்டும்போது ஒரு ரூபாய் குறைந்தது. முதலாளி மூளையைக் குழப்பிக்கொண்டார். சில்லறை கொடுக்கும்போது யாரிடமாவது தவறுதலாக அதிகம் கொடுத்திருப்போம் என்று எண்ணினார். பணத்தோடு வழக்கம்போல் முன் சென்று விட்டார்.

அன்று இரவும் ராகவனுக்குக் குஷி. தாராபாயை மேடையில் பார்த்து விட்டான். ஜனங்களின் வர்ணனை முற்றிலும் உண்மையென்பதை ஒப்புக் கொண்டது அவன் மனம்.

பிறகு இரண்டு நாட்கள் பல்லைக்கடித்துக் கொண்டு இருந்துவிட்டான். தூக்கம் வேறு உத்சாகத்தைக் கெடுத்தது,

மூன்றும் நாள் கண்காட்சியில் "தாரா சசாங்கம்" —தாராவே தாராவாக நடிப்பது, ராகவன் ஆவல் எல்லை கடந்தது. கல்லாவிலிருந்து பணம் எடுக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கடைகட்டும் சமயம் நெருங்கியது. ராகவன் ஒரு துணிவுக்கு வந்தான். அடக்க ஒடுக்கமாக முதலாளியிடம் வந்து நின்றான்.

"என்னடா......?"

"வீட்டில் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை......"

"என்ன வேணும்?"

"மருந்துக்குப் பணம் இல்லை......"

"இந்தா இரண்டு ரூபாய். அம்மா உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்."

ராகவன் வெற்றி கண்டுவிட்டான். துளி விஷம் சிறுகச்சிறுக உடலெங்கும் ஓடத்தொடங்கியது. வரவரப் பொய்யும்புனைசுருட்டும் வளர்ந்தன, ***துளி விஷம் தெறித்த*** குடம் பால் மாறுவதுபோல் ராகவன் பழக்க வழக்கங்கள் மாறலாயின. இரவு கேளிக்கை, தூக்கமின்மை, காலையில் நேரங்கழித்தே எழுந்திருக்க முடிந்தது. குளிக்க நேரமில்லை. குளிப்பதை விட்டான். அதோடு அவனுடைய முகக்களையும் மாறிற்று. கசக்கிக் கட்டிக் குளித்துக் குடித்துவந்த அவன் கசம் ஆக மாறினான்.

ஒரு முடையைத் தீர்க்க வேறு இடத்தில் கடன் வாங்கினான். கடன் வளர்ந்துகொண்டே போயிற்று. கடன் வளர, கரந்துறையத் தொடங்கினான். சம்பளத்தைச் சரியாக வீட்டில் கொடுப்பதில்லை. தாயாரைத் துன்புறுத்தத் தொடங்கினான்,

ஒரு நாள் வீட்டில் உணவு இல்லை, ராகவன் கையில் பணம் இல்லை, டீக்கடை பாக்கிக்காக நாயர் வந்து வைதுவிட்டுப் போனான். ராகவன் நாயர் மேல் வந்த கோபத்தைத் தாயாரிடம் காண்பித்தான். கண்டபடி ஏசிவிட்டு வெளியே சென்றான். வயிறு குழைந்தது. கெட்ட பழக்கங்கள் கட்டியிழுத்தன. ரயில் ஸ்டேஷனை நோக்கி நடையைக் கட்டினான். ரயில் வரும் சமயம் இல்லை. ஆனாலும் ஜனங்கள் இருந்தார்கள். சிலர் உட்கார்ந்து தூங்கி வழிந்தார்கள். சிலர் படுத்து நிம்மதியாகத் தூங்கினார்கள்.

ஒரு பெஞ்சியில் ஒருவன் படுத்திருந்தான். தலையடியில் ஒரு கித்தான் பை. ராகவன் மெதுவாகத் தலைமாட்டில் உட்கார்ந்தான். கனைத்தான். தூங்கியவன் அசையவில்லை. பையை மெதுவாகத் தொட்டு அசைத்தான். தூங்கியவன் குறட்டை விட்டான். ராகவன் திருட்டு விழி விழித்தான். எல்லோரும் நன்றாக உறங்கினார்கள். தைரியம் தலைக்குமேல் ஏறியது ராகவனுக்கு. தூங்கியவன் பை ராகவன் கையை அடைந்தது. எடுத்துக்கொண்டு இரண்டடி நடந்தான். ஒரு இரும்புக்கை அவன் கழுத்தைப் பிடித்துக்கொண்டது. தூங்கியவன் ராகவன் தொண்டையை அழுத்திக் கொண்டிருந்தான்.

குறட்டை விட்டானே! பாவி!! பாவனைசெய்து பிடித்துவிட்டான்!!!

ராகவன் கம்பி யெண்ணிக்கொண்டிருக்கிறான். இரவும் பகலும் கண்காட்சி முகாமின் கோலாகலங்கள் அவன் மனக்கண்முன் தாண்டவமாடுகின்றன. ***துளி விஷம்*** குடம் பாலைக் கெடுத்துவிட்டது. ●

டயர் ஸர்வீஸ்

செப்பனிட்டு

புதுப்பிக்கிறோம்



இதனால்

- சிலவு குறைவு
- பாதுகாப்பு
- நீடித்த உழைப்பு



இதற்கு
உத்தரவாதம்
அளிப்பவை :

**முழு வட்ட
மோல்டுகளால்
தயாரிப்பு ;
டி. வி. எஸ்.
அனுபவ சாதனம்.**

TVSZ-50TM

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
புதுக்கோட்டை

(டி. வி. எஸ். ஸ்தாபனம்)

விஞ்ஞானத் துணுக்குகள்

நா. கி. நாகராஜன்

உடையாத வார்ப்பிரும்பு

சென்ற மாதம் வாங்கிய வார்ப்பிரும்பு வாணலியை என் மனைவி அதற்குள் உடைத்து விட்டாள்! வார்ப்பிரும்பின் பெருங் குறை இதுதான். ஆகையால் உடையாத வார்ப்பிரும்பு வகையொன்றை உலோக வியல் நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். சாதாரண வார்ப்பிரும்பில் சிறிதளவு மக்னீசியம் என்னும் உலோகத்தைக் கலந்துவிட்டால், எத்தகைய அதிர்ச்சி ஏற்பட்டாலும் அது உடையாதிருக்கும் திறமையைப் பெற்று விடும் என்று கண்டிருக்கிறார்கள். இதனால் அதன் வலிமையும் பன்மடங்கு பெருகுகிறது. வார்ப்பிரும்பு எஃகைவிட மலிவானது. ஆனால் அது உடையும் தன்மைகொண்டதாகவும், அவ்வளவாக வலிவற்றதாகவும் இருப்பதால் அதை எந்திர உறுப்புக்கள் போன்றவைகளைச் செய்யப் பயன்படுத்த இயலவில்லை. ஆனால் இந்தப் புதுவகைக் கலவையை வார்ப்பு வேலைகளுக்கும், பல் சக்கரங்கள் முதலிய பொருள்களைத் தயாரிக்கவும் பயன்படுத்துகிறார்கள். சாதாரண இரும்பைப்போல் அல்லாது, இது சூடேறிய நிலையிலும் தனது வலிமையை இழப்பதில்லை; எளிதில் துருவேறுவதும் இல்லை.

அணுகுண்டும் வானிலையும்

கோடையின் கொடுமை உச்சநிலையை அடைந்திருந்த போதும், இப்போது நாட்டின் பல பகுதிகள் வெள்ளக் காடாகக் காட்சியளிக்கும்போதும், 'எல்லாம்அந்தகுண்டை அமெரிக்காக்காரன் போட்ட ஹைடிரஜன்வினை, சார்!' என்று நம்மில் பலர் பேசிக் கொள்கிறார்கள். இதுவரை உலகம் காணாத பேயாற்றலை வெளிவிட்டு வெடிக்கும் அவ்வரக்கக் குண்டினால், வானிலை மாறுதல்கள் ஏற்படும் என்று பொதுவாக நம்புகிறார்கள்; சில விஞ்ஞானிகளும்கூட இக் கருத்தை ஓரளவு ஆதரிக்கிறார்கள். ஆனால் இக் கருத்து சரியல்ல என்று மேனாட்டு வானிலை நிபுணர் ஒருவர் கணக்கியல் முறைகளால் காட்டுகிறார். 'ஹைடிரஜன் குண்டு எவ்வளவு ஆற்றலை வெளியிடுகிறது என்பதை நாம் அறியோம் ஆனால் சாதாரண அணுகுண்டின் ஆற்றலை ஓரளவு மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் வெப்ப நாடுகளில் நிகழும் சூறைக் காற்று அதைப்போல் 200 அல்லது 300 மடங்கு ஆற்றலை வெளியிடுகிறது. ஆயினும் ஓரிடத்தில் இவ்விளைவு தோன்றும்போது, அதற்குச் சில மைல் தூரத்தில் உள்ள இடங்களில் வானிலையும் இதனால் பாதிக்கப் படுவதில்லை' என்று அந்த நிபுணர் கூறுகிறார். அசாதாரணமான வானிலைமிகச்சாதாரணமானதுதான் என்பதுஅவர் கருத்து. ஆகையால், அடுத்துவரும் மாதங்களில், குளிர் அதிகமாக இருந்தாலோ, காலந்தவறி மழை பெய்தாலோ ஹைடிரஜன் குண்டைக் கண்டுபிடித்த விஞ்ஞானியைச் சபிக்க வேண்டாம்.

'நோஞ்சான்' குழந்தைகள்

'நம் பயலைப் பார்த்தால் ஏதோ சோற்றுக்கு இல்லாதவர்களது குழந்தையைப் போல் இல்லை? சரியாகச் சாப்பிட்டால் தானே' என்று பெற்றோர் பலர் அங்கலாய்ப்பதைக் கேட்டிருக்கிறோம். சரியாகச் சாப்பிடாமல் 'நோஞ்சா'னாக இருக்கும் குழந்தைகளைப் பல வீடுகளில் காண்கிறோம். இத்தகைய சிறுவர் சிறுமியர் பலரது உடல் நிலையையும், உள்ள நிலைமையையும் ஒரு மருத்துவர் ஆராய்ந்து, புதியதோர் உண்மையைக் கண்டுபிடித்தார். இக்குழந்தைகளில் பெரும்பாலானவற்றுக்கு உள்ளத்தில் பதற்றம், பயம், அமைதியின்மை போன்ற கோளாறுகள் இருக்கின்றன. ஆகையால் அவை சாப்பிட உட்காரும் போது உள்ளத்தின் நிலை சரியாக இருப்பதில்லை. இதனால் பசி கெட்டுவிடுகிறது. தேவையான அளவு சாப்பிட முடிவதில்லை. சாப்பிடும் உணவும், இதே காரணத்தால் சரிவர ஜீர்ணமாவதில்லை. இதனாலேயே அவை சரியாக வளர முடிவதில்லை என்று அவர் முடிவு செய்தார். ஆகையால் அக் குழந்தைகள் சாப்பிடப்போகுமுன், நரம்புக் கிளர்ச்சிக்கு மருந்தாகும் மாத்திரையொன்றை அவர் சில நாட்களுக்குக் கொடுத்துப் பார்த்தார். இதில் முதல்

நாளே குணம் தெரிந்தது. 'சிணுங்கி அடம் பிடிக்கும் குழந்தைகள் மகிழ்ச்சியுடன் உணவருந்தத் தொடங்கின. சில நாட்களிலேயே அந்த நோஞ்சான்கள் உருத் தெரியாது வளர்ந்துவிட்டன. தாம் இந்தச் சிகிச்சையைக் கையாண்டதில் நூற்றுக்கு 92 குழந்தைகளில் நல்ல பலன் ஏற்பட்டதாக அந்த மருத்துவர் கூறுகிறார்.

உப்பு நீரிலிருந்து நன்னீர்

உப்பு நீரை நன்னீராக்க அதைக்கொதிப்பித்துஆவியாக்கிக் குளிர்விக்கும் முறை பழமையானது. ஆனால் இதைவிட எளிய முறைகளை வகுக்கப் பல ஆண்டுகளாகவே முயற்சி நடந்து வருகிறது. ஆயினும் இதில் முழு வெற்றி கிடைத்திருப்பதாகக் கூறமுடியாது. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதொரு முறை, இப்போதுள்ள அனைத்தையும்விடச் சிறந்தது என்று கருதுகிறார்கள். நமது உடலில் அசுத்தங்கள் நிறைந்த ரத்தம், சிறு நீர் முதலிய திரவங்களை உடலுறுப்புக்களும், உயிரணுக்களும் தூய்மையாக்கப் பயன்படும் தத்துவமே இம்முறையில் பயன்படுகிறது. இத்தத்துவத்துக்குச் சவ்வூடு பரவல் (Osmoair) என்று பெயர். ரசாயன உப்புக்கள் கரைந்த திரவம், மெல்லிய சவ்வு போன்ற தடையொன்றை அடைந்தால், அதன் வழியே தண்ணீர் கடந்து சென்றுவிடும்; ஆனால் ரசாயனப் பொருள்கள் பின் தங்கிவிடும். இவ்வகையில் ஒரு திரவத்தில் கரைந்துள்ள பொருள்களை அதிலிருந்து பிரிக்கலாம். எண்ணெயை இலேசானதோர் படலமாக அமைத்து, அதை ஒரு சவ்வுத் திரைபோல் இயங்கச் செய்யும் முறையை இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் வழியே உப்பு நீரைப் பாய்ச்சி, அதிலுள்ள உப்புக்களைப் பிரித்து, நன்னீரைப் பெறலாம். நாள் ஒன்றுக்கு 2,000 காலன் உப்பு நீரை இவ்வாறு தூய்மையாக்கும் சாதனத்தை அமைக்கச் சுமார் 4,000 ரூபாய் செலவாகுமாம். அது இருபதாண்டுகள் எவ்விதத் தொல்லையும் இன்றி உழைக்கும். கப்பல்களிலும், கடலோரத்திலுள்ள தொழிற்சாலைகளிலும், சலவைத் தொழிலிலும் இம்முறை பெரிதும் பயனாகும்.

சூதாடி எந்திரம்

மனிதனால் இயலும் எல்லா வேலைகளையும் எந்திரங்கள் செய்யும் இக்காலத்தில், சூதாடும் எந்திரம் ஒன்றும் உருவாயிருப்பதில் வியப்பில்லை! டாக்டர் ஹேகல்பர்கர் என்ற அமெரிக்க பௌதிக அறிஞர் இதை அமைத்திருக்கிறார். குழந்தைகளின் விளையாட்டான 'பூவா, தலையா?' என்ற ஆட்டத்தில் பணம் வைத்து விளையாடும் பழக்கத்தைச் சென்னை நகரின் நடுச்சந்திகளில் காணலாம். அமெரிக்க விஞ்ஞானி அமைத்திருக்கும் எந்திரம் இந்த ஆட்டத்தைத் திறமையுடன் ஆடுகிறது. எந்திரத்துடன் விளையாடுபவர், தாம் தேர்ந்தெடுத்தது பூவா, தலையா என்று காட்ட, ஒரு பித்தானை அழுத்தவேண்டும். எந்திரம் தனது தீர்மானத்தைத் தெரிவிக்கும். வெற்றி யாருக்கு என்று பார்த்துவிட்டு, வேறொரு பித்தானை அழுத்தி, எந்திரத்திற்கு அதைத் தெரிவிக்கவேண்டும். இப்படியே விளையாடிக்கொண்டுபோனால், கடைசியில் சராசரியாக எந்திரம்தான் ஜயிக்குமாம். நூறுமுறை விளையாடினால் சராசரியாக 55 முறை எந்திரம் ஜயித்து விடுகிறதாம். விளையாடுபவர், தமது முறையை மாற்றிக்கொண்டு வேறு வகையில் ஆட ஆரம்பித்தாலும், அதை எந்திரம் விரைவில் புரிந்துகொண்டு, அதற்கேற்றவாறு ஆடத் தொடங்குகிறதாம்! ஆகையால் கைதேர்ந்த சூதாடியும் இதனிடம் தோற்க வேண்டியதுதான். இந்த எந்திரத்தை அமைத்தவருடன் வேலை செய்யும் வேறொருவர், இன்னொரு எந்திரத்தை அமைத்தாராம். இரு எந்திரங்களும் சூதாடின! எது வென்றது என்று தெரியவில்லை. ஆனால் ஆழ்ந்து 'யோசித்து' விளையாடிய எந்திரத்தை 'அவசரக்கார' எந்திரம் வென்றுவிட்டது என்று மட்டும் அவர்கள் அறிவித்தார்கள்! இதிலும் ஒரு வேடிக்கை. எந்த எந்திரம் வெல்லும் என்பது பற்றிப் பலர் ஏராளமான தொகைகளைப் பந்தயம் வைத்தார்களாம். சூதாட்டத்திற்குள் சூதாட்டம்!

நாயும் நிம்மதியும்

மருத்துவ ஆராய்ச்சியில் பலவேறு உடலியல் விளைவுகளையும், மருந்துகளின் விளைவுகளையும் ஆராய்வதற்கு நாய், பூனை முதலிய விலங்குகளைப் பயனாக்குகிறார்கள். அமைதியற்ற தற்கால வாழ்க்கையின் கொடிய நோய்களில் ஒன்று வயிற்றுப் புண் என்பது. பல ஆண்டுகள் தொல்லை கொடுத்து, உயிரையும் கொள்ளை கொள்ளத் தக்க நோய் இது. இதைப்பற்றிய ஆராய்ச்சியில் முதலில் நாய்களைப் பயன்படுத்திப் பார்த்தார்கள். ஆனால் அது எவ்வகையிலும் இயலாமற் போயிற்று.

வயிற்றுப் புண்ணுக்கு முக்கிய காரணம் நமது நரம்பு மண்டலத்தில் ஏற்படும் கிளர்ச்சி. அதனுல்தான் தற்கால நாகரிக வளர்ச்சியுடன் இதுவும் பெருகிவிட்டது. கவலை, அச்சம்முதலிய உணர்ச்சிகளின் தீவி ரத்தால் இதுதோன்றுகிறது. ஆனுல் எவ்வ ளவு முயன்றும் நாய்களுக்கு வயிற்றுப் புண் வரும் அளவுக்குக் கவலையூட்டமுடியவில்லை. அதனுல்அவற்றிற்குப் புண் தோன்றுமாறு செய்யவேமுடியவில்லை. செயற்கை முறைக ளால் வயிற்றில் புண்ணை ஏற்படுத்திப்பார்த் தார்கள். அப்போதும் நாய்கள் நிம்மதியாகக் காலங் கழித்து, அந்தப் புண்களை ஆற்றிக் கொண்டுவிட்டன! ஆகையால் நாய்களை இந் தச் சோதனைகளுக்குப் பயன்படுத்துவதில் பயனில்லை என்று கண்டுகொண்டார்கள். நாய்களைக் கண்டாவது மனிதன் சிறந்த படிப்பினையொன்றை அறிந்துகொள்ளலாம். ஆனுல் 'நன்றி மறவாமை' என்ற உயரிய பண்பையே அந்த விலங்கிடமிருந்து தெரிந்து கொள்ளாத அவன், 'கவலைப்படாமை' என்ற ரகசியத்தை அறிந்துகொள்ளவா போகிருன்?

நிர்மூல வாயு

ஆனுல் இக்கால மனிதன் கவலையுருது எப்படி இருக்க முடியும்? விஞ்ஞான வளர்ச்சியினுல்தான் அன்ருடம் புத்தம்புதுப் பயங்கரங்கள் தோன்றுகின்றனவே: முப் பதே விநாடிகளில் உயிரை மாய்க்கும் புது நச்சு வாயு ஒன்றை அமெரிக்கர்கள் கண்டுபிடித்து, அதைத் தயாரித்துச் சேகரித்து வைத்து வருகிருர்கள். இதன் தன்மையைப்பற்றி எதுவும் தெரியவில்லை. இதை ஜி-வாயு (G-Gas) என்று அழைக் கிருர்கள். சிறிய கலம் ஒன்றில் இதை நிரப்பி, வெடி குண்டைப்போல் அதை வெடிக்கச் செய்தால், பத்துச் சதுர மைல் பரப்பில் உள்ள எல்லா உயிர்களையும் அது நிர்மூலமாக்கிவிடும். ஒரு துளி உடலின் மேல் பட்டாலும் சில விநாடிகளுக்குள் சாவு நேர்ந்துவிடும்.

சிரிப்பு ஜாக்கிரதை!

நீங்கள் இனிமேல் சிரிக்கும்போதெல்லாம் கூட யார் இருக்கிருர்கள் என்று கவனித் துக்கொள்ளுங்கள்! ஏனெனில் உங்கள் சிரிப்பு உங்களது உள்ளத்தின் ஆழத்தில் மறைந்திருக்கும் எண்ணங்களைத் தெளி வாக்கி, நீங்கள் எத்தகையவர் என்பதை ஐயமறக் காட்டிக் கொடுத்துவிடும் என்று உள்ள நூல் நிபுணர்கள் கண்டறிந்திருக் கிருர்கள். குறிப்பிட்ட சில விகடத் துணுக்கு களை வெளியிடும்போது ஒவ்வொருவரது உணர்ச்சியும் எவ்வாறு இருக்கிறது என்று கவனித்து, அதிலிருந்து அவருடைய உள் ளத்தின் நிலையையும், உணர்ச்சிகளின் தன் மையையும், மனப் போக்கையும் தெளி வாக அறிய முடியும் என்று அவர்கள் அனுபவத்தில் கண்டிருக்கிருர்கள். வேலைக்கு ஆள் தேர்ந்தெடுக்கும்போது இம்முறைச் சோதனை மிகவும் பயனுள்ளதாக இருக்கிற தாம். நீங்கள் ஒரு பெண்ணை மணக்க விரும்பினுல், அவளது உள்ளப் போக்கு உங்களுக்கு ஒத்ததாக இருக்குமா என்று அறிய, இம்முறையைப் பயன்படுத்தலாம். தற்செயலாகப் பல விகடத் துணுக்குகளைச் சொல்லி, அவளது உணர்ச்சி எப்படி இருக்கிறது என்று கவனித்து, உங்கள் எதிர்காலத்தை அவளிடம் ஒப்படைக்க லாமா என்று நீங்கள் முடிவு செய்யலாம்.

எமது புதிய நியூ டெல்ஹி விற்பனையாளர்

ராஜீஸ் ஏஜன்ஸீஸ்

21/2. லேடி ஹார்டின்ஞ் ரோடு

(கோல் மார்கெட்டுக்கு அருகில்)

நியூ டெல்ஹி.

தேடிவந்த புகழ்

கோமதிசுப்ரமணியம்

"அக்கா இன்று மேடையில் ஒரே கை தட்டல் அத்தானின் நடிப்புக்கு..."

"என்ன உன் அத்தானுக்கு நடிக்கக்கூடத் தெரியுமா?"

"சரிதான் போ... இன்று நீ வந்து பார்த்திருந்தாலல்லவோ தெரியும் கூட்டத்தில் கிடைத்த பாராட்டை..."

இதுவரை தன் கணவனுக்கு எழுதத்தான் தெரியும் என்று எண்ணிக்கொண்டிருந்தாள் பானு. நடிக்கவும் தெரியும் என்பதைத் தம்பி வந்து சொன்ன பிறகும் நம்ப முடியாமல் திணறினாள்.

பிரபல ஆசிரியர் சந்திரன் அவளது கணவர். சந்திரன் எழுத்தைத் தொழிலாகக் கொண்டவரல்ல. இன்ஷூரன்ஸ் கம்பெனியில் இருநூறு ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டிருப்பவர். பொழுது போக்காக எழுதத் தொடங்கியது பெரும் புகழைத் தேடித் தந்தது.

அவர்கள் டிபார்ட்மெண்டிலிருந்து பொழுது போக்குச் சங்கம் ஒன்று கூடியிருந்தார்கள். வருஷ முடிவு தோறும் விழாக் கொண்டாடுவது வழக்கம். அவ்விழா நிகழ்ச்சியில் அமெச்சூர் நாடகம் முக்கிய நிகழ்ச்சி. இவ்வருஷ விழாவிற்குச் சந்திரன் நாடகம் அமைத்துக் கொடுத்ததோடு நடிக்கவும் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பதைப் பானு இதுவரை அறிந்ததில்லை.

தம்பி வந்து சொல்லிக்! கேட்கக் கேட்க, பானுவின் உள்ளம் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. கணவனின் புகழில் பெருமை கொள்ளாத பெண் இருக்க முடியுமா?

"உன் அத்தான் நடிக்கப் போவதாக என்னிடம் சொல்லவே இல்லையே..."

"எப்படிச் சொல்ல முடியும். எனக்கே என் நடிப்பில் நம்பிக்கை இல்லையே. அதனால்தான் யாருக்கும் விளம்பரப்படுத்தவில்லை. இதைத் தவறாகக் கருத மாட்டாயே..." என்று விளையாட்டாகக் கேட்டார் அங்கு வந்த சந்திரன்.

"கோபித்துக் கொள்ளாதே அக்கா. அடுத்த மாதம் வருகிற குடியரசு தினத்தை முன்னிட்டு நாடகம் நடத்தப் போகிறார்கள். அதில் அத்தான் பங்கெடுத்துக் கொள்ளப் போகிறார். அவசியம் நீ கண்டு களிக்கலாம். என்று கூறிய தம்பியின் மொழியைக் கேட்டு ஆறுதல் கொண்டாள் பானு.

* * * *

குடியரசு தினம் வந்தது. நாடு விடுதலை அடைந்த பெருமையில் மக்கள் ஆங்காங்கே கூடி, சுதந்திரக் கொடி நாட்டியும் விழா நடத்தியும் தத்தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர். பெண்கள் மாக்கோலத்தாலும் மலர் மாலைகளாலும் வீடுகளை அலங்கரித்துக் குளித்து முழுகி, குழந்தைகளை அலங்கரித்தும் தங்கள் மகிழ்ச்சியை வெளியிட்டுக் குதூகலித்து நின்றனர்.

மாலைப் பொழுது. தம்பியுடன் புறப்பட்டு விட்டாள் பானு. நாடகத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த கட்டிடத்தின் முன் ஒரே கும்பல். பாரா வழி விலக்கிக் கொடுக்கத் தனக்கென ரிசர்வ் செய்திருந்த இடத்தில் அமர்ந்து கொண்டாள் பானு. வர்ண விளக்குகள் ஜ்வலித்தன மேடையில். ஒரு நிமிஷம் விளக்குகள் அணைந்தும் மீண்டும் தேவையான ஒன்றிரண்டு விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. கூடியிருந்த மக்களின் கண்கள் மேடை மீது தாவின. ஜல் ஜல் என்ற சலங்கையொலியுடன் பத்து வயதுச் சிறுமி மாலினியின் நடனத்திற்குப் பின் நாடகம் ஆரம்பமாகியது. ஊசி விழுந்தால் கூட ஓசையெழும்படியான நிசப்தத்தில் ஆழ்ந்து கிடந்தது சபை. விறுவிறுப்புடன் ஓடிக்கொண்டிருந்த நாடகத்தினிடையே லயித்துவிட்டது மக்களின் மனம். இடையிடையே எழுந்த பலத்த கரகோஷமும் கைதட்டலும் வானைப் பிளந்தன. மீண்டும் அமைதி. இப்படியே நேரம் ஓடியது. நாடகத்தின் இறுதிக் கட்டம்.

மேடையையே வைத்த கண் வாங்காது கவனித்துக்கொண்டிருந்த பானுவோடு மெதுவாகப் பேச்சுக் கொடுத்தான் ரவி. 'அக்கா நாடகம் எப்படி? இதில் அத்தான் வரும் பாகம் எது என்று கண்டுபிடித்துவிட்டாயா?'

"பிரமாதம் போ... கதாநாயகனாக வருவது தானே உன் அத்தான். அதுகூடத் தெரியாதா என்ன... உருவம் வேஷத்துக்குள் மாறியிருக்கலாம். ஆனால் குரல் அல்லும் பகலும் என் இதயத்துள் ரீங்காரமிடும் குரலல்லவா..."

"சரிதான் நீ கூட நாடக ரீதியில் பேச ஆரம்பிச்சுட்டாயா?" அத்தானுக்குச் சரியாக நடிக்கிறாரே அவர் யாரெனத் தெரிகிறதா அக்கா"...

"அவரா? யாரைச் சொல்லுகிறாய்..."

"பெண் வேடத்தில் நடிக்கிறாரே அவர்தான் நம் வீட்டிற்கு அடிக்கடி வருவாரே சுகுமார்..."

இதுவரை அவள் நெஞ்சை அழுத்திய முள் அந்தச் சொல்லால் விலகியது.

"உன் அத்தானோடு நடித்தது ஆண் பிள்ளையா? நான் பெண்ணென்றே நம்பியிருந்தேன்..."

"சரிதான் போ... அதுதான் உன் முகம் ஒரேயடியாகக் களையிழந்து வாடி விட்டதோ? என்னடாவென்று பார்த்தேன்..."

"போடா போக்கிரி" என்று தம்பியை அடக்கினாள். ஆனால் அவன் சொல் விளக்கிய தெளிவால்தான் அவள் மனம் அடங்கியதென்பதை அவளால் மறுக்க முடியுமா?

* * * *

"அக்கா அத்தானுக்கு வந்த யோகத்தைப் பாரேன். அவரது நடிப்புத் திறனை எப்படியோ யார் மூலமோ கேள்விப்பட்ட வேணுகான நாடக சபையார் அத்தானை அழைத்திருக்கிறார் நடிப்பதற்கு"

"என்னது நடிப்பதற்கா? நாடகச் சபைக்கா?"

"ஏன் பானு போகக்கூடாதா?" பிரித்த தபாலுடன் அங்கே சந்திரன் வந்தார்.

நடிப்பு... தன்னையும் கணவனையும் அணு அணுவாகப் பிரிக்கும் காந்த சக்தியாகவே படிந்தது பானுவின் மனதில்.

"போதும் நடிப்பும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். வீட்டோடு அடங்கிக் கிடந்தால் போதும்" அன்பும் அதட்டலும் கலந்து தொனித்தது அந்தப் பேச்சில்.

"ஏன் பானு போகக்கூடாது. ஐந்தே ஐந்து நாள்தான் நாடகம் போடுகிறார்கள். இந்த ஊரில். தினத்திற்கு 100 ரூபாய். ஐந்து நாளில் ஐந்நூறு ரூபாய். வலிய வரும் சீதேவியை ஏன் உதறித் தள்ளவேண்டும்."

"அப்படியானால் போகத் தீர்மானித்து விட்டீர்களா?"

"ஆம்" என்ற பேச்சோடு அன்றைய பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான் சந்திரன்.

ஆரம்பத் தினத்தன்று சென்று வந்த ரவி நாடகத்தைப் பிரமாதமாகப் புகழ்ந்தான். சந்திரனது நடிப்புத் திறனை எடுத்துச் சொல்ல வார்த்தை கிடைக்காமல் திணறினான். தொடர்ந்து இரண்டு தினங்கள் சென்று வந்ததின் பலன் மக்களிடையே சந்திரனுக்குள்ள செல்வாக்கை அறிந்து கொள்ளும் வாய்ப்பைக் கொடுத்தது.

கடைசி தினம்.

"அக்கா நான் தினமும் விரும்பி அழைக்கிறேன். நீ ஏன் வர மறுக்கிறாய். எங்கிருந்தெல்லாமோ வந்து ஜனங்கள் திரள் திரளாக்

SG/237
நீங்கள் எதை தவறவிட்டீர்கள்
என்பதை புகைபிடிக்கும்வரை
அறிவதில்லை.
SCISSORS
CIGARETTES
SPECIAL ARMY QUALITY
W.D.&H.O.WILLS.
BRISTOL & LONDON.
மூன்று தலைமுறைகளாக பிரசித்தி பெற்றவை
5 அணவிற்கு 10. ½ அணவிற்கு ஒரு சிகரெட்.
சென்னை, ஆந்திரா, ஹைதராபாத், மைசூர் அல்லது குடகு விற்பனை வரி உள்பட.

கண்டு களிக்கிறார்கள். நீ மட்டும் பார்க்கா மலிருக்கலாமோ" என்று மறித்து வைத்துக் கொண்டு கேட்டான் ரவி.

"எனக்குப் பதில் நீதான் தினமும் பார்த்து ரஸித்து வருகிறாயே. நானும் எதற்கு?" என்று சிரித்து மழுப்பினாள் பானு.

"அவன், பார்த்தால் அவன் மனதிற்குச் சந்தோஷம். நீ பார்த்து அனுபவித்தால் நம் இருவர் மனதிற்கும் ஆனந்தம். அவசியம் இன்று நீ வந்துதான் ஆகவேண்டும்" என்று சந்திரன் அன்போடு இட்ட கட்டளையை மறுக்க முடியாமல் வருவதாக ஒப்புக்கொண் டாள் பானு.

'வேணுகான சபையாரால்' நடத்தப்பட்ட நாடகக் கொட்டகையில் ஒரே ஜனக் கூட்டம். எள் போட்டால் எண்ணெயாகப் பிழிந்தெடுக் கும் நெரிசல். அன்று கடைசி தினமாதலால் நாடக நடிகர் சந்திரனை மேடை மீது அழைத்துக் கௌரவிக்கப் போவதாக முன்னதாக அறிவிப்புக் கொடுத்திருக்கும்போது கூட்டத்திற்கு கேட் கவா வேண்டும். நாடகம் ஆரம்பமாகும் நேரத்தைக் குறித்தே மக்கள் பரபரப்புடன் காத்து நின்றனர்.

"விடுதலை" என்ற நாடகம் வெற்றி முழக்கத் துடன் ஆரம்பமாகியது. நாடகத்தின் கதைகளில் வருவது போலவே பணக்காரத் தந்தை தன் மக னுக்குச் செல்வம்நிறைந்த இடத்தில் பெண்தேடு கிறார். ஏழை பணக்காரர் என்கிற பேதமின்றி எல்லோரும் ஓர் இனமாக வாழவேண்டுமென்கிற கொள்கை நிறைந்தவன் கதாநாயகன். எளியவ ளானாலும் குணவதியான ஒருபெண்ணைத் தானே தேர்ந்தெடுத்து அவளையே மணக்கப்போவதாகக் கூறுகிறான் தந்தையிடம். நிற்க நிழலற்ற அவளை மணந்து கொள்வதால் உன் கௌரவம் சிந்திப் போகுமென்கிறார் தந்தை."

"செல்வத்தோடு செருக்கையும் ஸ்திரீதனமாகக் கொண்டு வரும் பணக்காரப் பெண் தனக்கு வேண்டாமென வாதாடுகிறான் மகன். பிடிவாதம் பிடிக்கிறார் தந்தை. மன்றாடுகிறான் மகன். விவா தம் நீடிக்கிறது. முடிவு — கருத்திற்கிசைந்த கன்னியைக் கைப்பிடிக்கத் தடையாக நின்ற செல்வத்தினின்றும் விடைபெற்று வெளியேறு கிறான் கதாநாயகன்...

இந்தக் கட்டத்தில் சந்திரனின் நடிப்பு உச்சத்தை எட்டிவிடுகிறது. உணர்ச்சி நிறைந்த வசனங்களை வாரி வீசி மக்களின் உள்ளத்தைத் தொட்டுவிடுகிறான்.

தந்தையிடம் விடுதலை பெற்று வேளியேறும் சந்திரனை நீர் நிறைந்த கண்களுடன் வரவேற் கிறாள் கதாநாயகி. 'வேண்டாம்... வேண்டாம்... இந்தத் தியாகம்-என் பொருட்டு-நிற்க எண் சாண் இடமற்ற எனக்காகத் தங்கள் சுகபோக வாழ்வு சொத்து சுதந்திரம் உற்றார் உறவினர் எல்லோரையும் என் பொருட்டு இழக்க வேண் டாம். இருக்க இடமற்றவளானாலும் இதயத் தில் என் அன்புத் தெய்வத்திற்காக இட முண்டு... இதயக் கோயிலில் அமர்ந்துவிட்ட என் தெய்வத்தைப்பூஜித்தவாறே என் வாழ்நாள் முழுவதும் கழித்துவிட என் உடம்பில் தெம் புண்டு. நான் வருகிறேன்' என்று கூறித் திரும்பி யவளை உரிமையோடு கையைப் பற்றினான்.

"நில் தேவி, நீ மட்டுமா தனிமையில் செல்லத் துணிந்துவிட்டாய், நாமிருவரும் சேர்ந்தே இப் பரந்த உலகம் முழுவதும் சுற்றுவதோடு வான் முழுவதும் வேண்டுமானாலும் சுற்றலாம்... வா போகலாம். தைரியத்தை மட்டும் கைவிடாதே" என்று கூறிக் கவிழ்ந்த அவளது முக கமலத்தை நிமிர்த்தினான். நன்றியைத் தன் விழிகளில் தேக்கி அந்தப் பெண் அவனைப் பார்த்த பார்வை அப்பப்பா...

அந்தக் காட்சி முள் பதிந்த பானுவின் இதயத் தில் ரணம் கண்டது.

"ரவி, எனக்கு மயக்கம் வரும்போலிருக்கு. வெளியே போனால் தேவலை" என்று கிளம்பினாள் பானு.

"என்ன அக்கா இருந்திருந்து இந்த நேரத்தில் புறப்பட்டுவிட்டாய். அடுத்த ஸீனில் அத்தானை ஸ்டேஜுக்கு அழைத்து வரப்போகிறார்கள். அவரைக் கௌரவிப்பதை நீ காணவேண்டாமா"

"போதும் அவர் கௌரவமும் புகழும்... இனி க்ஷணம் கூட இந்த முள் பொதிந்த புகழ்மாலை யைத் தாங்க என் உடம்பில் தெம்பில்லை. என்னை இப்பொழுதே வீட்டுக்கு அனுப்பிவிடு. நான் போகிறேன். நீ உன் இஷ்டம்போல் வரலாம்" என்று கூறி வெளியே வந்துவிட்டாள்.

மனதை இறுக்கிப் பிடித்துக்கொண்டு வீட்டை அடைந்தாள். தனிமை அவளுக்குப் புகல் அளித் தது. மனதின் சுமை இறங்கும் வரை குமுறிக் குமுறி அழுதாள்.

அழுகையொலி கேட்டு அறைக்குள் வந்த வேலைக்காரி மயக்கமுற்று விழும் நிலையில் கிடந்த பானுவை தாங்கிப் பிடித்துக்கொண்டாள். கூட்டங்களுக்கெல்லாம் போனால் பிடிக்காது. போகவேண்டாமென்று சொன்னால் கேட்டால் தானே... என்று அன்பு நிறைந்த உள்ளத்தோடு புலம்பியவாறே பானுவைப் படுக்கையில் தூக் கிப்போட்டு முகத்தில் நீர் தெளித்து, சற்றே விசிறினாள். சிறிதுநேர சிகித்சைக்குப் பின் சற்றே கண் விழித்தாள் பானு. இதுவரை அக்கரையோடு அவள் அருகில் இருந்து கவ

னித்து வந்த வேலைக்காரி 'என்னம்மா வேண்டும் உங்களுக்கு. சூடாகக் கொஞ்சம் பால் தரட்டுமா அம்மா' என்று கனிவோடு கேட்டதற்கு ஒன்றும் வேண்டாமென்று கையை அசைத்துவிட்டாள்.

"நெருக்கடி உங்களுக்கு எப்பொழுதுமே பிடிப்பதில்லை. அங்கெல்லாம் எதற்குப்போக வேண்டும்" என்று உரிமையோடு அதட்டினாள்.

"போனதால் என்ன வந்துவிட்டது. என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்த ரவி அக்கா படுக்கையில் படுத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

பாதியிலேயே பானு எழுந்து விட்டாள் என்பதை ரவி மூலம் அறிந்த சந்திரன் என்னவோ ஏதோ என்று பதறிப்போய் வந்தான். அதற்கிசைந்தாற்போல் பானு படுத்திருப்பதைக் கண்டதும் உள்ளம் பதைக்க ஓடிவந்தான் படுக்கை அருகில்.

"ஏன் பானு உன் உடம்புக்கென்ன..." என்று பதைக்கும் நெஞ்சுடன் அவள் அருகில் குனிந்து நோக்கினான்.

சற்றே கண் விழித்த பானுவின் செவியில் அவன் சொல்லில் ததும்பி வழிந்த அன்பு-தேனைப் பாய்ந்தது. மறு கணமே மேடையில் அவன் உருவம் அவன் உரிமையோடு கைப் பிடித்த காதலி எல்லாம் கண்முன் சுழன்றன. தெய்வமாகப் பூஜித்த அன்புக் கணவனை ஏறெடுத்துப் பார்க்கவும் கண் கூசியது. உள்ளத்துக் கொந்தளிப்பை அப்படியே கொட்டி விட வேண்டும் போன்ற உணர்ச்சியெழுந்தது.

"எல்லாம் உங்கள் நடிப்பால் வந்த வினை தான்..." மனத்தில் வீசிய புயல் புன்னகையாக நெளிந்தது.

"நான் நடிப்பது உனக்குப் பிடிக்கவில்லையா பானு... உனக்கு விருப்பமில்லாத காரியத்தில் இனி நான் தலையிடுவதில்லை... இன்றோடு நடிப்புக்குத் தலை முழுகி விடுகிறேன் சரிதானே..." அமிர்தமாய்ப் பொழிந்தது அந்தச்சொல்.

"நிஜமாகவா..."

"சரிதான் போ. இப்பொழுது என் பேச்சில் நம்பிக்கை இல்லை, இன்னும் சற்றுப் போனால் என்னையே நம்பமாட்டாய்போலிருக்கே."

இப்பொழுதே நம்பிக்கை இல்லைதான் என்று சொல்ல நினைத்தாள், நினைத்ததைச் சொல்ல

★



Retail Branches:

285, China Bazaar Road,
MADRAS.

71, Pondy Bazaar, T. NAGAR.

★

வில்லை. ஈசுவரா அப்படியும் என் வாழ்க்கையில் நேர்ந்துவிடாதிருக்க நீதான் துணைபுரிய வேண்டு மென்கிற பிரார்த்தனையுடன் கண்ணை மூடிக் கொண்டான்.

* * * *

"ரேணுகா" ஸ்டூடியோவில் அத்தான் ஒப்பந்தம் செய்திருக்கிறார் மூன்று வருஷத்திற்கு என்று ரவி சொன்னபோது பானு நம்பவில்லை. ஆனால் அதே வார்த்தையைச் சந்திரன் வாயால் கூறக் கேட்ட போது எப்படி நம்பாதிருக்கமுடியும்.

தன் சம்மதத்தை ஒரு வார்த்தை கேட்க நினைக் காதபடி மாற்றிய நடிப்பு மோகம் இன்னும் எத் தனை தூரம் இழுத்துச் செல்லுமோ, தன் வாழ்க் கையில் எத்தகைய மாறுதலெல்லாம் ஏற்படக் கூடுமோ என்று உள்ளம் வெதும்பினாள் பானு.

கணவன் காண்ட்ராக்ட் பாரத்தைக் காண் பித்து விஷயத்தைக் கூறியபோது எவ்வித சலனமுமின்றி ஏற்றுக்கொண்டாள் பானு. இப் பொழுதெல்லாம் எவ்விதக் கிளர்ச்சியையும் வெளியே காட்டிக்கொள்ளாமல் சிலையாக மாறி விட மனதைத் திடப்படுத்திக்கொண்டிருந்தாள்.

வசதி நிறைந்த பங்களா. பங்களா நிறைந்த வேலையாள். பகட்டு நிறைந்த பட்டுப் பட்டாடை யும் அவள் மனதிற்கு இன்பம் அளிக்கவில்லை. ஏதோ இனந்தெரியாத ஏக்கம் அவள் இதயத் துள் புரையோடியது. உள்ளத்தில் கண்ட ரணம் உடலிலும் பரவத்தொடங்கியது. ஏதாவதொரு வியாதி வந்து அடிக்கடி அவளைப் படுக்கையில் தள்ளியது.

இந்த ஆறுமாத காலத்தில் சந்திரனது மனதில் எவ்வித மாறுதலுமில்லை. ஆனால் அவன் செய்கை யில்–போக்கில் பெருத்த மாறுதல் கண்டிருந்தது. அது அவனாக ஏற்படுத்திக்கொண்டதல்ல. அவன் ஏற்றுக்கொண்ட தொழில். அவனை அண்டிவந்த புகழ் அவனையும் அவனது அன்பு மனைவியையும் எத்தனை தூரம் பிடித்து இழுத்து வந்திருக்கிற தென்பதை அவன் உணரவில்லை. உணரும் சக்தி அவன் உடலிலில்லை: நாள் முழுவதும் தான் எடுத் துக் கொண்ட வேலையிலும் அதனால் கிடைக்கப் போகும் புகழிலுமாக எண்ணத்தைச் செலவிட்டுக் கொண்டிருக்கும்போது மற்றதை நினைக்க நினை வேது நேரமேது. சந்திரனது உண்மை நிலையைப் பானு அறியவில்லை. அவள் மட்டும் சற்றே நிதானித்துக் கணவனது போக்கைக் கவனித்திருந் தால் சந்திரனது இதயத்தில் பானுவிக்குள்ள இடம் என்றும் எப்போதும் சாசுவதமாகவே நிலைத்திருக்கிறது. அதில் என்றும் எவ்விதமும் சிறு அளவு கூடக் குறைந்ததில்லை என்று கண் டிருப்பாள். அதற்குள்ள பொறுமையைக் கடைப் பிடிக்கப் பானு தவறி விட்டாள். தவறுமேல் தவ றாக அவள் மனம் கற்பனைக்கோட்டை எழுப்பி யது. அதற்குக் கனமான பூச்சு அளித்தது சூழ் நிலை. எல்லாமாய், சந்திரனைத் தவறான உருவத் தில் கொண்டு நிறுத்தியது பானுவின் கண்முன். இதற்குச் சந்தர்ப்பம் சாக்ஷியாக நின்றது.

பானுவின் மனமாறுதலை அறியமுடியாத சந்திரன் அவள் உடல் மாறுதலை மட்டும் அறிந்து வந்தான். ஓய்வென்பதே கண்டறியாத வாழ்க் கையை மேற்கொண்டிருந்தும் சிறிதே கிடைக் கும் பொழுதில் மட்டும் பானுவின் நலனைப் பற்றிக் கேட்கத் தவறுவதில்லை. ஏன் பானு நாளுக்கு நாள் இளைத்து வருகிறாய். கனவிலும் நினைக்கமுடியாத வாழ்க்கை அநுபவத்தில் கிடைத் திருந்தும் உன் மனம் சுகமடையவில்லையா? நீ இப்படி மாறிவருவது என் நெஞ்சில் எத்தனை வேதனை தருகிறது தெரியுமா? என்று வாத் ஸல்யத்தோடு கேட்பான்.

நீங்கள் இப்படி மாறிவிட்டது என் நெஞ்சில் எத்தகைய புயலை எழுப்பியிருக்கிறது தெரியுமா? என்று கேட்கத் தோன்றும், கேட்கமாட்டாள். வறண்ட புன்னகைதான் பதில். அவள் உள்ளத் தில் உணர்ச்சி மரத்துப்போய்ப் பலமாதங்களாகி விட்டனவே.

இங்கே வந்து பலமாதங்களாகியும் நீ என்னோடு ஸ்டூடியோவுக்கு வந்ததேயில்லையே. ஒரு நாளா வது உன் அன்புக்கணவன் தொழில் செய்யும் இடத்தை உனக்குப் பார்க்க ஆசையேயில்லையா! என்று கேட்டான்.

பார்க்காதிருக்கும்போதே உள்ளத்தில் புயல் வீசுகிறது. பார்த்துவிட்டால் பிரளயமே நேர வேண்டியதுதான்...

என்னைப்பற்றி உன் மனதில் தப்பாகவே அபிப் பிராயம் வளர்த்து வருகிறாய்......அவ்வளவுதான் நான் செய்த பாக்கியம்......நீண்ட பெருமூச்சுக் கிடையே அவன் கூறிய மொழி அவள் நெஞ்சைத் தகித்தது. தன் எண்ணம் தவறானதா? தன்னையே தான் கேட்டுக்கொண்டாள்.

தவறாக இருந்தால்... மின்னலெனப் பாய்ந்தது எண்ணம். எத்தகைய பாவமான எண்ணம் இதற்குப் பிராயச்சித்தமே கிடையாதா?

என்ன சிந்தனை பானு...இன்று என்னுடன் அவசியம் ஸ்டூடியோவுக்கு வரத்தான் வேண்டும். கார் ரெடியாகி விட்டது. சீக்கிரம் டிரஸ் செய்து கொள். உனக்காக என்னுடன் வர விருப்ப மில்லாவிடினும் எனக்கு உன்னை அறிமுகம் செய்து வைக்க ஆசை என்று உரிமையோடு கட்டளையிட்டுவிடவே பதில் பேசாது எழுந்து புறப்பட்டாள் பானு.

* * * *

கார் ஸ்டூடியோ வாசலை நெருங்கியது. அவன் உள்ளம் அன்புக்கும் உணர்ச்சிக்கும்

இடையே போராடிக்கொண்டிருக்கிறதென்பதை தெளிவற்ற அவள் முகம் எடுத்துக்காட்டிற்று.

அன்பு மனைவி அருகமர்ந்திருக்கும் பெருமிதத்துடன் காரை ஸ்டுடியோவிற்குள் செலுத்தினன் சந்திரன்.

அதோ சந்திரனே வந்துவிட்டார் என்று எழுந்த குரல் அவனது வரவை எதிர் நோக்கிக் காத்திருக்கிருர்கள் என்பதை அறிவித்தது.

ஹலோ மிஸ்டர் சந்திரன், உங்கள் வரவிற்காக டைரக்டர் ஸார் வெகுநேரம் காத்துக் கொண்டிருக்கிருர். என்று பேசி உரிமையோடு காரின் கதவைத் திறந்த பெண்மணியை உற்று நோக்கினள் பானு. இயற்கையாகவே நெஞ்சில் பதிந்திருந்த முள் பின்னும் ஆழப்பதிந்தது.

இன்று என் டியரின் வருகைக்காகச் சற்று கால தாமதம். அவள்டிரஸ் முடிவதற்கு டிலே ஆகியிருக்கலாம். தவறு என்மேலில்லை என்று பானுவைச் சுட்டிப் பேசினன் சந்திரன்.

'சந்திரன் ஸார்...இன்னெருமுறை அது மாதிரி கூறினீர்களானல் எனக்கு நிஜமாகவே கோபம் வந்துவிடும். பெண்களைக் குறைவாகப் பேசுவதில் என்னதான் திருப்தியோ ஆண்களுக்கு...... என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் சினிமா நடிகை மிஸ் ரேணுகா.

'இவள் மிஸஸ் சந்திரன் என்பது உங்களுக்குச் சொல்லவேண்டியது அவசியமே இல்லை என்று கூறிவிட்டு மனைவியின் பக்கம் திரும்பி இவர்தான் பிரபல நக்ஷத்திரம் ரேணுகாதேவி' என்று கூறி அறிமுகப்படுத்தினன். உள்ளத்து உணர்ச்சி வெளிக்காட்டாமல் மலர்ந்த முகத்துடன் தோன்றவேண்டுமென்று வெகுபாடுபட்டும் சில சமயம் உள்ளத்தைச் சூறையாடும் புயலின்வேகம் நடுநடுவே அவள்வதனத்தைச் சுருங்கச்செய்தது.

கூடியவரை முகத்தைச் சுளிக்காமல் ஸ்டுடியோவைச் சுற்றி முடித்து வந்துவிட்டாள் பானு. நடிகை ரேணுகாவும் தங்களோடு சுற்றி வந்தது மல்லாமல் சந்திரனேடு கலீர் கலீர் என்று சிரித்துப் பேசி வந்தது பானுவின் நெஞ்சைச் சுடுவதாயிருந்தது. துரிதமாக அவ்விடத்தைவிட்டு அகன்ருல் போதுமென்று இருந்தது. 'கிளம்பலாமல்லவா' என்று தன் விருப்பத்தைக் குறிப்பாகத் தெரிவித்தாள். 'ஷூட்டிங்' பார்க்கவேண்டாமா பானு. இப்பொழுது என்னுடைய பாகம் நான் நடிக்கப் போகிறேன். மிஸ் ரேணுகாவோடு நடிப்பது வேடிக்கையாக இருக்கும். நீ பார்க்க வேண்டாமா' களங்கமற்ற மனதோடு குழந்தை போல் கூறினன் சந்திரன்.

எடுக்கப்போகும் ஸீன் காதல் காட்சி. நடிக்கப் போவது சந்திரனும் ரேணுகாவும். கேட்க வேண்டுமா... கண்ணல் காணு முன்பாகவே கற்பனையில் கண்டு அவள் மனம் நைந்தது போலிருந்தது. நேரில் காணும் அதிர்ச்சியைச் சமாளிக்க இடிந்த இதயத்தில் துளிகூட உறுதியில்லை. என்ன சொல்லியும் பிடிவாதமாகப் பானு புறப்பட்டு விடவே சந்திரனும் நிர்ப்பந்தமாகப் புறப்பட வேண்டியிருந்தது.

* * * *

கிழித்துப் போட்ட நார் போல் துவண்டு கிடந்தாள் பானு. படுக்கையில். கவலையே உருவாய் அமர்ந்திருந்த ரவி 'அக்கா... என்று தாழ்ந்த குரலில் அழைத்தான் பானுவை.' அக்கா இன்று பாராட்டுவிழா நடக்கப்

போவது உனக்கு நினைவிருக்கலாம். அத்தான் செல்ல மறுக்கிறார். அவரது நடிப்புத் திறமையை மெச்சி, கவர்னரே இன்று பொதுக்கூட்டம் அமைத்துப் பாராட்டுப் பத்திரம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார். வெகு விமரிசையாக நடத்தத் திட்டமிட்டு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும்போது அத்தான் செல்ல மறுத்தால் நிலைமை என்னவாகும். நீ ஒரு வார்த்தை உன் வாய் திறந்து போகச்சொல்ல அனுமதி கொடுத்தால் ஒரு வேளை அவர் சம்மதிப்பார்... புகழேணியின் உச்ச நிலையை அடையும் சமயம் நீ கை கொடு... உணர்ச்சி வசமாகப் பேசினான் ரவி.

"புகழ்... ஆம். மனைவியின் அன்பு நிறைந்த இதயத்தை அழுத்தி, புகழ் ஏணியைப் பதித்தார்... அவர் மேலே செல்லச் செல்ல அதன் பளு இதயத்தை அழுத்தி, கீழே அதளபாதாளத்தில் தள்ளியது. அதன் பலன் அன்பு அழிந்தது."

"வேண்டாம் அக்கா அப்படியெல்லாம் பேசாதே... இன்று ஒருநாள் மட்டும் அவருக்கு அனுமதி கொடு... அது அவருக்கு அளவற்ற புகழைக் கொடுக்கும்."

அவரது புகழாலேயே அவளது இன்பம் மறைந்தது. கடைசி நேர இன்பத்தைக்கூட அதேப் புகழ் பறித்துப்போக காத்து நின்றது. அதுதான் அவளுக்குக்கிடைக்கும் பிராப்தியானால் அதையும் ஏற்க சித்தமாக வேண்டியதுதானே. மனதைத் திடப்படுத்திக் கொண்டாள் பானு.

மனைவியின் திட மொழியினால் சற்றே மனம் தெளிந்த சந்திரன் விழாவிற்குப் புறப்பட்டுச் சென்றான். உடல் இங்கும் உயிர் அங்குமாக விழாவை முடித்து விட்டு வீட்டிற்குத் திரும்பிய போது பானுவின் உயிரற்ற உடலைத்தான் காண முடிந்தது.

மனைவியின் அன்பு இதயத்தை இடித்துக் கற்களாக்கி அதில் எழுப்பியது தான் நீங்கள் வசிக்கும் புகழ் மாளிகை. அவள் வடித்த ரத்தக் கண்ணீரால் வளர்ந்தது தான் நீங்கள் குடியிருக்கும் புகழ்மாலை, என்று பானு கடைசியாகச் சொன்னதை வேலைக்காரி சொல்லக் கேட்ட சந்திரன் துடித்துப் போனான்.

அன்பு மனைவியின் சாவுக்குக் காரணமாக இருந்த புகழை அக்கினியிடமே உதறி யெறிந்தான் நடிப்புக்கலைஞன் சந்திரன். ●

டில்லித் தபால்

கே, ஸ்ரீநிவாஸன்

சென்ற மாதத்தில் தபால் இல்லாமல் போனது பற்றி வாசகர்களின் மன்னிப்பைக் கோருகிறேன். எதிர்பாராத விதமாக எகிப்துப் பிரயாணம் கிட்டியது. அங்கிருந்து திரும்பி வருவதற்குள் 'காவேரி' அச்சுக்குச் சென்றுவிட்டது.

* * * * *

சில மாதங்களுக்கு முன் ஸ்ரீ வி. வி. கிரி ராஜினாமா செய்வார் என்று ஹேஷ்யம் கூறியிருந்தேன். மத்திய மந்திரி சபையில் முற்போக்கான தொழிலாளர்களுக்கான கொள்கை, சட்டம் இயற்றுதல் முதலியவைகளுக்கு ஆதரவு இல்லாமல் இருந்ததே இதற்குக் காரணம். எவ்வளவுதான் குடியரசு சர்க்கார் என்று நாம் பிதற்றினாலும், மத்திய சர்க்காரில் முதலாளிகள் அபிப்பிராயத்திற்குத்தான் அதிகப்படி ஆதரவு இருக்கிறது. மத்திய மந்திரி சபையில் மிகவும் செல்வாக்கு உள்ள ஸ்ரீ ஸி. டி. தேஷ்முக்கும் சரி, ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியும் சரி, முதலாளிகள் சகாக்கள் என்பதுடன் வர்த்தகத் துறையினர் இவர்களை மந்திரி சபையில் 'கம்பங்கள்' என்று கருதுகிறார்கள்.

ஸ்ரீ கிரி வருவதற்கு முன்னால் தொழில் மந்திரியாக இருந்த ஸ்ரீ ஜகஜீவன்ராம் எடுப்பார் கைப்பிள்ளை. எந்த விதமான அபிப்பிராயத்தை எடுத்துரைக்கவேண்டும் என்றாலும் தயார். தமக்காக ஊர்ஜித அபிப்பிராயம் கிடையாது. இவர் தொழில் மந்திரியாக இருந்தபொழுதுதான் தொழிலாளிகளின் சங்கங்களில் வெளியில் ராஜீயத் துறையில் ஈடுபட்ட தலைவர்கள் இருக்கக் கூடாது என்றது போன்ற ஷரத்துக்கள் கொண்ட மசோதாக்கள் தயாரிக்கப்பட்டன. நல்ல வேளையாக ஸ்ரீ கிரி பதவியேற்றவுடன் இந்தக் 'கறுப்பு' சட்ட யோசனைகள் பெட்டியில்போட்டுப்பூட்டப்பட்டன. ஸ்ரீகிரி ஆரம்ப முதல் தொழிற்சங்கவாதி. தொழிலாளிகள் – முதலாளிகளின் நிரந்தரப் போராட்டத்தில் சிறுகச் சிறுகச் சலுகைகள் தொழிலாளிகளின் பங்கில் கொடுக்கப்படவேண்டும் என்ற கக்ஷியைச் சேர்ந்தவர். இந்த நோக்கத்தைத் தம் முன் வைத்துக்கொண்டே அவர் தொழில் உறவு மசோதா ஒன்றைத் தயார் செய்தார். ஆனால் மிகவும் 'முற்போக்கான' மத்திய சர்க்கார் மந்திரி சபையில் இதற்கு ஆதரவு இல்லை.

ஸ்ரீ கிரியின் மந்திரிப் பதவியின் இறுதிக் கட்டம் பாங்கு தொழிலாளிகள் சம்பந்தமான தீர்ப்பின் மூலம் வந்தது. பாங்கு தொழிலாளிகள் தகராறில் மத்தியஸ்தம் செய்ததன் மூலம் முதலில் சாஸ்திரி தீர்ப்பு வெளியாயிற்று. இதற்குமேல் தொழிலாளிகள் அப்பீல் செய்ததன் பயனாக, தொழில் அப்பீல் கோர்ட்டுத் தீர்ப்பு வெளியாயிற்று. இதன்பலனாகப் பாங்கு தொழிலாளிகளுக்குச் சில நன்மைகள் உண்டாயின. இதை எப்படி பாங்கு முதலாளிகள் சகிப்பார்கள்? ஸ்ரீ தேஷ்முக் மூலம் தங்கள் கக்ஷியைச் சாதித்துக் கொண்டார்கள். இந்தியாவிலேயே **முதல் முதலாகக் கோர்ட்டின் அந்தஸ்துள்ள தீர்ப்பைச் சர்க்கார் தம்மிஷ்டப்படி மாற்றினார்கள்**, இது முதல் முதலாக ஏற்பட்டதால் இது போன்ற பல கட்டங்கள் நிகழலாம்; தொழிலாளிகளுக்குச் சமரஸப் பேச்சு வார்த்தைகளில் நம்பிக்கையில்லாமல் போகலாம் என்று உஷார் செய்துவிட்டு ஸ்ரீ கிரி ராஜினாமா செய்திருக்கிறார். முதலாளிகளை இன்னும் தம் தோழர்களாகக் கருதும் ஸ்ரீ நேருவுக்கு இந்த நிர்ப்பந்த கட்டத்தைத் தவிர்க்க வழி ஏதும் இல்லை. கொள்கைக்காகத் தம் பதவியைத் தியாகம் செய்த ஸ்ரீ கிரியின் மதிப்பு நிச்சயம் பன்மடங்காகும்.

* * * *

இந்தோ—சீனாவுக்கு என்று பொறுக்கப்பட்ட சிப்பந்திகள் ஆகாய மூலமாகவும் சமுத்திர மார்க்கமாகவும் வியட்நாம், லவுஸ், கம்போடியா, இந்த மூன்று பகுதிகளுக்குச் சென்றுவிட்டார்கள். சுமார் ஏழு வருஷங்களாக நடந்த சண்டையை நிறுத்திச் சமாதானத்தை நிலை நாட்ட மூன்று கமிஷன்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளில் வேலை செய்யவே இந்தியர்கள் செல்கிறார்கள். முதலில் ராணுவத்தினர் அல்

லாதவர்களே பெரும்பாலும் அங்குச் செல்வதாக இருந்தார்கள். ஆனால் ஏழு வருஷம் சண்டை நடந்த நாட்டில் குழப்பமும் கஷ்டமும் ஏராளமாக இருக்கும் என்றும், பாதுகாப்பு மந்திரிசபை முக்காலும் ராணுவத்தினராக இருந்தால் ஒழுங்கு நடவடிக்கைகளுக்குச் சௌகரியமாக இருக்கும் என்றும் சொல்லி, பெரும்பாலும் ராணுவத்தினரை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். கொரியாவில் நல்ல பெயர் வாங்கிய இவர்கள் இங்கும் புகழ் பெறுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

* * * *

இந்தோ-சீனாவில் சமாதானம் வரக்கூடாது என்று தலைகீழாக நின்றவர்கள் அமெரிக்கர்கள். பிரான்ஸுக்குக் கப்பல் கணக்கில் பணத்தையும் தளவாடத்தையும் வாரிவிட்டு எப்படியாவது சண்டை நிரந்தரமாக நடந்தால் சரி என்றார் அமெரிக்க வெளிநாட்டு மந்திரி ஸ்ரீ டல்லெஸ். யுத்தத்தையே தன் சுபிக்ஷத்துக்கு அடிகோலியாக உள்ள அமெரிக்கப் பொருளாதாரத்துக்குச் சமாதானம் பெரிய விரோதி: ஆனால் சுமார் 5,000 மைலுக்குமேல் உள்ள இந்தோ-சீனாவில் அந்நாட்டு ஜனங்களின் இஷ்டத்துக்கு விரோதமாக எப்படிப் பிரான்ஸ் சாம்ராஜ்ய ரக்ஷக யுத்தம் நடத்தமுடியும்? தன் பொருளாதாரம் வற்றி, தேசம் ஓட்டாண்டியாகும் நிலைமையில்தான் பிரெஞ்சுப் பிரதமர் ஸ்ரீ மெண்டெஸ்-பிரான்ஸ் தம் மானத்தை யிழந்து அமெரிக்காவிடம் கையேந்தும் நிலைமையை ஒழிக்க முடிவுசெய்து அம்முடிவைப் பின்பற்றி ஜினிவாவில் வெற்றியும் கண்டார்,

உலகத்து நாடுகளில் தன் ஆதிக்கத்தைப் பண மூட்டைகள் மூலம் நிலை நிறுத்தத் தயாராக இருக்கும் அமெரிக்கா ஜினிவாவில் தன் பாச்சா பலிக்காமல் போகவே, பேச்சு வார்த்தைகளால் சாதிக்கமுடியாததைக் குண்டாந்தடி மூலம் நடத்தத் தீர்மானித்திருப்பதாக எங்கும் பேச்சு. இதுபற்றி டில்லியில் கூடப் பரபரப்புச் சமீபத்தில் ஒரு பத்திரிகை ரிப்போர்ட் மூலம் உண்டாயிற்று. இதையே தான் ஹிந்து மகாசபைத் தலைவர், டாக்டர் காரேயும் ஊர்ஜிதம் செய்தார். நேரு இருப்பதால்தானே உலகத்தில் சமாதானப் பிதற்றல்? அவரை ஒழித்து விட்டால்?

இது மாதிரி விஷயங்களில் ருஜுப்படுத்துவதற்கு நேரடியாக, சாக்ஷியம் எதுவும் கிடைக்காது. ஆனால் இதுமாதிரி பிரஸ்தாபம் ஏற்பட்டதுமே தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். ரகசியப் போலீஸ் இலாக்காவில் உள்ள குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டால், ஒவ்வொரு சிறு சர்க்கார் ஆபீஸிலிருந்தும் ரகசியங்கள் சிறிய தொகைகளுக்கு விற்கப்பட்டிருக்கின்றன. நம் ராணுவத்தின் ரகசியங்கள் எல்லாம் வெளியே போய்விட்டன. காரணம் தேச பக்தி என்பதை அறியாத துரோகிகளைப் பெரும் பதவிகளில் நம்புவதால்தான். ஸ்ரீ நேருதான் பர்மிய பிரதமரை ஸ்ரீ சௌ-என்-லையை பர்மா நாட்டுக்கு அழைக்கும்படி டெலிபோன் செய்தார் என்று, வெளிநாட்டு ஒற்றர் சர்வீஸ் ஒன்றுக்குப் பிரதமர் காரியாலயத்தில் உள்ளவர் சொன்னதாகத் தகவல் உள்ளது என்றால் சிந்தித்துப் பாருங்கள், மகாத்மாவைச் சுட்டு ஒழித்த நாட்டில் அவர் வாரிசை ஒழிக்கப் பல துரோகிகள் என்றும் கைக்கூலிகளாகக் காத்திருக்கலாம்.

* * * *

சிறு நதியான காவேரியைப் பற்றியே அறிந்த வாசகர்களுக்குக் கங்கை, பிரும்மபுத்திரா போன்ற பிரவாகங்கள் எப்படி இருக்கும் என்று புரிந்துகொள்வது சிரமம். அதிலும் அவைகள் பிரவாகத்தில் ஓடினால்!

பீஹார் மாகாணம் மிகவும் பின்னடைந்தது. கங்கை இதை இரு பாகங்களாக்குகிறது. ஆனால் அதனால் பாசனப் பிரயோஜனம் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் வெள்ளம் வந்தால் இந்தப் புண்ணிய நதி அந்த மாகாணத்து ஜனங்களுக்கு மாளாத் துயரமாக மாறுகிறது. கிழக்குப் பீஹாரை நான் வெள்ளப் பெருக்கில் பார்த்திருக்கிறேன். கண் கொண்ட மட்டும் தண்ணீர் தான் தெரியும். பல வாரங்களுக்குக் கிராமங்களும் நகரங்களும் பல அடி ஆழத்தில் தண்ணீரில் மூழ்கித் தவிக்கும். சமீபத்தில் ஹிமாலயத்தில் இடைவிடாது மூன்று நாட்கள் மழை பெய்ததன் காரணமாகப் பீஹார், வங்காளம், அஸ்ஸாம் மூன்றிலும் இருகோடி ஜனங்களுக்கு மேல் வீடிழந்து தவிக்கிறார்கள். சுமார் ஐந்துகோடி ரூபாய் பொறுமான பொருள் நஷ்டம்.

வெளி நாடுகளில் சிறு வெள்ளம் ஏற்பட்டால் பெரிய எழுத்துக்களில் செய்தியைப் பிரசுரிக்கும் நம் தினசரிகள் இந்தியாவின் மூன்று மாகாணங்களில் உண்டான பிரும்மாண்ட விபத்தைப்பற்றிக் கொஞ்சம் கூடக்

கவலை கொள்ளவில்லை. தருமம் தலை முறை யாக ஊறிய தமிழ் நாட்டில் பெருமனது கொண்டவர்கள் பணம், பழைய உடைகள், பாதரக்ஷைகள், பாத்திரங்களைத் திரட்டி பீஹார், வங்காள, அஸ்ஸாம் கவர்னர் களுக்கு அனுப்பலாம்.

* * * *

கொக்குக்கு ஒன்றே மதி என்பார்களே அந்த மாதிரிதான் சில விஷ யங்களில் நம் பிரதமர் நேருவுக்கு. ஹிந்து சட்ட மசோதாவைப் பல துண்டங்களாக்கி ஞர்களே, அதில் ஒன்று விசேஷ கல்யாண மசோதா. தேசத்தில் பலவித பிரச்னைகள் மண்டிக் கிடக்கும் காலத்தில் இந்த மசோ தாவுக்கு என்ன அவசரம் என்று நீங்கள் கேட்கலாம். பட்டணங்களில் வீட்டில் வேலையில்லாமல் தோண்டி மாதிரி கலங்கும் சில பெண்மணிகள் 'அகில இந்திய' ஸ்தா பனங்கள் ஏற்படுத்துகிருர்கள். இந்த ஸ்தாபனங்கள் அடிக்கடி நம் பிரதமரைச் சந்தித்துப் பாரதத்தில் உள்ள 'சுமார் 15 கோடி பெண்மணிகளுக்காகப்' பேசுகிருர்கள். இதைக்கேட்டுக்கொண்டு நம் பிரதமரும் குதிக்கிருர்.

இந்த மசோதாவை எதிர்க்கும் விவேகி களின் கக்ஷி எளிதானது. சென்ற தேர்தலில் இதற்கு ஜனங்களின் அபிப்பிராயம் கேட்கப் படவில்லை என்று இவர்கள் சொல்லவில்லை. இவர்கள் சொல்லுவதெல்லாம் இதுதான். நீங்கள் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறீர்கள். சரி. ஆனல் அதை ஏன் ஹிந்து சமூகத்திற்கு மாத்திரம் செய்யவேண்டும்? அப்படிச் செய் தாலும் ஏன் இந்த அவசரம்? ஏன் மசோ தாவைப் பொதுஜன அபிப்பிராயத்துக்கு விடக்கூடாது? ஹிந்து தர்மப்படி நடக்கும் கல்யாணங்களை ஏன் ரிஜிஸ்டர் செய்ய வேண்டும்? விவாகரத்துக்கு வழி செய்கிறீர் களே, அது பெண்களுக்குச் சகாயம் செய்வ தற்குப் பதிலாக, அவர்களைச் சந்தியில் அல்லவா நிறுத்தும்? அதுவும் ஒரு மணம் தான் செய்யலாம் என்று சட்டம் இயற்றும் காலத்தில், பலமணம் செய்ய விரும்பும் லோலர்களுக்கு விவாக ரத்து பெரிய வரப் பிரசாதம் இல்லையா?

யார் துரதிர்ஷ்டமோ தெரியவில்லை. காங் கிரஸுக்கு வோட்டு பலம் இருக்கிறது என்று பல சச்சரவுக்கிடமான, ஹிந்துக்களை மட்டும் பாதிக்கும் சட்டங்கள் செய்யப்படுகின்றன. அன்று டாக்டர் அம்பேத்கார் சொன்னது போல், ஒரு கக்ஷி அரசும், பொதுஜன மதிப்பைத் திரஸ்கரிக்கும் மனப்பான்மையும் குண்டர் ஆட்சிக்குத்தான் அடிகோலும். இப்பொழுதும் பார்லி[illegible]ண்டில் காங்கிரஸ் விழித்திருக்கலாம்.

நிழலுருவம்

சா வே நா

பின் நிலாக் காலம். நள்ளிரவு. அசைவற்ற குளத்து நீரின் அமைதி. அதன் அமைதியைக் குலைக்கச் சரிந்து விழுந்தது அரித்து விடப்பட்ட இடத்தினின்று ஒரு சிறு மண் திம்மை, எங்கோ சந்திரன் மூலையில் ஊளையிடும் கிழ நாயின் அழுகை, இரவின் அமைதியை அணு அணுவாகச் சிதைத்து அடியோடு அழித்துவிட ஆயத்தம் செய்தது.

ஏதோ விழிப்புக்கொண்ட சந்திரன் எழுந்து உட்கார்ந்தான். லல்லியின் படுக்கையை நெருங்க வேண்டும் என்ற கட்டுக்கடங்காத ஆசை அவனை முட்டித் தள்ளியது.

நட்சத்திரப் பந்தலிலே மணமகன் மதியழகனைக் காணப் பூலோகக் கன்னி அல்லி மலராள் அன்ன காத்துக் கிடந்தாள் லல்லி. ஆனால் பெண்களுக்கே உரியதான வெட்கத்தோடு கலந்த பிகுவு, பெண்ணுரிமை இவையெல்லாம் அவளை 'அயர்ந்த துயிலில் ஆழ்த்திவிட்டது போன்று பாசாங்கு செய்யத் தூண்டியது.

மேகப் படுக்கையை விட்டெழுந்த மதி உடலிலே உள்ளத்திலே ஒரு கிறுகிறுப்பை ஊட்டிக்கொண்டிருந்தான்.

படுக்கையை விட்டெழுந்த சந்திரன் லல்லியின் படுக்கையை நெருங்கினான். அவள் பக்கவில் இணைய அமர்ந்தான். திடீரென்று அவளை எழுப்பவில்லை—எழுப்ப விரும்பவில்லை. அவளாகவே விழிப்படையும் நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்தான்.

பாதி திறந்தும் குவிந்துமுள்ள அந்தப் பவள இதழ்களுக்கு லேசாக ஒத்தடங் கொடுத்தான் தன் இதழால். மெல்லிய தென்றலிலே தன்னை மறந்து படமெடுத்து ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு இன்பம் நுகரும் கரு நாகம்

போன்று நெற்றியின் ஓரத்தில் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு புரண்டாடும் கேசங்களை ஒழுங்குபடுத்தினான். இன்னும் என்னென்ன செய்தானோ? மதி என்னிடம் கூறவில்லை,

சந்திரனின் இந்தத் தந்திரச் செய்கையின் முன்னால் லல்வியின் பெண்ணுரிமை, பிகுவு யாவும் மாயமாய் மறைந்தன. லேசாகக் கண்களைத் திறந்தாள்—நீலோத்பலம் மலர்ந்ததுவோ! இதழின் கடையோரத்திலே முறுவலைத் தவழ விட்டாள்.

சந்:—லல்வி.

லல்:—............

சந்:—மௌனமேன் லல்வி.

லல்:—அத்தான்!......

சந்:-இத்தனை நாழிகையா? லல்வி, நீ 'வாட்டர் லில்லி!' நான்......

லல்:-நான் அல்லி மலரானால் நீங்கள் சந்திரனோ?

சந்;—என்ன லல்வி, நானும் சந்திரன்தானே?

லல்:—ஆம். என் இதயவானில் அன்புக்கதிரை அள்ளிவீசும் அழகுச் சந்திரன். அத்தான், நீங்கள் உருவம். நான் நிழல்!

சந்:—லல்வி, நீ ரங்கூனிலே இன்னல்களின் நடுவே சிறகு முளைக்காத கிளியாக இருக்கும் போது என்னை ஒரு முறையாவது நினைத்திருப்பாயா? எப்படி நினைத்திருக்க முடியும்? நீ யாரோ நான் யாரோ, ஆனால் இப்போது............

லல்:—அத்தான், துன்பத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் என்றாவது சுகத்தின் இன்பம் கிட்டும் என்ற மயக்க நிலையிலே துன்பமனைத்தையுமே மறந்திருப்பேன். எத்தனை நாட்களுக்குத்தான் அமாவாசையும், மேகங்களும் சந்திரனை மறைத்து வைக்க முடியும்? கட்டாயம் என்றாவது ஒருநாள் என் துன்பமனைத்திற்கும் விடிவு காலம் வரும் என்ற நம்பிக்கையை நான் ஒருபோதும் இழந்ததில்லை யத்தான்.

சந்:—லல்வி, இனி அம்மாதிரி துன்பப்பட வேண்டியதில்லை, இல்லையா?.........

லல்:-......அத்தானின் அருகாமை அம்மாதிரித் துன்பத்தில் ஆழ்த்துமா என்ன?.........

சந்:—ரங்கூன்காரி பேச எங்குதான் கற்றுக்கொண்டாயோ? அது போகட்டும் உனக்குத் தூக்கம் வரவில்லையா!

லல்:—உம்...உங்களுக்கு மட்டும்?...

சந்:—எனக்கும்தான் தூக்கம் சொக்குகிறது.

லல்:—அப்படியானால் படுத்துக் கொள்ளுங்கள்.

சந்:—இங்கேயேயா?

லல்:—ஆசையைப் பார்.

சந்:—லல்வி!...

லல்:—அத்தான்!...

நீண்ட காலமாகக் கனவு கண்டுகொண்டிருந்த ஆணும் பெண்ணும் கணவன் மனைவியான புதிது. இன்பத்திற்கோர் எல்லை கண்ட அவர்கள் இக வாழ்வு சுகமாக இருந்தது. ஆனால் அவர்கள் வாழ்வில் இடையில் ஓர் உருவம் தோன்றிச் சுழன்றடிக்கும் சூறாவளியைக் கிளப்பி அமைதியைக் குலைக்கும் என்று அவர்களுக்கெப்படித் தெரியும்?—தெரிய முடியும்?

2

அன்று ஒரு நாள் மாலை அத்தானின் வரவை ஆவலுடன் எதிர்நோக்கியிருந்தாள் லல்வி. காலையில் அத்தான் வகுத்த திட்டப்படி சினிமாவிற்குச் செல்ல அவள் பொல்லாத உள்ளம் களிப்பால் துள்ளிக் குதித்தது. காப்பிக்கான பால் பொங்கிவிடப் போகிறதேயென்று அடுக்களைக்கு ஓடினாள்.

"சேகர், இப்படி உட்காருங்கள்." என்று கூறி, 'லல்வி!' என்று அன்பொழுக அழைத்துக்கொண்டே அடுக்களைக்குச் சென்றான் சந்திரன்.

"லல்வி" ஒரு வேளை அவளாக இருக்குமோ?... சேச்சே. ஒரே பெயருடைய பலர் இல்லையா?" என்று சிந்தித்துக்கொண்டே ஹாலின் நாற்புறமும் சூழ்ந்துள்ள கண்ணைக் கவரும் காட்சிப் படங்கள் மீது பார்வையைச் செலுத்தினான் சேகர். அவன் பார்வை அந்தப் படத்தைத் தாண்டிப்போக மறுத்தது. எழுந்து அதனருகிற் சென்று அந்த மணக்கோலத்துப் போட்டோவைக் கண்ணுற்றான். அவ்வளவுதான்; மூளை குழம்பியது, முகம் வெளுத்தது, இதயம் துடித்தது! ஒன்றும் புரியாத நிலையிலே பைத்தியக்காரனைப் போல் நின்றிருந்தான் சேகர். அவ்வேளையிலே.........

"என்ன சேகர் பார்த்துக்கொண்டேயிருக்கிறீர்கள்?" என்று கூறிக்கொண்டே வந்தான் சந்திரன்.

சேகர்:—உம்......... இந்தப் போட்டோ?......

சந்:—என் கலியாணத்தின்போது எடுத்த போட்டோ.

சேகரின் இதயத்துடிப்பு இன்னும் அதிகரித்தது. எப்படியோ சமாளித்துக்கொண்டு நாற்காலியில் வந்து உட்கார்ந்தான். கோடை இடியும் ஆடி மாதத்து அடை மழையும் புயலும் அவன் உள்ளத்திலே!

காப்பியுடன் ஹாலுக்குள் நுழைந்தாள் லல்லி. லல்லியிடமிருந்து காபியை வாங்கிவந்து மேஜை மீது வைத்தான் சந்திரன். சேகரைப் பார்த்தாள் லல்லி. பார்த்ததுதான் தாமதம்; தலை சுற்றியது, இதயம் கனவேகமாகத் துடித்தது. உடல் நடுங்கியது! "என் ராமுவா இந்தச் சேகர்?!" என்று அவளையே அவள் கேட்டுக்கொண்டாள்.

"ஆ!...லல்லி! என் லல்லியா? ஒரு வேளை என் கண்கள் என்னை ஏமாற்றுகின்றனவா! இல்லையில்லை அய்யமேயில்லை. என் லல்லியேதான்!" அவன் உள்ளம் பேசியது. அவன் ஐயம் நீங்கியது. அவனுக்கு லல்லியின் மீது சொல்லொணு வெறுப்பு. ஆனுல் பெண்ணினத்தில் லல்லியைப் போன்ற மனநிலையுடைய பெண்களும் இருக்கிருர்களே என்று அந்த வெறுப்பைச் சகித்துக் கொண்டான். எப்படியும் லல்லியின் வாழ்வு அல்லியும் திங்களுமாக இருக்கவேண்டுமென்று விரும்பினுன். அவன் விருப்பம்போலவே அவள் வாழ்வும் அமைந்தது. இன்னும் அவன் சிந்திக்கத்தக்க இடமும் நேரமும் அதுவல்ல! நிழலுருவம் காப்பியை அருந்துவது போன்று ஆறிப்போன காப்பியை ஒரே முணரில் 'மடக்' கென்று குடித்து முடித்தான். காலையில் சந்திப்பதாகக் கூறிச் சந்திரனிடம் விடை பெற்றுச் சென்ருன் சேகர்.

வந்த விருந்தாளியைக் கண்டதும் லல்லியின் போக்கு; சேகரின் செய்கை இவையனைத்தும் ஒன்றும் புரியாத புதிராகவே இருந்தது சந்திரனுக்கு. ஒரு வேளை சேகருக்கும் லல்லிக்கும் பழைய தொடர்பு ஏதேனும் இருக்குமோ...? என்ற அய்யமும் எழத்தான் செய்தது. எதற்கும் லல்லியையே விசாரிப்போம். இது விஷயத்தில் அவசரத்தைக் கையாண்டால் அணுவளவும் பயனில்லை என்று குழம்பிப்போன சந்திரன் பேசாது உட்கார்ந்துவிட்டான்.

3

பகல் முடிந்தது. புள்ளினங்கள் தத்தம் கூடுகளில் வந்து அடங்கிவிட்டன. குஞ்சுப் பறவைகளின் கொஞ்சலும் ஒருவாறு அடங்கியது. தூரத்துப் பனையும் அருகிலுள்ள தென்னையும்; நிழலுருவம் இரவை அறைகூவி அழைப்பதன்ன தத்தம் கரங்களையசைத்து, பயங்கரக் காட்சியைக் காட்டிக் கொண்டிருந்தன. ஊர் முழுவதையும் உறக்கப் போர்வையால் போர்த்த ஆயத்தம் செய்து கொண்டிருந்தான் இருளரசன்.

கடந்த கால நினைவுகள் லல்லியின் மனத்திரையில் நிழலுருவப் படமன்ன துரிதமாக ஓடிக்கொண்டேயிருந்தது. குழம்பிப்போன அவள் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தாள். இந்த நிலையில் சந்திரனின் அழைப்பு அவளைத் திடுக்கிடச் செய்தது. முகத்தை முன்ருனையால் துடைத்துக்கொண்டு சந்திரனிடம் செல்ல எழுந்தாள். அதற்குள் சந்திரனே அவளண்டை வந்துவிட்டான்.

சந்:—லல்லி, என்ன ஒரு மாதிரியாயிருக்கிருய்? உடம்புக்கு ஏதாவது.........

லல்:-ம்...... ஒன்றுமில்லையத்தான். சாதாரண தலைவலிதான். ஜ ¬ ர ம் வேறு அடிக்கிருப் போலிருக்கிறது.

சந்:—அப்படியானுல் வைத்தியரை வரவழைக்கட்டுமா?

லல்:—அதெல்லாம் ஒன்றும் வேண்டாமத்தான். எல்லாம் விடிந்ததும் சரியாகிவிடும்.

சந்:—அப்படியானுல் சாப்பிடக்கூட வேண்டாமா? இதென்ன பிடிவாதம். வா போகலாம் (என்று அவள் கையைப் பிடித்து அழைக்கிருன்)

லல்:—(அவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு கெஞ்சும் பாவனையில்) அத்தான், எனக்கு ஒன்றும் வேண்டாமத்தான். கோபிக்காமல் இன்று மட்டும் நீங்களாகவே போய்ச் சாப்பிட்டு விட்டு வாங்களேன்.

"அப்பப்ப! எத்தனை அத்தான்கள் போடுகிருள். அத்தனையும் பெண் சாகசம். என்னிடமா? இன்று அவனைப்பற்றி விஸ்தரிப்போம். நாளை; அவன் யார்?—முன்னமே உனக்கு அவனைத் தெரியுமா? என்றெல்லாம் கேட்டு அவள் வாயிலாகவே விவரமனைத்தும் வரவழைப்போம்" என்று தனக்குள் எண்ணிய வாறே உணவு கொள்ளச் சென்ருன் சந்திரன்.

என்னதான் லல்லியின் மீது தீராத சந்தேகம் வளர்த்தாலும் லல்லி சந்திரனேடு ஒன்றிய மனைவியாகிவிட்டபிறகு "இந்த சேகர் வால்மீன் அன்ன எங்கள் வாழ்க்கையில் எதற்காக இங்கு வந்து தோன்றவேண்டும்" என்று தன்னையுமறியாமல் தனக்குள் ஒருமுறை சபிக்கவும் செய்தான். ஆனுல் அவன் சந்தேகத்தின்முன் இவையெல்லாம் சலனப்பட நிழலுருவமன்ன ஓடி மறைந்தன. குழம்பிப்போன அவனுக்குமட்டும் உணவு கொள்ளுமா என்ன? ஏதோ ஓரிரு கவளம் உண்டபின் லல்லியிடம் வந்தான் சந்திரன்.

சந்:—ல்லி, அதற்குள் தூங்கி விட்டாயா என்ன?

லல்:—...இல்லையத்தான். மிகவும் அயளையாயிருக்கிறது.

சந்:—உம்...லல்லி, மாலை இங்கு வந்தாரே சேகர்; அவர் எங்கள் மானேஜரின் நெருங்கிய

நண்பராம்! மானேஜருக்கு மாற்றலாகியிருப்ப தால் அந்தப் பதவியைச் சேகர் வகிக்க வந்திருக் கிருர். உனக்குத்தான் தெரியுமே மானேஜரும் நானும் உயிர்த் தோழர்கள் என்று. அவர் விருப்பப்படியே சேகரை இங்கு அழைத்து வந்தேன். ஆனல் ஆள் அரைப் பைத்தியம் போலிருக்கிறதே! வந்ததும் வராததுமாய்க் கிளம்பிவிட்டார் மனிதர். எனக்கே ஒன்றும் புரியவில்லை லல்லி.

லல்:—அத்தான், என் மூளையில் ஒருமிக்க மூவாயிரம் நடன மாதர் மும்முரமாய் நடன மாடுவது போன்று ‘கிண் கிணீர்’ என்று பிளந்து தள்ளுகிறதத்தான் வலி.

சங்:—அப்படியா!... ஆமாம். லல்லி, அந்தப் பைத்தியம் நம்ம கலியாணப் போட்டோவைக் கண்டு என்ன அப்படி முறைத்தது?

லல்:—…………

சங்:—லல்லி, தூங்கிட்டியா? சரி சரி தூங்கு. உனக்கு உடம்புக்கு வேறு சரியில்லை. உம்... உம்.

இந்த நிலையில் சந்திரனேடு இன்னும் பேசி ஞல் தன்னையுமறியாமல் ஏதாவது சொல்லி

விட நேர்ந்துவிடுமோ என்று பயந்து தூங்கும் பாவனையில் கண்களை மூடிக்கொண்டு மௌன மானாள் லல்லி.

சந்திரனும் இன்று இது வரைக்கும் போது மென்று, லல்லி உண்மையில் தூங்குகிறாள் என்றே தூங்க விடுத்தான், முன்னமேயே மாறுதலடைந்து விகாரமாகிவிட்ட லல்லியின் முகத்தில் இப்போது சந்திரனுக்கு எந்தவித மாறுதலும் காணப்படவில்லை. ஆனால் அவள் உள்ளம் மட்டும் மாறி மாறிப் பயந்து, நடுங்கி இவையெல்லாம் வெளியே எங்கே தெரிந்து விடப்போகிறதோவென்று அடக்கி, மேலுக்குச் சாவதானமாகப் பேசும் சாதுர்யத்தைச் சந்திரன் உணராமலில்லை.

4

நள்ளிரவு. நித்திரைப்புகையில் மயக்கமுற்று யாவும் பிணங்களாய்க் காட்சியளித்தன! லல்லியும் சந்திரனும் இதற்கு விதிவிலக்காளன்ன?

கால்கள்கூடத் தெரியாது கறுப்புப் போர்வை போர்த்திய கனத்த நிழலுருவம் ஒன்று லல்லி யின் படுக்கையண்டை வந்தது. வந்த நிழலுருவம் லல்லியைத் தட்டி எழுப்பியது. திடுக்கிட்டுத் துடித்தெழுந்தாள் லல்லி கிறீச்சிட்டவாறே. கண்முன் எதிரில் நிற்கும் கனத்த நிழலுருவத் தைக் கண்டு பயந்து கூச்சலிட்டாள். ஆனால் ஒலி மட்டும் தொண்டையோடு நின்றுவிட்டதே! என் செய்வாள்!

லல்:—நீ......... யார்? என்னை......... ஏன் எழுப்பினாய்?

நிழ:—நல்ல கேள்வி லல்லி. உன் காதலன் ராமுவை மறந்துவிட்டாயா? மாலை சேகர் வந் தானே, அவன் யார்? ராமுதான் சேகர். இப் போது தெரிகிறதா லல்லி, நான் யாரென்று?

லல்.—ஆ! ராமுவா!!.........

நிழ:—லல்லி, "பொல்லாத காலத்தால் அல்லாது நடந்துவிட்டது நானோ பெண். என்ன செய் முடியும்." என்கிறாயா?

லல்:—ராமு, நான் உன்னை மனப்பூர்வமாகக் காதலித்ததென்னவோ உண்மை. ஆனால் காதலர் கள் எண்ணம்போல் கலியாணம் எங்கே.........?

நிழ:—லல்லி, சாதுர்யமாகப் பேசுகிறாய். ஏமாறு கிறவன் நானல்ல. லல்லி, கவனி. கலியாணம் செய்துகொள்ள சந்திரன் உன்னைப் பார்க்க வந்த போது, நீ என்னைக் காதலித்திருக்க அவன் பெயரை வினவியதும், அவன் தன் பெயரைச் சொல்லியதும், நீ கொம்மாளங் கொட்டிச் சிரித் ததும் ஏன்? புதுமோகம் பழைய காதலனைக் கழித் துக்கட்டும் ஆத்திரமோ? கள்ளி, ஏன் நடுங்கிச் சாகிறாய்?.........

லல்:—ராமு, என்னை என்ன வேணுமானாலும் திட்டு. ஆனால் நான் என்றும் உன் காதலியே! ராமு, காலவேகம் நம்மைப் பிரித்தது. அதோ டன்றி சந்திரனையும் என்னையும் சேர்த்து வாழ்க் கைப் பாதையில் அனுப்பியது. அப்படியிருக்க என்மீதுள்ள குற்றம்?

நிழ:—குற்றம்! காதலிப்பது ஒருவனை: கலி யாணம் செய்து கொள்வது வேறொருவனை! அவன் சிரிக்க நீ சிரிக்க கொம்மாளமடிக்க... இதெல்லாம் குற்றமல்லாமல் வேறென்ன? மௌனம் சாதித்து மழுப்பிவிடலாம் என்ற எண்ணமோ?

லல்:—ராமு, வாழ்வில் ஒருவரும் தவறுவதே யில்லையா? தவறியது தப்பு என்று உணர் கிறேனே. அதுவே அந்தக்குற்றத்திற்கு மன் னிப்பு இல்லையா! நீயே கூறியிருக்கிறாயே 'தம்மையறியாமலேயே தவறிவிடுவதியல்பு. பின் அதையுணர்ந்து ஒழுக்கக் கோட்டில் அழுக் கின்றிச் செல்வதே மன்னிப்பும் மேன்மையும்' அன்று.

நிழ:—போதுமடி பேசிப் பேசி ஒன்றும் பயனில்லை. நான் முன்பு என்னதான் சொல்லி யிருந்தாலும் நீ செய்தது தவறு தவறுதான். குற்றம் குற்றந்தான். அதற்கு மன்னிப்பே கிடையாது. தண்டனைதான்! தண்டனைதான்!

லல்:—ஆ!... தண்டனை!

நிழ:—ஆம். என் மனச்சாட்சி உனக்குத் தண் டனை கொடுக்கத்தான் என்னை இங்கு அனுப்பி யது. உன் கழுத்தை நெறித்து!...உன் தலையை உடைத்து!...

"அத்தான்!" என்று அலறி அடித்துக் கொண்டு எழுந்தாள் லல்லி. இவள் போட்ட கூச்சலில் விழித்துக்கொண்டான் சந்திரன்.

சந்:—என்ன, என்ன லல்லி?

லல்:—அத்தான்,... ஏதோ... ஒரு... நிழலுரு வம்... வந்து... என் கழுத்தை... நெறிப்பது போன்று...

சந்:—வீண் கனவு கண்டு ஏன் பயப்படுகிறாய்? நிழலுருவமுமில்லை தழலுருவமுமில்லை. பேசாமல் நிம்மதியாகத் தூங்கு. விடிந்ததும் வைத்தியரை வரவழைக்கிறேன்.

ராமுவைப்பற்றி மறைத்து மறைத்து வைத் ததுபோக எல்லாவற்றையும் உளறிக் கொட்டி, சந்திரன் வெறுக்காவண்ணம், மன்னிப்புப்பெறத் துடித்தாள். ஆனால் சந்திரன் அடர்ந்த மேகத் திரையன்ன உறக்கப் போர்வையில் சிக்கிவிட் டான். கதிரெழுவேளையும் நெருங்கியது. சரி விடியட்டுமென்று சந்திரனுக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பாதவளாய்ப் பொறுத்துக் கொண்டு படுத்தாள் லல்லி.

இரவெல்லாம் பேதலித்த மனத்தின் அசம்பாவிதமான கனவால் அலைக்கழிக்கப்பட்ட லல்லி காலையில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் முகம் தெளிவாக இருந்தது. அதில் ஒரு வித கலவரமும் காணப்படவில்லை.

சந்திரன் லல்லியைக் கவனித்தான். முந்திய தினம் மாலை லல்லியின் குழப்பம்; இரவு அவள் கண்ட விபரீதக்கனவு; கனவின் கடைசிக் கட்டத்திலே அவள் அலறி அடித்துக்கொண்டெழுந்த விளைவு; காலையில் அவள் முகத்தெளிவு இவையெல்லாம் சந்திரனுக்குச் சற்றுச் சாந்தியையே அளித்தன. அவள்மீது அவன்கொண்ட வெறுப்பற கொஞ்சங் கொஞ்சமாக விருப்புறத் தூண்டியது.

லல்லியின் நித்திரை கலைந்தது. சாளரத்தின் வழியே வரும் இளங்கதிரொளியில் சந்திரவதனம் பசும்பொன்னன்ன மின்னிப் பளபளப்பதைக் கண்டுளம்பூரித்தான்.

நெடுநாட்களாக மறைத்துவந்த ரகசியத்தை எப்படி விவரிப்பதென்றறியாமல் சந்திரனை ஏறிட்டுப் பார்த்தவண்ணமிருந்தாள். இதை ஊகித்தறிந்தவன்போல் சந்திரனும் அவளுக்குச் சற்று உதவி புரிந்தான்.

சந்:–லல்லி, நேற்று போனாரே சேகர், போகிற வேகத்தில் தம் பதவியையும் ராஜினாமாச் செய்துவிட்டுப் போய்விட்டாராம். எங்கே என்றே தெரியவில்லையாம். டைரெக்டர் வந்திருக்கிறார். என்னை வேறு வரச்சொல்லியிருக்கிறாராம். இப்போதுதான் 'பியூன்' வந்துபோனான்.

லல்:—(தனக்குள்) சேகர்! (வாய்விட்டு) அத்தான், தங்களிடம் ஒன்றிய இதுவரை ஒருபோதும் தவறியதில்லை! தவறவும் மாட்டேன். அத்தான், என்னை மன்னித்ததாக ஒருவார்த்தை சொல்லுங்கள் அத்தான்! (சந்திரனின் காலைப் பிடித்துக்கொண்டு விம்மி விம்மி அழுகிறாள்)

சந்:—லல்லி, அழாதே. கடந்துபோனதை நினைத்துக் கலங்காதே. பெருக்கெடுத்தோடிவரும் உன் கலங்கிய கண்ணீர்ப்பெருக்கில் மூழ்கடித்து என்னைப் பைத்தியமாக்கிச் சாகடித்துவிடாதே! அமைதியாயிரு கண்ணே!

லல்:—இல்லையத்தான், இதை நீங்கள் கேட்கத்தான் வேண்டும்...

சந்:—(தன் கரங்களால் அவள் வாயைப் பொத்தி) கண்ணே, எனக்கொன்றும் அதெல்லாம் தெரியவேண்டியதில்லை. நீ சொல்லவும் வேண்டாம். பழைய குப்பையைக் கிளறாதே. என் மாணிக்கமே! அமைதியாயிரு.

லல்:—(தன் வாயைப் பொத்தியிருக்குமவன் கரங்களை அகற்றி) இல்லையத்தான். நான் இனி அதை என்னுள் வைத்திருக்கமுடியாது! உங்களிடம் சொன்னால்தான் என் மனச்சுமை கழியும். மனச்சுமை இருக்கும் வரையில் அமைதியை எப்படி அடைய முடியும்? நீங்கள் இதைக் கேட்கத்தான் வேண்டும். அத்தான், நம் கலியாணத்திற்கு முன் ராமுவும், அதுதான் சேகரின் பழைய பெயர்; ராமுவும் நானும் காவியக் காதலர்களாகத்தான் இருந்தோம். ஆனால் சுழலும் உலகின் கால வேகம் எங்களைப் பிரித்தது. எப்படியோ மதியோடு என்னை ஒன்றச் செய்து ஒழுக்கக் குன்றில் ஏற்றிய விளக்காக்கியது. அத்தான், இரவு கண்ட கனவும் இதைச் சார்ந்ததே. ராமு ஏதோ நிழலுருவம்போல் வந்து, நான் அவரை வஞ்சித்ததாகக் கூறி, அதற்கு என்னைப் பழி வாங்கப் போவதாகவும் கூறி என்னை மிரட்டவே நான் அலறிவிட்டேன். ஆனால் அத்தான், ராமு அப்படிப் பட்டவரல்ல. என் எண்ணங்களே அப்படி உருவெடுத்துக் கனவில் வந்து நடனமாடின. இயற்கை செய்யும் கோளாறில் வாழ்க்கையில் தவறுவது இயல்பு. அதை நினைத்து வருந்தாது தவறியது தப்பு என்று உணர்ந்து பின் சீலத்துடன் வாழ்வதே மனித மேன்மை' என்று ராமுவே ஒருமுறை கூறியிருக்கிறார். அத்தான், நம் வாழ்க்கையில் இம்மாதிரி நிழலுருவம் இனி நடமாடப்போவதில்லை! ஏனத்தான் மௌனமாயிருக்கிறீர்கள்? எனக்கு மன்னிப்பே கிடையாதா!...

சந்:—லல்லி, ராமுவை மறந்து, உன் தவறை உணர்ந்து, என்னோடு என்று ஒன்றிவிட்டாயோ அன்றே—அப்போதே மன்னித்து விட்டேன். இனி நிழலுருவம் நம் கண்களில் காணப்போவதில்லை, என் உருவத்தை விடாது தொடர்ந்து ஒன்றிவரும் நிழல் நீ! லல்லி, டைரெக்டரைக் கண்டு சின்னாழிகையில் திரும்பி வருகிறேன். வரட்டுமா?...

லல்:—உம். சீக்கிரம் வந்துவிடுங்கள். நீங்கள் வந்த பிறகு தான் நான் அடுக்களை ஆபீசுக்குப் போகப்போகிறேன்.

மகிழ்ச்சியான சேதியுடன் சின்னாழிகையில் திரும்பினான் சந்திரன். தாதொழுகும் புது மலரன்ன பொலிந்தாள் லல்லி. மலரைச் சுற்றி இசை பாடும் வண்டெனத் திகழ்ந்தான் சந்திரன்.

லல்:—அத்தான், அதற்குள்ளாகவா டைரெக்டரைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டீர்கள்?

சந்:—ஆம். ஆனந்தமான சேதியை ஈந்தார் டைரெக்டர். அதை உன்னிடம் சொல்ல அவ்வளவு சீக்கிரமாய் ஓடோடியும் வந்தேன்.

லல்:—என்னத்தான் அப்படிப்பட்ட ஆனந்தமான சேதி?

சந்:—ராஜினாமாச் செய்துவிட்டாரே சேகர்; அந்தப்பதவி. நான் இன்றுமுதல் மானேஜர்! (என்றதும் அவளுக்கு ஒருபுறம் அதிர்ச்சி, மற்றொரு புறம் மகிழ்ச்சி. அதிர்ச்சியை அமுக்கி விட்டு மேல் கிளம்பியது மகிழ்ச்சி.)

லல்:—அத்......தான்!!

சந்:—லல்......லி!!

அவளுக்கு ஒரே குதூகலம். அவனுக்குச் சொல்லவா வேணும். அவர்கள் வாழ்வின் இடையில் உலவிவந்த நிழலுருவம் எங்கோ மாயமாய் ஓடி மறைந்தது. இனி அது தோன்றப் போவதில்லை!—தோன்றவும் முடியாது!

உலகம் அழிந்ததே!

★ இளம்பாரதி ★

1. அதோஓ பாரடா வான்முகட்டில்—ஒளி
அள்ளி வீசுறாள் நல்லழகி;
அதோஓ பாரடா மீனினங்கள்—அவள்
அணைப்பில் மகிழ்ச்சியைக் கொட்டுதங்கே!

2. முகிலாம் போர்வையில் நாணமுடன்—மதி
முகத்தை மறைப்பதைக் காண்கையிலே
துகிலால் தன்முகம் போர்த்திடுவாள்—அந்தச்
சுந்தரி நினைவெனை வாட்டுதடா.

3. வட்ட வரைமுகம் கொண்டவளாம்—அவள்
மாண்பின் உயர்வினைச் சொல்வதுபோல்
நட்ட நடுநிசி நேரத்திலே—மதி
நல்லெழில் கொள்கிறாள் வானத்திலே.

4. வானில் மின்னிடும் தாரகையும்—அவள்
வண்ணக் கண்ணொளி செய்தது போல்
மோனம் கலைக்கிறாள்; அப்பணியால்—எனை
மோகக் கனவினில் ஆழ்த்துகின்றாள்.

5. கவிதை புனைகிறாள் நெஞ்சினிலே—அந்தக்
கவிதை இலக்கிய உச்சமடா!
கவிதை படித்திட நேர்கையிலே—மனம்
கசிந்து நெகிழ்வினால் விம்முதடா!

6. விம்மி யழுகிறேன் வாழ்வினிலே;—அந்த
விம்மல் ஒலியினைக் கேட்பதற்கும்,
தம்பி, அருகினில் இல்லையடா;—அவள்
சாவின் கருத்துரை ஆகிவிட்டாள்.

7. என்னைப் பிரிந்துமே இத்தனைநாள்—அவள்
எங்கே நிலைத்தனள்? நானறியேன்!
என்னை அணைந்தவள் என்னுயிராள்—இனி
யாரை அணைவளோ அவ்வுலகில்!

8. கனவு நிலையென ஆச்சுதடா—அந்தக்
கன்னி யுறவினி வாழ்க்கையிலே
மனத்தில் அவளெழில் ஆட்டமெலாம்—இனி
வம்புக் கதையென மாறிடுமோ?

9. உலகு பேதைமை பேசிடலாம்;—எனை
உற்று நகைபல செய்திடலாம்
உலகைக் கடந்தவள் வாழ்வதனால்—இனி
உலகம் அழிந்ததே என்வகையில்.

வாசகர்களுக்கு ஓர் நற்செய்தி

ஸ்ரீ எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எழுதிய

அமரத்வம்

என்ற நவீன சமூகச் சித்திரம் அடுத்த (ஐப்பசி) இதழிலிருந்து ஆரம்பமாகிறது.

முன்னதாகவே பிரதிக்கு உங்களூர் ஏஜண்டிடம் பெயரைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலம்

ஸி. பி. பி. எஸ்.

(1—10—54 அக்டோபர் 31—10—54 முடிய)

1. மேஷ ராசி

(அசுவதி, பரணி, கார்த்திகை, 1-ஆங்கால்)

யோககாரகர்கள் இருவரும் நவாம்ச இயக்கத்தில் பகை வீட்டில் காணப்படுவதால் வெளிப் பார்வையில் குறைகள் ஒன்றும் நேராதென்றாலும் மன அமைதி யென்பது மட்டும் ஏற்படுவதற்கில்லை. இராசிக்கதிபதி குஜன் வர்க்கோத்தமம் பெற்றதால் நாணயம். கௌரவம், புகழ் கீர்த்தி என்ற அம்சங்கள் நன்றாகவே இருந்துவரும். 6, 7, 10–க்குடையவர்கள் கேந்திரத்தில் ஒன்று கூடுவதால் பலவிதச் சிக்கல்கள், பெற்றோர்களின் உடல் நல ஆரோக்கியம், புத்திரர்களின் அந்தஸ்து; தொழிலில் உயர்வு காண்பது, என்ற நலன்களில் குறையொன்றும் காணவில்லை. வீடு, நிலம், கார், விவசாயிகளானல் கால்நடைகள் ஆகியவற்றில் திருப்திகரமே நிலவும். பொதுவாக இனி எத்துறையிலும் முன்னேற்றமே காணப்படும். மாணவர்களுக்குக் கல்வியில் நல்ல ஊக்கம் ஏற்படும். மாதப் பிற்பகுதியில் எத்துறையிலும் நிதானம் தேவை.

2. ரிஷப ராசி

(க்ருத்திகை, 2, 3, 4, ரோஹிணி. மிருகசீரிஷம் 1, 2, ஆங்கால்)

யோககாரகர். இராசி, அம்சம் இரண்டிலும், ஆட்சி, உச்சம் என்ற ரீதியில் சஞ்சரிப்பதால், தொடர்ந்து வந்த இன்னல்கள் மறைவதும், சத்துருக்களின் தொல்லை நீங்குவதும், புதிய நண்பர்களின் சந்திப்பும். பொருளாதாரம் திருப்திகரமாகவே இருந்துவரும்; அடிக்கடி பிரயாணங்கள் நிகழும். இம்மாதப்பிற்பகுதியில் யோகாரகர் அஸ்தமனமாவதால் சகல துறையிலும் உஷார் தேவைப்படும். வீடு, நிலம், கார், கால்நடைகள் நண்பர்களின் கூட்டுறவு, கொள்முதல் ஆகிய அம்சங்களில் சிறு கிலேசம் நிகழக்கூடும். தேகாரோக்கியத்தை நன்கு பராமரிக்க வேண்டும். வம்பு வழக்குகளில் ஈடுபடுதல் கூடாது.

3. மிதுன ராசி.

(மிருகசீர்ஷம். 3, 4. ஆருத்ரா, புனர்வசு. 1. 2, 3– ஆங்கால்)

இராசிக்கதிபதி யோககாரகர் வீட்டில் ஸஞ்சரிப்பதால் நாணயம், கௌரவம், தொழில் உயர்வு, வீட்டில் சுபகர செலவினங்கள். குழந்தைகளின் உற்சாகம், பொருளாதாரம், ஆகியவற்றில் பூர்ண திருப்தி நிலவும் மாதமாகும். கடன், ரோகம் சத்துருக்களின் உபத்திரவம், வழக்கு வியாஜ்ஜியம் ஆகியவற்றால் இனி தொல்லைகள் ஏற்படுவதற்கில்லை. மாத முற்பகுதியில் போட்டியினங்களில் கலந்துகொள்ளலாம். அரசாங்க சபைகளில் நியமனமும் ஆகும். மாதப் பிற்பகுதியில் குழந்தைகளின் தேக நலம் பாதிக்கப்படும். இட மாற்றமும் பிரயாணமும் ஏற்படும். விவசாயிகளுக்கு: கால்நடைகளால் குறிப்பாகக் கறவை, மீசுர பலன் ஏற்படும்.

4. கடக ராசி

(புனர்வசு 4, புஷ்யம், ஆயில்யம்)

இராசிக்கதிபதி சந்திரன். மாதமுற்பகுதியில் ஆரோஹணத்தில் வளர்மதியாகச் சஞ்சரித்து வருவதாலும், யோககாரகர் உச்சத்தில் காணப்படுவதாலும், தொழிலில் ப்ரமோஷன், வாக்கு மேன்மை, தன ப்ராப்தம், வீடு, நிலம், கார், ஆபரணம் முதலிய அம்சங்களை நல்ல முறையில் மாற்றியமைத்தல், முற்போக்குச் சக்திகளில் வெற்றி காண்பது. செயலாற்றும் பணிக்குப் பாராட்டுதலும் நிகழும்: ஒரு சிலருக்கு டிபார்ட்மெண்டே மாறுதல் ஆகும். மாதப் பிற்பகுதியில் சரீர சுகத்தில் கூட்டுறவில், கவனம் தேவைப் படும், குழந்தைகளின் க்ஷேமாபிவிருத்தியில் கண்காணிப்பு அதிகம் தேவை. மற்ற வகை அம்சங்கள் யாவுமே இனி நல்ல விதமாகவே இருந்து வரும். 2, 10, சூக்ஷ்ம பரிவர்த்தனம். 11, 12, ஒன்று கூடுவது என்ற நிலை எவ்விதக் கஷ்டத்தையும் சிதற அடிக்கும். சனி அஸ்தமனமாவதால் ஒரு சிலருக்குச் சகோதர கிலேசம் ஏற்படும்.

யோககாரகரும், இலக்னதிபதியும் 6, 8 ஆக இருப்பதால் மனச்சஞ்சலம் ஏற்படும்,

5. சிம்ம ராசி.

(மகம், பூரம், உத்ரம், 1-ஆங்கால்)

யோககாரகர்கள் நல்ல நிலைமையில் சஞ்சரிப்பதால், முரண்பாடுகள் நீங்கும். நாணயம், கௌரவம் புகழ் ஓங்கும். மாத முற்பகுதியில் மட்டும், சரீரத்தில் கவனம் தேவைப்படும். தொழில் துறையில் நல்ல ஆதாயம், உண்டு. மாதப் பிற்

பகுதியில் இராசிக்கதிபதி நீசமாகக் காணப் பட்டாலும், பாக்யாதிபதி குஜன் வலுத்திருப்ப தால் எவ்வித எதிர்ப்புகளும் மேலோங்க இட மில்லையென்பதாயிற்று. வீடு, நிலம், கார் ஆகிய அம்சங்களில் நல்லதொரு மாற்றம் நிகழும்- முக்யமான ப்ரயாணம் ஏற்படும். நண்பர்களின் சந்திப்பினுல் முயற்சிகள் பலிதமாகும். மாணவ மாணவிகளுக்குக் கல்வியில் நல்ல உற்சாகம் ஏற் படும். ஹேஷ்ய பூர்வமான போட்டியினங்களில் ஓர் வரம்புக்குள்ளாகவே ஈடுபடலாம்.

6. கன்யாராசி

உத்திரம், 2, 3, 4, அஸ்தம், சித்திரை. 1, 2, ஆங்கால்

யோககாரகர்கள் ஒன்று கூடியும் சுபரான சனி யும் உச்சத்தில் காணப்படுவதால் இராஜ யோக அம்சத்தின் அனுபவம் உண்டாகக் கூடும். தொழில் உயர்வு. பதவியில் பாராட்டு, கீர்த்தி ஓங்குதல், முயற்சிகளில் வெற்றி காண்பது, உயர்தர அதிகாரிகளின் சந்திப்பும், இந்த ராசிக் காரர்களுக்கு,சனி அஸ்தமனமாவதும் ஒருநன்மை தான். மாதப் பிற்பகுதியில் மட்டும் சரீர சுகம் பாதிக்கப்படும். மனைவியின் தேகாரோக்கியமும் கெடும். இனி, வீடு, நிலம், கார், நண்பர்கள் இதன் மூலம் நல்லதொரு பலனையே அடையக் கூடும். பொருளாதாரம் திருப்திகரம். நண்பர் களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கப் பெறு வீர்கள். வாழ்க்கையில் புதிய உற்சாகம் தோன்றும்.

7. துலா ராசி.

(சித்திரை, 3, 4 ஸ்வாதி, விசாகம் 1, 2, 3 ஆங்கால்)

சூரியன் 12 ல் காணப்பட்டாலும் யோககாரகர் தமது உச்ச வீட்டைநோக்கிச் செல்வதால், கௌ ரவம், நாணயப் பெருக்கம், நண்பர்களின் பரஸ் பர உதவி, தொழில் துறையில் முன்னேற்றம், வீடு, நிலம், கார், விவசாயிகளானுல் கால்நடை கள் ஆகிய அம்சங்களில் குறையொன்றும் காண மாட்டீர்கள். குடும்பத்தில் அதிகப்பற்று என்ற அளவில் செலவினங்கள் நிகழக்கூடும். என்றுலும் பாதிக்கப்படமாட்டீர்கள். மனைவி, குழந்தைகள் ஆகியவர்களின் க்ஷேமாபிவிர்த்தியில் சிரத்தை கொள்ள நேரும். அரசியலில் ஈடுபாட்டில் புகழ் உண்டாகும். தனுதிபரின் உச்சம் பணமுடை யைத் தவிர்க்கும். எந்த வகையிலும் பாதிக்கும் அளவிற்குக் குறைகளொன்றும் இம்மாதத்தில் ஏற்படாது.

8. விர்ச்சிக ராசி

(விசாகம் 4. அனுஷம், கேட்டை)

இராசிக்கதிபதியின் உச்சத்திஞல் இனி எந்த வித அச்சமும் தேவையில்லை. பகைவர்கள் உற வாடுதல் வீடு, நிலம், சேர்க்கை முயற்சிகள் உடன் பலிதமும் விஞ்ஞானத்தில் தொடர்புள்ள வர்களுக்கு நல்ல தேர்ச்சியும், தீவாந்தரம் செல் லுதல் தொழில் துறையில் மேன்மையும். செல் வாக்கு, நாணயம், கௌரவம் புகழ், கீர்த்தி, ஆகிய அம்சங்களில் உயர்வு காண்பீர்கள். மாதப் பிற்பகுதியில் மட்டும் எத்துறையிலும் சற்று நிதானம்தேவை. முரண்பாடுகள் சிக்கல்கள் இனி தோன்றுவதற்கில்லை. பாக்ய ஸ்தானத்தில் சஞ் சரிக்கும் குரு பலவித நன்மைகளைத் தருவதில் இனி தயக்கம் இராது. ஹேஷ்ய பூர்வமான போட்டியினங்களில் ஈடுபட இன்னும் சில வாரங்கள் செல்லவேண்டும். மாற்றமான நகர், தொழில், கருவுற்ற மனையாள் இதன் மூலம் கிலேசங்கள்நீங்கும்.

9 தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்ராடம், 1-ஆங்கால்)

I வாரம்.

முதல் 3 நாட்களில் சந்திரன் 12-ல் காணப் படுவதால் குடும்பத்தில் மன அமைதி குறையும். சிறு சச்சரவுகள் நிகழும் என்றுலும், சுபரான குஜன் வலுத்திருப்பதால் கெடுதல்கள் மேலோங் குவதற்கில்லை. ப்ரயாணத்தில் தாமத வெற்றி. புதிய முயற்சிகளில் ஈடுபடுதல் ஒரு சிலர் தீவாந் தர ப்ரயாணம் ஏற்க நேரும். விஞ்ஞானிகளாய் இருப்பின் நூதன முயற்சியில் வெற்றி காண்ப தும், அடுத்திரண்டு நாட்களில் பணமுடை, சரீர சுகக்குறைவும், தீவிர ப்ரயாசைகளை மேற் கொண்டும் மனக்குழப்பம் நீங்குவதற்கில்லை. இதற்குக் காரணம், 1, 8 ஸ்தானுதிபர்கள் 6, 8 ஆக ஸஞ்சரிப்பதேயாகும். வாரக் கடைசியில் 8, 12 ஸ்தானுதிபர்கள் ஒன்று கூடுவதால் தன ப்ராப்தம், வாக்கு மேன்மை, சோதர சோதரி களின் வரவும் நிகழக்கூடும். பொதுவாகவே இந்த வாரத்தில், 10, 11-ஆம் ஸ்தானுதிபர்கள் ஒன்றுகூடியே ஸஞ்சரிப்பதால், அதிகாரிகளின் அபிமானம், முரண்பாடுகள் நீங்குதல், எதிர் பாராத தனவரவும், இவ்வளவு ஆராய்ச்சி செய் தும் நவாம்ச இயக்கத்தில் யோககாரகர்கள், 6, 8- ஆக இருப்பதால் பூர்ண மனத்ருப்தி சொல்வதற் கில்லை.

II வாரம்.

முதல் 3 நாட்களில் ஸ்திரீகளால் நன்மை. காரிய வெற்றியும் சுபகாரியங்களில் ஈடுபடுதல், வேண்டிய அளவிற்கே தனப்ராப்தமும். செய லாற்றும் பணிக்குப் பாராட்டுதல், 11, 12 தேதி களில் ப்ரயாணம். செய்தொழில் மேன்மை, தைர்யம், வாக்கு மேன்மை, வியாபாரிகளாய் இருப்பின் வெகு லாபம் அடைதல், இலாவா தேவியில் சிறு இடைஞ்சல்கள் தோன்றி மறை யும். 13, 14 தேதிகளில் வீடு, நிலம், கார், விவ சாயிகளானுல் கால்நடைகள் ஆகியவற்ருல் சிறு

கிலேசங்கள், மன ஆயாசம் பலவித இடைஞ்சல்,
கள், ப்ரயாணத்தில் இடையூறுகள், மறைமுக
சத்துருக்களின் தொல்லை, சரீர சுகக் கெடுதியும்,
பொருள்கள் வெளியேற்றமும், நிகழக் கூடும்.
எதிர்ப்புச்சக்திகளின் ஆர்வாரம் ஓங்கிநிற்குமென்
ருலும் எந்த விதத்தாலும் பாதிக்கப்படமாட்டீர்
களென்பது நிச்சயம். காரணம், குஜன், சனி,
வலுத்ததேயாகும்.

III வாரம்:

முதல் 2 நாள், செய்தொழில் மேன்மை, ஸ்திரீ
களால் செலவினங்கள், கம்பெனித் தொடர்பில்
திரவிய லாபம், வீடு, நிலம், கார், ஆகிய அம்சங்
களில் திருப்திகரமான போக்கும் அடுத்த
இரண்டு நாட்களில் எதிரிகள் வசப்படுதல், பட்
டம், பதவி பெறுதல், நாணய மேன்மை, ப்ரசா
ரம். ப்ரசுரம், காவியம், ஓவியம், எழுத்தாளர்
ஆகிய இது தொடர்புள்ளவர்களுக்கு நல்ல ஆதா
யமும் ஏற்படக்கூடும். இப்படியான சந்தர்ப்பத்
தில் பொறுமை வேண்டும். 5, 9-ஆம் ஸ்தானுதி
பர்கள் சூக்ஷ்ம பரிவர்த்தனத்தில் காணப்படுவ
தால், புத்திரர்களின் வித்யாபிவிர்த்தியில் உயர்வு
காணும். சு, சந், 6, 8 ஆக இருப்பதால் உணர்ச்சி
வசமான ஸ்த்ரீகளின் தகராறுகள் தலைகாட்டக்
கூடும்.

IV வாரம்,

முதல் இரண்டு நாட்களில் புதன் வர்க்கோத்த
மத்தில் காணப்படுவதால் எதிரிகள் மறைதல்,
மனைவியின் சுகபோகங்கள், அவ்வழி சார்ந்தோ
ரின் உதவிகளும் பெறக்கூடும். வாக்கு, நாணயம்,
கௌரவம் என்ற அம்சங்கள் உயரக்கூடும்.
ஹேஷ்ய பூர்வமான போட்டியினங்களில் ஒரு சில
ருக்கு வெற்றியும் ஏற்படும். ப்ரயாணம் மட்டும்
தடைபடும். 23.24,25 இந்தத்தேதிகளில் மேலதி
காரிகளால், பாராட்டப்படுதல் முயற்சிகள் பலி
தம், சன்மானங்கள் கிடைத்தல், பதவி உயர்வாகு
தல், வியாபாரிகளுக்கு நல்ல முறையில் பலிதங்
கள் ஏற்படும். தாய்மாமன் உதவிகளால் ஒரு
சிலர் முன்னேறக்கூடும். நூதன ஆடையாபரணச்
சேர்க்கையும், 26,27,28 இந்தத் தேதிகளில் நண்
பர்களின் சந்திப்பும், சிறு காயம் படுதல்; தன
லாபம், சொந்த ஊர் திரும்புதல், கீர்த்தி பரவு
தல்.

10. மகர ராசி.

(உத்ராடம், 2, 3, 4. சிரவணம், அவிட்டம்.
1, 2-ஆங்கால்)

I வாரம்

முதல் இரண்டு நாட்களில். சு. பு ஒன்று
கூடியே சஞ்சரிப்பதால் இருண்ட வானில் தோன்
றும் மின்னலொளிபோல் ஓர் அதிர்ஷ்டம் வீசக்
கூடும். அடுத்திரண்டு நாட்களில் வியா–சந் 6. 8
ஆகப் பரிவர்த்தனத்தில் காணப்படுவதால் ஸ்திரீ
களின் சச்சரவை மேற்கொள்ள நேரும்; 6, 8
ஆக–இருந்த வி. குஜன் மாறினதால் வாரக்
கடைசியில் இவர்களது கௌரவம், நாணயம்,
ஹேஷ்யபூர்வமான இனங்கள் அல்லது அரசாங்க
தேர்தல் ஆகிய அம்சங்களில் வெற்றியும் ஏற்
படக்கூடும். 4, 5. தேதிகளில் மட்டும் இந்த
ராசிக்காரர்கள் தீர ஆலோசனையின்றி எத்துறை
யிலும் ப்ரவேசிக்கக் கூடாது.

II வாரம்

முதல் 3 நாட்களில் மீறின செலவினங்கள்.
மனதில் குழப்பத்தை ஏற்படுத்திக்கொள்ளுதல்.
அடுத்திரண்டு நாட்களில், காரிய வெற்றி.
பாராட்டப்படுதல், பொதுமக்களின் அபிமானம்
பெறுதல்; நண்பர்களின் சந்திப்பும். ஸ்திரீகளால்
நன்மையும், வீடு, நிலம், கார் விவசாயிகளானல்
கால்நடைகள் இத்யாதி அம்சங்களில் நல்லதொரு
போக்கும், உத்தியோகஸ்தர்களானல் பதவி உய
ருதல் இடம் மாறுதலும். வியாபாரிகளுக்குச்
செந்நிற வஸ்துக்களால் இலாபமும் ஏற்படக்
கூடும். மாணவ மாணவிகள் கல்வியில் வெகு
உற்சாகம் ஏற்படக்கூடும். கடைசி 2 நாட்களில்
சரீரநலம் பாதிக்கப்படுதல், உயர்தர அதிகாரி
களின் சந்திப்பு. அன்னிய மதத்தினரின் உதவி
யும் ஏற்படக்கூடும்.

III வாரம்

இராசிக்கதிபதி இவ்வாரத்தில் அஸ்தமன
மாவதால் மீசுர பலன்களை எழுத இயலவில்லை;
எத்துறையிலும் ஒரு மந்தமான சூழ்நிலையே
தென்படும். முக்யமான ப்ரயாணங்களை ஏற்க
நேர்வதில் கவனம் தேவைப்படும். சரீர சுகத்தை
நன்கு பராமரித்தல் அவசியம். அடுத்திரண்டு
நாட்களில் மனைவியின் தேகாரோக்கியம் கெடு
தல், மனதுக்கிசைந்த தகவல்கள் கிடைக்கப்
பெருமை முதலிய அம்சங்களால் மன்ச்சாந்தி
ஏற்படாமையும்; கடைசி இரண்டு நாட்களில்
மாதர்களின் ஏக போக வாஞ்சனை, தனவிரயம்.
புதிய வாகன சவாரி ஹேஷ்யபூர்வமான போட்டி
களில் வெற்றி காணுத அம்சங்களும் நிகழக்
கூடும். குடும்பத்தில் மன அமைதி என்பது
ஏற்படாது. பொருளாதாரம் எப்படியாவது
சரிக்கட்டி வரும்.

IV வாரம்

முதல் மூன்று நாட்களும் சந்திராஷ்டம
தினங்களாதலால் ஆறுதல் தேவைப்படும்.
குஜன். சந். 6. 8. ஆகக் காணப்படுவதால் பலவித
சச்சரவுகள் குடும்பத்தில் நிகழும் ப்ரயாணத்
தைத் தவிர்ப்பது நலம். அனுவசிய காரியங்களில்
தலையிட நேரும். உத்தியோகஸ்தர்களாயின்
தனக்கு மேலிருப்பவர்களுடன் பழகுவதில்

நிதானம் தேவை. சோதர சோதரிகளின் மனத் தாங்கல் வெகுவாய் ஏற்படக்கூடும். பாதிக்கப் படமாட்டீர்கள். வீடு, நிலம், கார், கால்நடைகள், தாய், உடல் நலம், கல்வி, தொழில், ஆகிய அம்சங்களில் அந்தஸ்துக்குத் தக்க அளவில் பூர்ண பலன் காண இன்னும் சில வாரங்கள் செல்லவேண்டும். 23, 24. 25 தேதிகள் தொந்தரவான நாட்களாகும். புதிய முயற்சிகளில் ஈடுபடுதல், கூட்டுறவில், ஸ்திரீகள் தொடர்பில், ஆகியவற்றால் சிறு கிலேசங்கள் ஏற்படக்கூடும். 26, 27, 28. தேதிகளில், சன்மானம், தூரதேசச் செய்திகள் கிடைத்தல். மனதில் குதூகலம் ஓங்குதல், தந்தைக்கு மட்டும் தேக நலம் பெரிதும் பாதிக்கப்படக்கூடும். சொந்த ஊர்திரும்புதலும். ஞாபகசக்தியில் கவனம் தேவை. 29, 30, 31. தேதிகளில் ப்ரபுக்களின் சந்திப்பில் ஏமாற்றம். பொருள் சேர்க்கை, சுபகார்யங்களில் தடை காணுதல், எதிலும் தாமத வெற்றி.

11. கும்ப ராசி

(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆங்கால்)

I வாரம்

முதல் இரண்டு நாட்களில் இராஜயோகத்தின் அம்சம் வெகுவாய் அனுபவமாகக்கூடும். முயற்சிகள் பலிதம், எதிர்பாராத திரவிய லாபம். ப்ரயாணத்தில் காரிய வெற்றியும் தொழில் வகையில் முன்னேற்றம் கணக்கு வகையராக்களில் சிறு மனஸ்தாபங்கள் எழக்கூடும். 2, 11–ஆம் ஸ்தானாதிபதி, 6-க்குடைய சந்திரன் இருவரும் பரிவர்த்தனத்தில் 6, 8 ஆகக் காணப்படுவதால் பொதுஜன சேவை அல்லது அரசாங்க விவகாரங்கள் ஆகியவற்றின் மூலம் அதிகமான பணச் செலவுகளை ஏற்க நேரும். இப்படி நிகழும் நேரத்தில் சூரியன் 8–லிருந்து சுக்ரனை நோக்குவதால் கடைசி 2-நாட்களில் நண்பர்களின் துரோகச் செயலினால் பிளவுகள் நிகழக்கூடும். வீடு, நிலம், கார், இதன் மூலம் ஏற்பட்ட சிக்கல்கள் இனி அடியோடு மறைந்து போகும். இருக்கும் பொருள்களில் ஏதேனுமொன்றைக் கிரயம் செய்யக்கூடும். யோககாரகர் வர்க்கோத்தமத்தில் இருப்பதால் எவ்வித இடைஞ்சலையும் சுதாரித்துக்கொள்ள முடியும்.

II வாரம்

நவாம்ச இயக்கத்தில் (செ-கு) (பு-கு) (சனி-வி) (சு-சனி) 6, 8–ஆகச் சஞ்சரிப்பதின் போக்கு பலவிதக் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடும். எதிர்காலத்தின் போக்கு என்ன ஆகும் என்பதொரு சந்தேகம் மனதில் வெகு வேகமாக ஊசலாடக்கூடும். உச்சம்பெற்ற கிரஹங்கள் மூவரும் . தங்களுக்குள் கேந்திரமாகச் சஞ்சரிப்பதால் களங்கத்தில் உந்தமாட்டார். இனி இவர்களது முன்னேற்றப் பாதையில் எந்த விதமான தடைகளும் காணப்படாது.

12, 13, 14 இந்தத் தேதிகளில் தன லாபம் செய் தொழில் மேன்மை, மேலதிகாரிகளால் பாராட்டப்படுதல், வழக்கு வியாஜ்யங்களில் வெற்றியும், சரீர சுகம் சற்றுக் குறைந்து காணப்படுவதுமாகும். மற்ற அம்சங்களில் திருப்திகரமே காணப்படுகின்றது.

III வாரம்

முதல் 2 நாட்களில் சரீர சுகக் குறைவும் மீறின செலவினங்கள் வாகன முடக்கமும் பிரயாணத்தில் இடையூறுகள் புருஷன் மனைவி என்ற உறவில் சிறு பிளவுகள், குடும்பத்தில் மன அமைதி குறைதல், எதிர்பார்க்கும் இனங்களில் ஏமாற்றம். இந்த நிலை 18-ஆம் தேதி வரையில் நீடிக்கக்கூடும். தொழிலில் கவனம் வேண்டும். உத்தியோகஸ்தர்களாயின் திட்டத்திற்கு முன் ஆழ்ந்த ஆராய்ச்சி தேவை. (தந்தை மகன்) என்ற உறவிற்குப் பங்கம் ஏற்படுத்திக்கொள்ளும் சூழ்நிலையைக் கூடுமான வரையில் தவிர்ப்பது நலம். அடுத்திரண்டு நாட்களில் வி-சங் ஒன்று கூடிக் காணப்படுவதால் எத்துறையிலும் கெடுதல் சொல்வதற்கில்லை. தனப் பிராப்தமான நாட்களாகும்.

IV வாரம்.

முதல் 2 நாட்களில், செ, சங், 6, 8-ஆகச் சஞ்சரிப்பதால், கிரய விக்ரயம் அல்லது கொள்முதல் வியாபாரத்தில் கவனம் தேவைப்படும். வெளியிடத்துத் தகவல்களினால் மனம் குழப்பம் அடையக் கூடும். குழந்தைகளின் தேக நலம் குறைந்து காணக்கூடும். ஸ்திரீகளின் மூலம் சிறு கிலேசங்கள் நிகழக்கூடும். பொருளாதாரத்தில் கவனம் தேவை, சோரம் ஏற்படாதவாறு முன்னெச்சரிக்கையாய் இருப்பது நலம். 23, 24, 25 தேதிகளில் புதனுடன் கூடின சந்திராஷ்டமானதால் கெடுதல்கள் ஏற்படா. தனப்ராப்தமான நாட்களாகும். 26, 27, 28 இந்தத் தேதிகளில் 1, 6, 7, இம் மூவரும் ஒன்று கூடுவதால் தாயின் தேக நலம் பாதிக்கப்படும். தொழில் துறையில் மந்தம் ஏற்படும். பொருள் விரயமாகும். ஏதேனுமொன்றை நஷ்டமாக்கிக் கிரயம் செய்ய நேரும். கடைசி 3 நாட்களில் எதிர் பார்த்த தன வரவும், தொழில் துறையில் முன்னேற்றமும் காணும்.

12 மீன ராசி

(பூரட்டாதி 4, உத்ரட்டாதி, ரேவதி)

I வாரம்.

முதல் 3 நாட்களில் சுபரான சந்திரன், நீச்சத்தில் காணப்பட்டாலும், இலக்னதிபரின் பார்வை

யால், இன்னல்கள் யாவும் மின்னல்போல் மறையும். அடுத்திரண்டு நாட்களில். பதவீ, வேலை பார்க்கும் இலாகா. வசிக்கும் நகர் ஆகிய அம்சங்களின் நல்ல வகையில் புதியதொரு மாற்றம் நிகழும். ஊதிய உயர்வு, மேலோர்கள் அபிமானம், ப்ரசாரம், ப்ரசுரம், சங்கீதம், காவிய ஓவியம், எழுத்துவகை ஆகிய தொடர்புள்ளவர்களுக்கு அத்ருஷ்டம் ப்ரமாதமாகவே இருந்துவரும். வாரக் கடைசியில் ப்ரயாணம், ஹேஷ்ய பூர்வமான போட்டியினங்கள், பொதுத் தேர்தல் ஆகியவற்றில் தீவிரமான வெற்றியை அடையக் கூடும். ஏன்? ஒரு சிலர் மாகாண ஆட்சியிலும் உயர் பதவி யடையக்கூடும்.

II-வாரம் சூ, . சங், 6, 8, ஆகச் சஞ்சரிப்பதால் முயலும் காரியங்களில் சில எதிர்ப்புச் சக்திகளின் ஆரவாரம் மேலோங்கும். மனதில் ஆயாசம், சொற்ப விபத்துக்கள், தொழில் துறையில் மன அமைதி குறைதல், குழந்தைகளின் தேக நலம் பாதிக்கப்படுதல் முதலிய அம்சங்களால் சிறு கிலேசங்களை ஏற்க நேரிடும். பாதிக்கப்பட மாட்டீர்கள் என்பது நிச்சயம். காரணம், யோககாரகர்களின் உச்சமேயாகும். 10, 11, 12 தேதிகளில் பலவிதமான பாக்கியங்கள் உங்களை நாடி வருவதில் தயக்கமே இராது. அரசாங்கத்தில் புகழ், எதர்பார்த்த தனம் வரவு, ஸ்திரீகளால் நன்மை, தொழில் துறையில் மேன்மை, நூதன வஸ்துக்கள் சன்மானமாகப் பெறுதல் போன்ற அம்சங்கள் நிகழும். ஒரு சிலரின் மனைவிமார்களுக்குக் குழந்தையை ஈன்றெடுக்கும் தேதிகளாகும். வாரக் கடைசியில் எக்காரியத்திலும் தடை, தன ஹானி, அபகீர்த்தி, மன ஆயாசம் தரும் நிலைமையில் சந்திரன் சஞ்சரித்தாலும், யோககாரகரின் பார்வையைப் பெற்றதால் மீசுர கெடுதல்கள் ஏற்படுவதற்கில்லை.

III வாரம்.

புதன், சங், 6, 8 ஆகக் காணப்படுவதால் குடும்பத் தகராறுகள் தலைகாட்டக் கூடும். அஷ்டமச் சனி அஸ்தமானமாவதால் இவர்களது முன்னேற்றப் பாதையில் இனி எவ்விதமான இடையூறுகளையும் சொல்வதற்கில்லை. எவ்விதத் துறையிலும் வெகு துணிச்சலாகவே ஈடுபடும் மனப்பான்மை ஏற்பட்டுவிடும். 7-ஆம் வீட்டோன் அஸ்தமனமாவதால் மனைவியின் தேகாரோக்கியம் பெரிதும் பாதிக்கப்படுமென்றாலும், வக்ரகதியில் இருந்த புதன் அஸ்தமனமாவதில் நன்மையே தவிர, தீங்கொன்றும்ஏற்படாது. நண்பர்களின் கூட்டுறவில் கவனம் தேவை 19, 20, 21 இந்தத் தேதிகளில் வி. சங், ஒன்றுகூடி காணப்படுவது விசேஷமல்ல என்ற காரணத்தால் போதுமான பலன்கள் எழுதுவதற்கில்லை.

IV வாரம்

இராசிக்கதிபதி பலஹீனமாய்க் காணப்படுவதால் விசேஷ பலன்களை எதிர்பார்ப்பதற்கில்லை. என்றாலும் நெருக்கடியைச் சுதாரித்துக்கொள்ளும் சக்தியை மட்டும் இழக்கமாட்டீர்கள். யோககாரகராகிய குஜனுக்கு, சூ, சு, 6, 8 ஆக நவாம்சத்தில் சஞ்சரிப்பதால் பலவிதச் சிக்கல்களை ஏற்க நேரும். 26, 27, 28, சந்திராஷ்டம தினங்களானாலும் தூரத்துச் செய்திகளில் மன நிம்மதி ஏற்படக்கூடும்., ஒரு சிலருக்குத் திடீர் தனப்ராப்தம் கிடைக்கும், வாரக் கடைசியில், செய்தொழில் லாபம்,ப்ரயாணத்தில் வெற்றி, தைர்யம், முயற்சிகளில் பலிதம் உண்டாகும். மாணவ மாணவிகள் கல்வியில் தேர்ச்சிபெறுவார்கள். பொதுவாக. வீடு, நிலம், கார், கால் நடைகள், தொழில், சரீர சுகம், தாய், நண்பர்கள், கல்வி, சுற்றத்தார், ஆகியவற்றினால் ஏற்பட்ட கிலேசங்கள் அடியோடு மறைந்துவிடும். பூர்ண திருப்தி நிலவும்.

Edited & Published & by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Kumbakonam.

இந்த மாதிரி ஒரு நிலைமையில் . . .

சதுரங்கத்தில் மிக்க சுவாரஸ்யமான கட்டம் ராஜா மடக்கப்படுவதுதான் ; ஏனெனில். இச்சமயத்தில், ஒன்று, ராஜாவை அப்புறப்படுத்தவேண்டும், அல்லது காலாட்களைக்கொண்டு பாதுகாக்கவேண்டும்.

ஆட்ட நிபுணர் இப்போது தன் முழு சாமர்த்தியம், தீர்க்கதிருஷ்டி முதலியவற்றை உபயோகிக்கவேண்டும். இம் மாதிரி சந்தர்ப்பத்திற்கு ஒரு கோப்பை தேநீருக்குச் சமமானது எதுவும் இல்லை.

தேநீர்

புத்தி விறுவிறுப்புக்கு மிக்க சாதகமானது.

தேயிலை போர்டு வெளியிட்டது

PSTB 123

மணம் நிறைந்த வாழ்க்கை மனிதனின் குறிக்கோள்
குணம் நிறைந்த
டி.எஸ்.ஆர்
வாசனாதிகள்
மணம் கமழ்வைக்கும் கருவிகள்
அரைக்கீரைவிதை தைலம்
சந்தனாதி தைலம்
கோகுல் ஹேர் ஆயில்
கோகுல் மட்டிப்பால் வத்தி
கோகுல் மாலா வத்தி
GOKUL HAIR OIL
T.S.R
Use Our Speciality
Perfumers
G. Kunju
T.S.R & Co., Perfumers, KUMBAKONAM.